

www.tamilarangam.net

மே.16-மே.29, 1996
இதழ் 97
விலை 7.00

சரிநிகர்
'SARINIHAR'
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி



# இந்தியத் தேர்தல் அலைகள்



# ரிவிரசவின் பின்

## பீனிக்ஸ்

எவ் வகையிலும்
நீ முயன்ற போதிலும்
அழிவென்பதோ
எனக்கு இல்லை.

.....................................
நித்தம் நித்தம்
முள்முடி சூட்டியும் ஆணிகள் அடித்தும்
சிலுவையில் அறைகிறாய்...?

ஆணிகள் அடித்த சிலுவை தன்னிலும்
கவிழ்ந்து போகுமோ
என்சிரம் என்றும்?

என் முகம் சிதைத்து
என்குலம் அழிக்க
எரியும் நெருப்பாய் சூழும் போதெலாம்
புத்தொளி கொண்டு
பீனிக்ஸ் பறவையாய்
மீண்டும் மீண்டும் வானில் பறப்பேன்.

பி. புஷ்பராஜன்

(நன்றி: மரணத்துள் வாழ்வோம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மே 1இல் ந.ச.ச.கட்சி மீது தாக்குதல்

# தொழிலாளர் பட்டயம்?

தொழிலாளர் தினமான மே 1ல் நவசமசமாஜக்கட்சி நடாத்திய ஊர்வலம் பொலிஸ் அத்தியட்சகர் டி.எம்.ஒ.பி.திசாநாயக்க, சிரேஷ்ட அதிகாரி சோலிங்க ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினால் கலைக்கப்பட்டு கலந்து கொண்டோர் தாக்கப்பட்ட சம்பவம் அரசியல் வரலாற்றில் புதிதாகவே உள்ளது.

இத்தாக்குதலில் நவசமசமாஜக்கட்சியின் ஹோமாகம அமைப்பாளர் பேர்னார்ட் வெதசிங்க கையொன்று முறிந்த நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். தம்மிகா சேனரட்ன என்ற பெண் தலையில் 14 தையல் போடப்பட்டு வைத்தியசாலையில் இருக்கின்றார். குணசேன ஹெட்டியாராச்சி, ஜயந்தி, தெஞ்தெனிய, ஹர்சானி பெர்னாண்டோ, உப்பாலி, இந்ரசிறி, டெரன்ஸ் காமினி, பியதாச லியனகே, மற்றும் நோயல் பெரேரா ஆகியோர் படுகாயமுற்று சத்திரசிகிச்சைக்குள்ளாகினர். தொழிற்சங்கத் தலைவர்களான சரணபால, பலிஹேன, மாநகரசபை உறுப்பினர் பிரிட்டோ பெர்னாண்டோ மற்றும் சரணபால சில்வா ஆகியோர் கடும்தாக்குதலுக்கு உள்ளாகினர்.


இந்தச்சம்பவத்தின் அரசியல் பின்னணி பற்றி தற்போது கேள்வி பரவலாக எழுந்துள்ளதும் கவனிக்கத்தக்கதாகும்.

மேதின ஊர்வலங்களுக்கான தடை அவசரகாலச்சட்டத்தையும், புலிகளால் வீழ்த்தப்பட்ட அவ்றோ விமானச் சம்பவத்தையும் காரணம் காட்டி அமுல்படுத்தப்பட்டது. எனினும், இத்தடை ஒரு தலைப்பட்சமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசுடன்கூட்டுச் சேர்ந்துள்ள பங்காளிக் கட்சியின்பாராளுமன்ற அங்கத்தவர்களே தடையை மீறி ஊர்வலம் சென்றிருக்கின்றனர். இவர்களுக்கு எதிராக பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்காது பாதுகாப்பினையே வழங்கியுள்ளனர்.

புலிகள் தாக்கக்கூடும் என்றுகூறி ஊர்வலத்தை தடை செய்து கூட்டத்தை அனுமதித்தது மிகுந்த நகைப்புக்கிடமான ஒரு விடயம். புலிகள் கூட்டங்களை தாக்க மாட்டார்கள் என்று அரசு எப்படி எதிர்பார்த்ததோ தெரியவில்லை. எனினும், நீண்ட நாள் தருணம் பார்த்ததுபோல நவசமசமாஜக்கட்சி மீதிருந்த தன் அதிருப்தியை வன்முறையாக அரசு காட்டியது. இதற்கு ஊர்வலம் என்பது மட்டும் காரணமல்ல என்பது சாதாராண மக்களுக்குக்கூடப் புரிந்துவிடும்.

வடக்கின் இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்தும் அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராகவும், வட-கிழக்கு வாழ் தமிழ் - முஸ்லிம் மக்களின் சுயத்துவத்திற்கு குரல்கொடுத்துவந்த நவசமசமாஜக்கட்சி. அரசின் முதலாளித்துவசார் தனியார்மயப்படுத்தலுக்கும் ஏனைய இடதுசாரி சந்தர்ப்பவாதக்கட்சிகளின் ஒட்டுறவலுக்கும் எதிராகத் துணிந்து குரல் கொடுக்கிற கட்சியாகவே இது செயற்பட்டு வந்தது.

தமிழர் பிரச்சினை தொடர்பாக கதைத்து வருகிற ஒரு சிங்கள மொழிசார் கட்சி மீதே அரச பயங்கரவாதம் இவ்வாறு கட்டவிழ்த்து விடப்படுகிறதெனில், மற்றையதைச் சொல்லவேண்டியதில்லை. இந்தத் தாக்குதல் குறித்து நாடெங்கிலுமுள்ள பல குழுக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சுயாதீனப் பத்திரிகைகளும் குரல் கொடுத்துள்ளன. ''தொழிற்சங்க தலைவர்'' என வர்ணிக்கப்படும் அலவி மௌலானா விசாரணையொன்றைக் கோரியுள்ளார். எனினும் ஜனாதிபதி அது தொடர்பாக எழுத்து மூல முறைப்பாடொன்றைத் தருமாறு செயலாளரூடாக நவசமசமாஜக்கட்சியைக் கேட்டுள்ளார்.



அண்மையில் இடம் பெற்ற பங்காளிக் கட்சிகளும் பங்கேற்ற பொ.ஐ.மு. நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் மே தின நிகழ்வைக் கண்டித்து இன்னொரு பங்காளிக் கட்சியான ல.ச.ச.கட்சி பங்கேற்காது எதிர்ப்பையும் காட்டியுள்ளது விஷேசமாகக் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

தொழிலாளருக்கெதிரான அரச பயங்கரவாதக் கட்டவிழ்ப்பில் இவ்வரசாங்கம் முன்னணிவகிப்பதை அண்மைக்காலமாகக் நவசமசமாஜக்கட்சி அம்பலப்படுத்தி வந்தது. பியகம தொழிலாளர்கள் மீதான தாக்குதல் தென் பதுளைத் தோட்டப் பெண் தொழிலாளிகள் மீதான பொலிஸ் தாக்குதல், 'புளூடயமன்ட் தொழிலாளர் மீதான தாக்குதல் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நாமும் சளைத்தவர்கள் அல்ல என்பது போல் பங்காளிக் கட்சிகளும் தம் சண்டித்தனத்தைக் காட்டியுள்ளன. நானுஓயாவில் செல்லச்சாமியின் தேசிய தொழிலாளர் காங்கிரஸின் மே தின நிகழ்வு தொண்டமானின் குண்டர் படையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. அவ்வாறே மலையக மக்கள் முன்னணி தனது வரலாற்றுத் துரோகத்தைப் பகிரங்கப்படுத்திய தேசிய நாளிதழான வீரகேசரியை தலவாக்கலை வீதிகளில் கொளுத்தியிருக்கிறது.

வன்முறை என்பது ''எங்கே, எப்ப, எப்படி, யாரால்...'' வரும் என்பது சொல்ல முடியாது. அதிவிஷேசமாக இந்த நாட்டில்...!

## நீதித்துறை விசனம்!

எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை தொடர்பான விசாரணைக்குட்பட்டிருக்கும் இராணுவ வீரர்களுக்கு நடைமுறைகளுக்கு மாறாக அரசின் பணமும் விஷேட வரப்பிரசாதங்களும் செய்ப்பட்டுவருவதாக நீதித்துறை வட்டார விசனம் தெரிவித்துள்ளது.

எம்பிலிப்பிட்டி மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் தயாநந்த லொகுகலப்பதி அவரது மகன் சிரந்த சமிந்த கலப்பத்தி ஆகியோர் உட்பட பல இராணுவ உயர் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

வழக்கில் குற்றவாளியாக காணப்படும் அரச ஊழியர் வழக்கு முடியும் வரை பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்ற பொதுவான நடைமுறைக்குப் புறம்பாக இவ்வழக்கின் குற்றவாளிகளான இராணுவ உயர் அதிகாரிகள் பதவியுயர்வு வழங்கி கௌவிக்கப்பட்டுள்ளார்கள்.

அரச செலவில் வாகன வசதிகளும் இவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

நீதிவிசாரணையில் ஈடுபட்டிருப்பவர்கள் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு சென்றதன் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் அவர்களது சட்டதரணிகளுக்கும் உடவளவ இராணுவ முகாமில் விருந்துபசாரம் அரச செலவில் இடம் பெற்றுள்ளது.

இவ்வழக்கு விசாரணைகளின் ஆரம்பத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சார்பான இராணுவத்தினரின் ஒன்று கூடலும் தலையீடும் நீதிபதியினால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

*யுக்திய 960512*

## இராணுவ நிர்வாகமே தேவை

அரச அதிகாரிகள் மீது நம்பிக்கை இழந்த குடாநாட்டு மக்கள் தம் பிரதேசத்தின் இராணுவ நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துமாறு கோரியுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

அரசிடமும் புலிகளிடமும் சம்பளம் பெற்றுக்கொண்டு புலிகளுக்கு சார்பாகவே இவர்கள் நடந்து கொண்டுள்ளார்கள் என இவர்கள் பற்றி புகாரும் தெரிவிக்கப்படுன்றது.

தற்போது யாழ் குடாநாட்டில் பணியாற்றும் இராணுவ உயரதிகாரிகள் ஏனைய அரச அதிகாரிகளை விட மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருப்பதால் தாங்கள் முழு ஆதரவையும் அவர்களுக்கே வழங்க விருப்பமும் தெரிவித்திருக்கிறார்கள். சகஜ நிலைக்கு திரும்பும் இடங்களில் கொழும்பிலுள்ள வடபகுதி கட்சிகள் மீண்டும் அரசியலில் ஈடுபடுவதில் அம்மக்களுக்கு விருப்பமில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், இது அநாவசிய பிரச்சினைகளுக்கும் அழிவுகளுக்கும் இட்டுச்செல்ல வழிவகுக்கும் என மக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அரசியல் நடவடிக்கைகளைத் தேர்தலுக்கு மட்டுமாக வரையறுப்பது நல்லது எனவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

*திவயின 960512*

## ஷெல் நிறுவனமே வாங்குகிறது

காஸ் நிறுவனத்தை வாங்கிய ஷெல் நிறுவனம் எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் மேலதிக தயாரிப்பான எல்.பி காஸை விலைகொடுத்து பெற்றுக் கொள்ளாததனால் உற்பத்தி செய்யப்படும் காஸ் முழுவதும் எரிக்கப்படுகின்றதென பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அனில் ஒபேசேகர பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார். அதேவேளை ஜீ.எல். பீரிஸ் அவர்கள் கடந்த 7ம்திகதி பாராளுமன்றத்தில் காஸை ஷெல்நிறுவனம் விலைகொடுத்து வாங்குகின்றதெனக் கூறினார்.

எப்பொழுதிருந்து ஷெல் நிறுவனம் காஸை விலைகொடுத்து வாங்குகின்றதென்பதை அமைச்சர் குறிப்பிடத் தவறிவிட்டார்.

காஸ் வீணாக எரிக்கப்படும் செய்தியை நாடுமுழுவதும் பகிரங்கப்படுத்தியது கடந்த ஏப்.21ம்திகதி யுக்திய பத்திரிகையாகும்.

*யுக்திய 960512*

## ஒத்துழைக்காவிடில் கலைப்பு!

பொ.ஐ.ஐ.முவில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் 30 - 04 - 96 அன்று ஜனாதிபதி நடாத்திய பொ.ஜ.ஐ.மு.குழு கூட்டத்தில் அரசுடன் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒத்துப்போகாவிட்டால் ஆட்சியை கலைத்துவிடப்போவதாக தெரிவித்துள்ளார்.

கூட்டுச்சேர்ந்துள்ள கட்சிகள் சில அரசுக்கு உடன்பாடில்லாது செயற்படுவதாக குற்றம் சாட்டிய ஜனாதிபதி ஸ்ரீ.ல.சு.க. தனித்து போவதன் அவசியம் எழுந்துள்ளதாகத் தெரிவித்தார்.

ல.ச.ச.ம. கட்சி நான்கு தடவைகளுக்கு மேல் முறை தவறிநடந்திருக்கிறது. ஐ.ஐ.தே.முன்னணி தாம் நினைத்தபடி செயற்படுகிறது என்றெல்லாம் கூறிய ஜனாதிபதி ''கம்யூனிஸ்ட் கட்சிகளுடன சேர்ந்து அரசாங்கத்தை எவ்வாறு நடத்துவது'' எனப் பிரதமரும் கேட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ.ல.சு.கட்சி, இ.க.கட்சி, ஸ்ரீ.ம.கட்சி, ஸ்ரீ.ல.மு.கா.,ஜ.ஐ.தே.மு.,தே.வி.ம.மு. போன்ற கட்சிகள் இதில் கலந்து கொண்டன என்பதும் ல.ச.ச.ம.கட்சி மேதின ஊர்வல தாக்குதலைக்கண்டித்து இதில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவசரகாலச்சட்ட நீடிப்பை எதிர்த்து ல.ச.ச.ம.கட்சி எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. இதேவேளை அதன் குற்றச்சாட்டுக்கு எழுத்து மூல விளக்கத்தையும் அரசு கோரியுள்ளது.

*சண்டே லீடர் 050596*

## I.T.N விற்பனைக்கு!

விற்பனை செய்வதற்கு தயாராக இருக்கும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்யுமாறு அரச மதிப்பீட்டு திணைக்களம் அறிவித்தல் கொடுத்துள்ளது.

அதன் பெறுமதி கிடைக்கப் பெற்றவுடன் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தை விற்பனைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் நூற்றுக்கு நூறு வீதம் அரசுக்கு சொந்தமான நிறுவனமாகும்.

*யுக்திய 960512*

## கடிதத்திற்குப் பதிலில்லை!

காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசு மீது பொலிஸ் அதிகாரிகள் 172பேரையும் இராணு அதிகாரிகள் 200 பேரையும் இடமாற்றம் செய்யுமாறு தெரிவித்து ஜனாதிபதியால் 1996 ஜன.11ம்திகதியிடப்பட்டு இராணுவத்தளபதிக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களுக்கு இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லையென ஜனாதிபதி செயலக் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தனது கடிதத்திற்கு பதில் நடவடிக்கையாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒரு மாதகாலத்தினுள் அறிவிக்கப்பட வேண்டுமெனவும் அக்கடிதத்தின் மூலம் கோரப்பட்டிருந்தது.

பதில் கடிதம் அனுப்பாதது பற்றி ஜனாதிபதி செயலகம் எவ்வித நடவடிக்கையும் எடுத்தாக அறியக் கிடைக்கவில்லை.

*யுக்திய 960505*

## பிரிகேடியர் ராஜினாமா!

சிரேஷ்டத்துவத்தை கருத்திலெடுக்காது கீழ் மட்டத்திலிருந்த பிரிகேடியர் சிலருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ள சம்பவம் இராணுவத்தில் சில பிரிவுகளில் கடும் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது எனத் தெரியவருகிறது. இச்சம்பவத்தினை அடியொற்றி பிரிகேடியர் தேவிந்த களுபான தனது ராஜினாமாவுக்கான ஆவணங்களை கையளித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. பிரிகேடியர் பல்கல்லவும் இவ்வாறு ஆவணங்களை வழங்கியுள்ளவர்களுள் ஒருவராவார்.

*ரிவய 960505*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**"அரசியல் தீர்வொன்று எல்லா யுத்தவடுக்களையும் கசப்பான அனுபவங்களையும் மறக்கவைத்துவிடும். ஆனால் அரசியல் தீர்வு இல்லாதபோது எந்த நல்லெண்ண உதவி நடவடிக்கைகளும் நீண்ட நாட்களுக்கு நல்லுறவைப் பேண உதவப்போவதில்லை"**

# யாழ்ப்பாணம் : ரிவிரச 2இன் பின்

ரிவிரச - 2 நடவடிக்கையின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தது சிலருக்கு அதிருப்தியை தோற்றுவித்திருப்பதாகத் தெரிகிறது. யுத்தம் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் குறித்து தீவிரமான கவனம் செலுத்துகிற பலரும் அங்குள்ள அழிவுகள், மக்கள் திரும்பி வலிகாமம் சென்றுள்ளமை, உணவுத் தட்டுப்பாடு, புதுவாழ்க்கைக்கு தயாராகும் மக்களின் நம்பிக்கை, அரச படையினர் அவர்கள் மீது காட்டும் பரிவு என்பன குறித்தும் புனர் நிர்மாணப் பணியின் அவசியம் குறித்துமே எழுதிவருகின்றன.
இத்தகைய ஒரு நிலையில் அவற்றையெல்லாம் விட அரசியல் ரீதியான புலி - அரசு - மக்கள் குறித்த ஒரு கருத்துரை இப்பத்திக்கு முக்கியமாகிப்போனது ஏன் என்பது இந்த அதிருப்திக்கு காரணமாக இருக்கலாம். அரச படைகள் குடாநாட்டை வெற்றி கொண்டது, வடக்கு மக்களின் விடுதலைக்கான ஒரு தொடக்கம் என்று இப்பத்தி கூறவில்லை என்பதே இதன் சாரமாகும்.
இந்த அதிருப்தியின் பின்னணியில் பலமான ஒரு அரசியல் சார்பு நிலை இருக்கிறது. அதாவது இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசால் முன்மொழியப் பட்டுள்ள தீர்வுப்பொதி நடைமுறைக்கு வருவது அவசியம், அதற்கு இந்த யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்படுவதும் அரசதரப்பினர் வெற்றிபெறுவதும் அவசியம் என்பதே அந்தச் சார்பு நிலை. ஆனால், இந்தப் பத்தி இதற்கு நேரெதிரான அபிப்பிராயத்தையே வெளிப்படுத்தியிருந்தது. அதாவது சமாதானத்திற்கான எல்லா வாய்ப்புக்களையும் யுத்தம் நசுக்கிவிடும் என்பதே இதன் சாரமாக இருந்தது.
ஆக, இந்த அதிருப்தியை விளங்கிக் கொள்வது ஒன்றும் கடினமானதல்ல. ஆனால், இங்குள்ள முக்கியமான விடயம் என்னவென்றால், இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், அது யுத்தமூலம் அல்ல. அரசியல் ரீதியாகவே காணப்பட வேண்டும் என்று கருதுகின்ற பலரிடம் கூட இன்றைய யுத்தத்தை ஏற்றுக்கொள்ளமுடிகிறது என்பதுதான். ஒரு கால் இந்த யுத்தத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட அதை நிறுத்துவதையோ அல்லது நிறுத்துமாறு கோருவதையோ ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதற்குப் பிரதானமாக அவர்கள் கூறும் காரணம் இவ்வாறு கோருவது புலிகளுக்கு வாய்ப்பளிப்பதாக அமைந்துவிடும் என்பதாகும்.
இந்த விவாதம் ஒன்றும் புதிய விவாதம் அல்ல. புலிகள் முற்றாக அழித்தொழிக்கப் பட்டுவிடவேண்டும். என்று விரும்புபவர்கள் இவ்வாறான ஒரு அபிப்பிராயத்தையே தெரிவித்து வருகிறார்கள். ஆனால், யுத்தம் மக்களை சொல்லொணா அனர்த்தங்களுக்குள் தள்ளிவிடுகிறது என்று கருதி அதைக்கோட்பாடு ரீதியில் எதிர்ப்பவர்கள் கூட இந்த முடிவுக்கே வருகின்றார்கள். இது இவர்களது முதன்மைத் தெரிவு மனிதாபிமான அடிப்படையிலானதல்ல, அரசியல் ரீதியிலானது என்பதையே காட்டுகிறது.
அந்த வகையில் அரசியல் முரண்பாடுகள் நிலவும் வரையில், யுத்தம் மூள்வதற்கான ஒரு எரிபற்று நிலை நிலவும் வரை மனிதாபிமானம் பற்றிய பேச்சுக்கள் நடைமுறை யதார்த்தத்தை இழந்து போகின்றன என்பதை இவர்களும் கோட்பாட்டு ரீதியாலாவது ஏற்றுக் கொள்கிறார்கள் என்றே கொள்ள



வேண்டும்.
இதுதான் தர்க்கம் என்றால் எந்த அரசியலை இவர்கள் தமது அரசியலாக வகித்துக்கொண்டுள்ளார்கள் என்ற கேள்வி எழுகிறது.
இந்தக் கேள்வி இன்று பொ.ஐ.முன்னணி என்ற மாயமானை முற்போக்கு அரசாக நம்பி அதற்குப் பின்னணியாக நின்றுகொண்டிருக்கும் அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் நோக்கி எழுப்பப்படவேண்டிய ஒரு கேள்வியாக உள்ளது.
போகட்டும், நாம் யாழ் நிலைமை பற்றிய விடயங்களுக்கு வருவோம். குடாநாட்டில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு போய் வந்த பத்திரிகையாளர்களும் அங்கிருந்து வந்த ஒரு சில கடிதங்களும் தரும் செய்திகளின்படி வலிகாமத்திற்கு மக்கள் தமது வீடுகளை நோக்கி ஆர்வத்துடன் சென்று கொண்டிருக்கிறார்கள்.
பெரும்பாலான பகுதிகளில் (தட்டாதெருச் சந்தியில் இருந்து பார்த்தால் கோம்பயன் மயானம் தெரிகிறது என்கிறது அங்கிருந்து வந்த கடிதம் ஒன்று!) வீடுகள் ஷெல் அடிகளால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. யாழ் நகரை அண்டிய பகுதிகளில் கிட்டத்தட்ட 80 வீதமான வீடுகள் கட்டிடங்கள் சேதமுற்று இருக்கலாம் என நம்பகமான தகவல் ஒன்று கூறுகிறது. திரும்பிச் செல்லும் மக்களிடையே யுத்தம் தொடங்கிவிட்டது, இராணுவம் வருகிறது உடனே புறப்படுங்கள் என்ற புலிகளின் அறிவிப்பைத் தொடர்ந்து, திடீரென விட்டுவிட்டு ஓடிவந்த வீடுவாசல்களைப் பார்க்கும் ஆர்வம், அகதிவாழ்க்கை தந்த துயரம் நிறைந்த அவலங்களால்ஏற்பட்ட விரக்தி என்பன காரணமாக வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்ற தவிப்பு என்பவற்றைக் காணக் கூடியதாக உள்ளது என்கிறார் ஒரு பத்திரிகையாளர். இராணுவத்தின் மீது நம்பிக்கை வைத்து மக்கள் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பது கொஞ்சம் அவசரத்தனமான ஒரு மதிப்பீடு என்பது அவரது அபிப்பிராயம். திரும்பிச் செல்லும் மக்களிடையே புலிகளது ஊடுருவல்களும் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பல இளம் பெண்களும் ஆண்களும் கைது செய்யப்பட்டு வருவதாகவும் அவர்களில் சிலர் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாவும் ஒருசில தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதே வேளை இங்கு வந்துள்ள மக்கள் மத்தியில் உணவு விநியோகம் போன்றவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இருக்கின்றன என்றும், வண்டிகளில் வரும் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள மக்கள் இடிபடும் காட்சி மிகவும் கவலைக்குரியதொன்று என்றும் கூறுகிறார் அங்கு சென்று வந்த இன்னுமொருவர்.
எப்படியோ, வலிகாமத்திலிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் அங்கு போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்ட பின், அதாவது கிளாலி இறங்குதுறை கைப்பற்றப்பட்டு தென்மராட்சிக்கு இராணுவம் நகரத் தொடங்கியபின் அவர்கள் வலிகாமம் நோக்கிச் செல்வது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. ரிவிரச -1 நடவடிக்கையின் போது வலிகாமத்திலிருந்து தாம் பின்வாங்குவது உறுதி என்றும், அங்கு ஒரு பலத்த யுத்தம் நடக்கப் போவதாகவும் அறிவித்து மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு புலிகள் கூறியிருந்தனர். இந்த நிலையில் அங்கிருந்து வெளியேறுவதைத் தவிர பாதுகாப்பான வேறு வழி அம்மக்களுக்கு இருக்கவில்லை. ஆனால், இந்த வெளியேற்றத்தை மக்கள் தம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையால் செய்த வெளியேற்றம் என்று அப்போது புலிகள் தெரிவித்திருந்தார்கள். இதை முற்றுமுழுக்க சரியான ஒரு மதிப்பீடாகக் கொள்ள முடியாது. புலிகள் மீதான மக்களது அபிமானத்திற்கும் அப்பால் இலங்கை இராணுவம், யுத்தம் என்பன குறித்த அச்சமும் அவர்களது வெளயேற்றத்திற்கு முக்கிய காரணங்களாகும். அவ்வாறேதோன் இப்போது ரிவிரச - 2 ன் போது அவர்கள் திரும்பிப் போவதை வைத்து ''புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் '' என்றோ அல்லது இலங்கை அரச படைகள் மீது அவர்களுக்கு அபிமானம் வந்துவிட்டது என்றோ கூற முடியாது. மக்கள் தமக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பான, வசதியான பிரதேசத்தை நோக்கி இத்தகைய யுத்த சூழலில் நகர்வது ஒன்றும் புதுமையான விடயமல்ல. அரசியல் இலாபங்கட்கு மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தும் இந்தப் போக்கு மிகவும் விரைவிலேயே அம்பலமாகிப் போய்விடும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இன்று அகதிவாழ்வுக்கு தள்ளப்பட்ட மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வதிவிடப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. தம்மை மீள வாழத் தயாராக்கிக்கொள்ள இவை அவசியமாகும். இதன் காரணமாக அவர்களது அரசியல் தேவைகள் தற்காலிகமாக பின தள்ளப்பட்டுள்ளன. ஆனால், அவை விரைவிலேயே பிரதான பிரச்சினைகளாக உருவெடுக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. அப்போதுதான் மக்கள் எந்த நிலையில் உள்ளார்கள் என்பது தெரியவரும்.
உணவு விநியோகம், நிவாரணம் வழங்கல் போன்ற விடயங்கள் தற்காலிகமான நல்லுறவுகளை மட்டுமே ஏற்படுத்தமுடியும். இவ்வாறான ஒரு நல்லுறவுதான் பேச்சுவார்த்தைக் காலத்தின்போது தாண்டிக்குளத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்களை அனுப்பிய போதும் ஏற்பட்டது. அங்குள்ள மக்களுக்கு இவ்வாறான உதவிகளை செய்கின்ற ஒவ்வொரு தடவையும் அந்த மக்களுக்கு தாம் சலுகைகளை வழங்குவதாக இந்த அரசாங்கம் கருதத் தொடங்கியது. தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லும்படி அனுமதிப்பது ஒன்றும் சலுகையல்ல. உண்மையில் அதுவொரு அரசாங்கத்தின் கடமையும் கூட. இன்னொரு விதத்தில் அங்குள்ள மக்களின் உரிமையும் கூட அது. ஆனாலும் அவை செய்யப்படுகின்ற வேளைகளில் அந்த மக்களுக்கும் அரசிற்கும் இடையில் நல்லுறவு நிலவவே செய்யும். ஆனால், இந்த நல்லுறவு நிரந்தரமாகுவது நிரந்தரமான நல்லுறவை பேணக்கூடிய அரசியல் ரீதியிலான தீர்வு ஒன்றில்தான் தங்கியுள்ளது. இதை இப்போது ரிவிரச -2இன் பின் வலிகாமத்தில் புனருத்தாரண வேலைகளைத் தொடங்கப் போவதாக அறிவித்துள்ள அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும்.
அரசியல் தீர்வொன்று எல்லா யுத்தவடுக்களையும் கசப்பான அனுபவங்களையும் மறக்கவைத்துவிடும். ஆனால் அரசியல் தீர்வு இல்லாதபோது எந்த நல்லெண்ண உதவி நடவடிக்கைகளும் நீண்ட நாட்களுக்கு நல்லுறவைப் பேண உதவப்போவதில்லை.
ஒப்பரேஷன் லிபரேசனின் போதும் கூட இத்தகைய நல்லெண்ண நடவடிக்கையையே லலித் அத்துலத் முதலி செய்தார். ஆனால், அவையொன்றும் நீண்ட நாள் நீடித்திருக்கவில்லை என்பது வரலாறு.
இந்த வரலாற்றை எவ்வளவோ தடவைகள் திருப்பிச் சொல்லியாயிற்று.
சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளப் போவது எப்போ?


[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அஷ்ரப்பின் கிழக்கு ராஜா எண்ணம் எப்படித் தவறானது?





''பிரபாகரனின் தனி ஆதிக்கத்தினால் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை எதிர்த்து பெரும்பான்மையான தமிழர்கள் கண்டனம் செய்யும் போது அஷ்ரஃபின் தனி ஆதிக்கத்தினால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக உரத்துப் பேசுவதில் தவறில்லை.''

இது சரிநிகர் இதழ் 94இல் (ஏப்ரல், 04-17,1996) வெளியான அபூநிதால் என்பவரால் எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றிலுள்ள குறிப்பாகும். ஒரு மனிதாபிமான கலைஞன் என்ற வகையில் இது தொடர்பாக எனது அபிப்பிராயத்தை தெரியப்படுத்த வேண்டிய கடமைப்பாடுள்ளது.

முதலில், அஷ்ரஃப் - பிரபாகரன் இருவரையும் கட்டுரையாளர் ஒரே நோக்குடன் பார்ப்பது தவறு. ஒருவர் ஜனநாயக வழியானது பிரச்சினைக்குத் தீர்வாகாது என்ற நோக்கில் பொதுவாக மக்கள் கஷ்டங்களையும், சிரமங்களையும் நிகழ்காலத்தில் கருத்திற்கொள்ளாது தமது போராட்டப் பயணத்தின் பாதையிலேயே கவனமாக இருப்பவர். அது தனி வழி. அஷ்ரஃப் அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சமூகத்தின் பொறுப்புவாய்ந்த தலைமைத்துவத்தை (கட்டுரையாளர் விரும்புகிறாரோ இல்லையோ கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பரவலாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்) ஏற்றிருப்பவர். அது ஜனநாய வழி. சூழ்நிலைமைகளைக் கருத்திற் கொள்ளாது தமது சமூகத்தின் தனித்துவத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக எல்லாவகையிலும் சக்தி பெற்ற பெரும்பான்மையின அரசியல் தலைமைத்துவங்களை விரோதித்து அல்லது ஒதுக்கி தமது அரசியல் பயணத்தை தொடர்வதென்பது யதார்த்த நிலைக்குப் பொருத்தப்பாடாக இல்லை.

கட்டுரையாளரின் கருத்துப்படி, தமிழ் மக்களுடைய தாயகத்திற்காக விட்டுக்கொடுக்காமல் போராடுவதனால் புலிகளையும் - பிரபாகரனையும் தவிர்க்க முடியாமல் தமிழர்கள் தங்களுடைய பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதானது ஜனநாயக ரீதியிலான ஒரு பக்க உண்மையே. கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வடக்கு மாகாண மொத்த வாக்காளர்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளிலிருந்து தெரிவாக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளே ஆதாரம். அதே ஜனநாயக ரீதியிலாக எமது பார்வைகளை விரிவாக்கும் போது அஷ்ரஃப் அவர்களின் மனதில் தோன்றியிருக்கும் (கட்டுரையாளர் கருத்து) 'கிழக்கு ராஜா' எண்ணம் எப்படி பிழையாக முடியும்...?

கடந்த பொதுத்தேர்தலின் போது கிழக்கு மாகாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தமதாக்கிக் கொண்ட கட்சிகள் பெற்ற வாக்குகள் தொடர்பான அட்டவணை:-

| கட்சிகள் | அம்பாறை | மட்டக்களப்பு | திருமலை | மொத்தம் | வீதம் |
|---|---|---|---|---|---|
| ஐ.தே.க | 78,767 | 23,244 | 34,986 | 136997 | 28.96 |
| ஸ்ரீ.ல.மு.க | 75,092 | 31,072 | 26,903 | 133067 | 28.12 |
| த.வி.கூ. | --- | 76,516 | 28,380 | 104896 | 22.16 |
| பொ.ஐ.மு | 54,150 | 19,278 | 23,866 | 98294 | 20.76 |
| | 208009 | 150110 | 114135 | 473254 | 100.00 |

ஐக்கிய தேசியக் கட்சியினைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்தில் அது பெற்ற வாக்குகளில் சுமாராக 40,000 வாக்குகள் தமிழ், முஸ்லிம் மக்களுடையதாகும். இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் என்ற கணிப்பில் நோக்கும் போது, ஐ.தே. கட்சியின் வீதாசாரம் 19.51ஆக குறைகிறது. இப்புள்ளி விபரங்களைக் கவனத்தில் கொண்டுபார்க்கும் போது தமது இனத்தின் வாக்குகளை அதிகமாகப் பெற்றுக்கொண்ட கட்சியில் முதலிடத்தை ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். எனவே அக்கட்சியின் தேசியத் தலைவரான எம். எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் தன்னை 'கிழக்கின் ராஜா' என்று சொல்லிக் கொள்வதில் கூட தவறில்லை.

அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதியையும் பெற்றுக்கொள்ளாத வேளையில் ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் அவர்கள் 'நான்தான் ராஜா' என்று கூறுவைப்பதில், ஆண்டாண்டு காலமாக அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழர்களின் நிலைமை அந்த ராஜாவின் கீழ் வரப்போவதில் அந்தத் தமிழர்களுக்கு அசம்பாவிதம் ஏதும் நிகழ்ந்து விடாது என்பது நிச்சயம். அப்பிராந்தியத் தமிழர்கள் ஏற்கெனவே பலதையும் இழந்த நிலைமையில் அமைச்சர் அஷ்ரஃபின் ஆதரவுடன் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடுவதைக் காணலாம். கட்டுரையாளர் குறிப்பிட்டது போன்று, தமிழர்களின் பிரதிநிதியான பிரபாகரன் அவர்களின் தலைமையின் கீழ் கடந்த காலத்தைப் போன்று எதிர்காலத்திலும் (இடையில் சிறு சறுக்கல் அவ்வளவுதான்) பிற இனத்தவர்கள் வாழ முடியுமென்றால் ஏன் கிழக்கு மாகாண ராஜாவின் கீழ் மாற்று இனத்தவர்கள் வாழ முடியாது?

'வடக்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வாறான தென் கிழக்கு மாகாண அரசியல் அலகு தொடர்பான ஒரு கோரிக்கையினையும் நாம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளோம். இன்ஷா அல்லாஹ்! அது வெற்றியளிக்கும் பட்சத்தில் எமது வரலாற்றில் (இஸ்லாமிய வரலாறு) எவ்வாறு பிற இனத்தவர்கள் மதிக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டார்களோ அதே வகையில் அமைந்ததொரு நல்லாட்சியினை உலகிற்குக் காண்பிப்போம்.'


இக்கூற்றானது மார்ச் 9ம் திகதி கொழும்பு 'சவ்சிறிபாய'வில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீ.ல.மு.கா கட்சியின் தேசியத் தலைவர் அவர்களினால் கூறப்பட்டதாகும். அம்பாறை மாவட்டத்தில் மீளக்குடியேற்றத்தின் கீழ் அழிக்கப்பட்ட பல தமிழ் கிராமங்கள் புனர் நிர்மானம் செய்யப்பட்டு வருவதையும், அதிகமாக தமிழர்களின் தேவைகளையும் குறைநிறைகளையும் அறிந்து செயற்படுவதனென ஸ்ரீ.ல.மு.கா. கட்சியின் மற்றைய பாராளுமன்ற உறுப்பினரான முகைதீன் அவர்கள் தீவிரமாகச் செயற்படுவதையும் யாரும் மறுப்பதற்கில்லை.

எமது கண்ணோட்டங்களை அரசியல் ரீதியாக நோக்கும் போது ஒரு குழுவினர் அல்லது தனி இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் வெற்றியடைந்தால் மற்றைய இனத்தவர்கள் குறிப்பிட்ட காலம் வரும் வரைக்கும் வெற்றி பெற்றவர்களை அனுசரித்து வாழ்வதென்பது வழமை நிலை. அந்த வகையிலும் கிழக்கு மாகாணத்தின் ராஜாவிடமிருந்து தேவைகளையும் உதவிகளையும் பெற்று தமது இனத்தின் சமூகநல விருத்திகளைக் கருத்திற் கொண்டு தமிழர்கள் வாழ்ந்ததில் அல்லது வாழப்போவதில் ஏது வியப்பு...?

ஒரு சமூக சேவையாளன் என்ற வகையில் மனிதாபிமான அடிப்படையில் எனது கருத்தை வலியுறுத்த வேண்டியுள்ளது. பொதுவாக மனிதர்கள் தவறு செய்யக்கூடியவர்களே. தனிமனிதத் தவறுகளை கண்டு ஆரோக்கியமான மாற்றுக் கருத்துக்களைச் சொல்பவரே உயர்வானவர். இன்றைய நாட்டின் சூழ்நிலைமைக்கேற்ப அரசியல் இலாபங்களைக் கருத்திற்கொண்டாவது சில வேளைகளில் தலைமைக்கும் தெரியாமல் தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். ஆனால் அதைப் பகிரங்கப்படுத்தி திரிபுபடுத்தி விரிவான பார்வை நோக்கற்ற அவசரக்காரர்களின் செய்கைக்கு இடம் கொடுப்பதிலும் பார்க்க இன்று தழைத்துக்கொண்டு வரும் இன உறவுக்குத் துணை நிற்பதனால் மக்கள் மனதில் பதிந்திருக்கும் ஆறாத இரத்த வடுக்கள் குறைய அல்லது அகல நாம் மருந்தாகச் செயற்படுவது மேலானது. அது இன்றைய காலத்தின் கட்டாயக் கடமை.

''நல்ல காரியம் என்ற நோக்கில் நாம் செய்யும் செயலானது இரு சமூகத்தினரிடையே விரோதமான பிரிவுகளையேற்படுத்தும் என்றிருந்தால் அதைச் செய்யாதிருப்பதே மேலானது''

**அ.மு.அனஸ்**
**திருகோணமலை.**



# சொல்லாயோ வாய்திறந்து...

இலங்கையில் காலத்துக்குக் காலம் ஆட்சி பீடமேறிய பேரினவாதக் கட்சிகளினாலும், சிங்களமயப் படுத்தப்பட்ட அரசியலினாலும் தமது உரிமைகளையும், அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்றிக்கொள்ளவும், பெறவும் முடியும் எனப் பல கனவுகளைக் கண்ட பல்லாயிரக்கணக்கான இரவு பகல்கள், ஏமாற்றப்பட்ட வடகிழக்கில் சிறுபான்மை இனமாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் அதனை மீட்டெடுக்க வெவ்வேறு மாற்றுவழிகளைத் தேடிச் சென்றனர்.

தமிழ் மக்களில் ஒரு சில குழுவினர் தமது உரிமைகளைப் போராட்ட ரீதியாகவே பெறமுடியுமெனத் திடசங்கற்பம் பூண்டு ஆயுத ரீதியான போராட்டத்தை ஆரம்பித்தனர். அதன் ஆரம்பமே அன்று வட்டுக்கோட்டை மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ் ஈழத் தாயகக்கோரிக்கையான தனிநாட்டு கோரிக்கை - அதனுடைய நடவடிக்கைகளின் நடுப்பகுதி தற்பொழுது இடம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆனால், இலங்கையில் குறிப்பாக வடக்கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களைப் பொருத்தமட்டில் பேரினவாதக் கட்சிகளின் அரசாங்கங்களின் ஒட்டுண்ணிகளாக இருந்ததுடன் தாமே இலங்கை முஸ்லிம்களின் தலைவர்கள் என தம்பட்டம் அடித்த பேரவலின தலைமைகளை நம்பியிருந்த முஸ்லிம் மக்களுக்கு அவர்களால் எதனையும் பெற்றுக் கொடுக்கமுடியவில்லை. தமது பதவிகளைத் துறந்து சமூகத்திற்காகப் போராட முன்வரவும் இல்லை. ஏதோ போட்டதை எடுத்துக் கொடுக்கும் தரகர்களாகவே அவர்கள் செயற்பட்டனர்.

இக்கால சூழ்நிலையில் வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தினையும் கலை கலாசாரவிழுமியங்களினையும் பேணிப்பாதுகாப்பதற்காக முஸ்லிம்களுக்காகத் தனித்துவமான அரசியல் நிறுவனமொன்றின் தேவை வடகிழக்கு முஸ்லிம்களால் உணரப்பட்டபோது அன்றிலிருந்து எமது ஏகமனதான அரசியல் பிரதிநிதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என அதனை நேசித்த, நம்பிய ஒவ்வொரு முஸ்லிமும் தனது அடிமனதில் அதன் மீதான நம்பிக்கைக்கு முதலிடம் கொடுத்தனர். ஆனால், இன்று அதற்கு நேர்மாறான சம்பவம் நடப்பதையிட்டு அதன் நேசகர்களின் அடிமனதில் புரையோடிப் போயுள்ள நம்பிக்கைக் கீற்றில் கீறல்கள் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. அன்று, தலைவர் அவர்கள் பள்ளிவாசல்களிலும், மேடைகளிலும் வடித்த கண்ணீர், முதலைக் கண்ணீராக இருக்குமோ எனவும் சந்தேகிக்கின்றனர்.

கடந்த 40 ஆண்டுகளாக இலங்கை முஸ்லிம்கள் பேரினவாத கட்சிகளின் அடக்குமுறைக்கு உட்பட்டு அரசியல் ரீதியாக தனது தனித்துவத்தை இழந்துள்ளனர். அவைகளை நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மூலமே மீட்டெடுக்க முடியும் எனக்கூறிய அஷ்ரஃப் அவர்கள் தமது கட்சியின் தனித்துவமும் கலாசாரமும் அழிகின்றபோது விழிப்புறவில்லை. அஷ்ரஃப் சந்திரிகா ஒப்பந்தத்தின் மூலம் முஸ்லிம்களின் ஏகமனதான சில அரசியல் அபிலாஷைகளும் கோரிக்கைகளுமே முன்வைக்கப் பட்டுள்ளதே தவிர முஸ்லிம்களின் முழுமையான தனித்துவம் காக்கப்பட்டுள்ளதாக தலைமைத்துவம் கருதக்கூடாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி தலைவரின் அபிலாஷைகளை மட்டும் பிரதிபலிப்பதற்காக அமைக்கப்பட்ட கட்சியென பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவம் நினைத்தால் அது தனது எதேச்சதிகாரப் போக்கினால் அதனது கூறிய சிந்தனையில் சிறு கீறல்கள் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.

கட்சியின் உயர் பீடத்தில் இருக்கும் உறுப்பினர்களின் கருத்தையோ மறுபுறம் அதன் உறுப்பினர்களின் கருத்தையோ உதாசீனம் செய்து தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இழைக்கப்படும் அநீதியாகும்.

சென்ற அரசாங்கத்தில் இருந்த பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் தமது சொந்த வேலைகளைக் கவனிப்பதற்காகவும், மரணத்துக்குப் பயந்தும் தலைநகரில் சகவாசம் கொண்டிருந்தனர். அவர்கள் வாக்குகளைப் பெற்ற பின் தலைமறைவாகி விடுவார்கள் எனப் பல மேடைகளிலும் அஷ்ரஃபால் கூறப்பட்டு வந்தது. அன்று அவ்வாறு கூறிய கௌரவ தலைவர் இன்று கடைப்பிடிக்கும் பாணி எவ்வகையானது? தேர்தல் காலங்களில் கையுடன் எடுத்துச் சென்ற கடன் சீலைதான் எங்கே?

தமது தீரவிப்போராளிகளின் மௌத்து வீடுகளுக்குத்தான் வராமல் அவற்றினை உதாசீனம் செய்யும் உண்மைதான் என்ன?

இரவு பகலாகக் கஷ்டப்பட்டு உழைத்து கட்சியின் வளர்ச்சிக்காகப் பணம் கொடுத்து போஸ்டர்கள் ஒட்டிய கட்சியின் போராளிகளின் கஷ்ட நஷ்டங்களைக் கேட்டறியக்கூட வரமுடியாமல் முன்னைய அரசியல்வாதிகளின் வேசத்தினைத் தானும் போட்டதன் விந்தை என்ன?

இறுதியில் தான் வரமுடியாமைக்கான காரணத்தினை தன்னை வளர்த்துவிட்ட தாயக மக்களுக்கே பத்திரிகை மூலம் வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு போன்று காரணங்களைக் கூறியிருக்கிறார். ஆனால், அன்று வேட்பாளர் மனு தாக்கல் செய்கின்றபோது சொந்த இடத்தில் இருந்து கச்சேரிவரைக்கும் பாதுகாப்பினை வழங்கிய மனிதாபிமான மிக்க சகோதரர்கள் இன்னும் தயாரான நிலையில் உள்ளனர். ஏன் அன்று அவர்களின் பாதுகாப்புத் தேவைப்பட்டது. இன்று மந்திய அரசின் பாதுகாப்பில் அதிக நம்பிக்கையோ? பரவாயில்லை. ரசிகர்களுக்கேற்ற நாடகம் மேடையேறுகிறது மேலும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பலரது உயிர்த்தியாகத்தினாலும், இரத்தத் துளிகளினாலும் வியர்வைச் சிதறல்களினாலும் உருவாக்கப்பட்டதாகும். மதிப்பிற்குரிய தலைவர் அவர்களின் எதேச்சதிகாரமான ஒருதலைப்பட்சமான முடிவினாலும் பேச்சினாலும் அது அழிந்து போக அக்கட்சியின் எந்த ஒரு அபிமானியும் இடமளிக்கமாட்டான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**எம்.ஐ.எம் சாதாத்.**

www.tamilarangam.net



# இந்தியத் தேர்தல் முடிவு: இலங்கையில் எழுப்புகிற அலை!

கீர்த்தி

இந்திய மத்திய, தமிழகத்தேர்தல் முடிவுகளை இலங்கையில் அரசியல் அக்கறையுள்ள தமிழர் பலர் மிகுந்த அக்கறையுடன் நோக்கியுள்ளனர். இந்தியாவிலும், தமிழகத்திலும் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் எந்தளவிற்கு இலங்கைத்தமிழர் பிரச்சினையின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே பலரது மனதில் தோன்றியுள்ள கேள்வி. அரசதரப்பிலும், சிங்கள தேசியவாதிகள் தரப்பிலும் கூட பல எதிர்பார்ப்புக்களையும், எதிர்வுகூறல்களையும் கடந்த சில நாட்களாக அவதானிக்க முடிகிறது.

முதலில் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைச் சற்றுப் பார்ப்போம். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் புலிகளுக்கு எதிராக நடைபெறும் யுத்தத்தில் இந்திய மத்திய அரசு தம்பக்கமே மிகவும் சார்ந்துள்ளது. அத்துடன் புலிகளின் ஆயுதக்கப்பல்களை தாக்கியழிப்பது போன்ற விடயங்களில் தங்கள் சார்பில் மிக வேகமாக செயற்படுகிறது என்ற எண்ணம் அவர்கள் மனதில் கடந்த இரு வருடங்களாக நன்றாகவே பதிந்துள்ளது. இந்த வகையில் எந்த கட்சி இந்திய மத்திய அரசில் அதிகாரத்திற்கு வந்தாலும் புலிகளுக்கு எதிரான போக்கையே கடைப்பிடிக்கும் என்பது அவர்களது நம்பிக்கை.

ஆனால், அண்மைக்காலமாக இந்து அடிப்படைவாதத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் பாரதீய ஜனதாக் கட்சி அதன் கூட்டுக்கட்சிகளின் நெருக்குதல்காரணமாக புலிகளின் பக்கம் சாய்ந்திட வாய்ப்புண்டு என்னும் ஒரு சஞ்சலம் சில தென்னிலங்கை அரசியல் ஆய்வு வட்டாரங்களில் தோன்றிற்று. அது இன்னும் மறைந்தபாடில்லை.

இந்த எண்ணம் அடிமனதிற் சங்கடப்படுத்துவதாலோ என்னவோ தேர்தல் முடிவுகளைப் பற்றிக் கூறுகின்ற தென்னிலங்கைச் செய்தியாளர்கள் கூட பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்க வாய்ப்பில்லை என்ற தொனியில் பேசுகின்றனர். தமிழகத்தின் முடிவுகளும் ஒரு கலக்கத்தை சில தென்னிலங்கை அரசியல் அவதானிகளிடம் தோற்றுவித்திருக்கிறனதெனக் கூறின் மிகையாகா. ஜெயலலிதாவின் கடும் வீழ்ச்சி அவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சிகரமாக இல்லை. ஏனெனில், தென்னிலங்கையில் பலரும் ஜெயலலிதா புலிகளை நசுக்கத் தன் மாநிலத்தில் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டு மிகவும் மகிழ்வடைந்திருந்தனர் அன்றோ.

ஜெயலலிதாவின் பயங்கரப் புலி எதிர்ப்புக்காரணமாகவே தமிழ் நாடு ஈழப்போருக்கு ஒரு வசதியுள்ள பின்தளமாக முடியாமற்போயிற்று என அவர்கள்சரியாகவே கருதியிருந்தனர். ஒரு கட்டத்தில் இலங்கைக் கடற்படைத் தளபதியாக முன்பிருந்த கிளான்சி பர்னாந்து சென்னையில் ஜெயலலிதாவைக் கண்டு புலிகளின் கடல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்து

சிங்கள இனவாத ஏடுகள் மற்றும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஆகியவற்றில் கிடைத்த விளம்பரம் காரணமாகவும் ஜெயலலிதாபல சிங்களப் பற்றாளரின் மனதில் இடம் பிடித்தார். அரசதரப்பிலும் சில வழிகளிலும் ஜெயலலிதாவுக்கு ''உண்மை நிலவரம்'' எடுத்து இயம்பப்பட்டு அரசின் சமாதானமுயற்சிகள் பற்றியும் சிலாகிக்கப்பட்டதாக சில ஊர்ஜிதம் அற்ற செய்திகள் முன்னர் வெளிவந்தன. எதுஎப்படியாயினும் தமிழ் பிரிவினைவாதிகள் மீண்டும் தமிழகத்தில் காலூன்றி தமக்கு மீண்டும் தலையிடி கொடுக்காமல் இருப்பதற்கு சரியான ஆள் ஜெயலலிதாவேஎன நம்பியிருந்த சிங்கள தேசியவாதிகளுக்கு அவருடைய வீழ்ச்சியும் தி.மு.க. பெற்ற பெரும் வெற்றியும் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன எனக் கூறலாம்.

தி.மு.க. பற்றிப் பொதுவாகவும், கருணாநிதிபற்றி குறிப்பாகவும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், தேசியவாதிகளுக்கும் மிக நீண்ட காலமாகவே எதிர்ப்புணர்வு இருந்து வந்துள்ளது. திராவிட முன்னேற்றக்கழகம் 50களிலும் 60 களிலும் தனித் திராவிடநாடுகோரி மாபெரும் போராட்டத்தில் இறங்கியது. அதன் பிரதிபலிப்புக்கள் - குறிப்பாக மலையகத்திலும் கொழும்பிலும், கால்கொண்டு வேறு இடங்களுக்கும் துரிதமாகப் பரவிய இலங்கைத்திராவிட முன்னேற்றக்கழகம் தீவிரமான அணிதிரட்டலில் ஈடுபட்டது - அவர்கள் நெஞ்சில் இன்னும் பசுமையாக உள்ளன. தமிழ் நாடு தனிநாடு ஆகிவிட்டதென்றால் தமக்கே மாபெரும் தலையிடி உண்டாகும் என அன்று சிங்கள அரசியலாளர் மிகவும் உண்மையாகவே பயந்திருந்தனர். இதன் காரணமாகவே அன்று சுதந்திரக் கட்சி அரசு இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத்தை சட்டரீதியாகத் தடைசெய்தது.

ஈழப்போர் தொடங்கிய காலத்திலிருந்தும் கலைஞரின் போக்கு சிங்கள அரசுகளுக்கும் தேசியவாதிகளுக்கும் எரிச்சலை மூட்டும் வகையிலேயே அமைந்திருந்தது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் புலிகளுடன் போராடிய இந்தியப் படைகள் நாடுதிரும்பிய போது கலைஞர் அவர்களை எதிர்த்து அறிக்கை விட்டது

அமைந்தது.

இப்பின்னணியில் கலைஞரின் வெற்றி அரசிற்கும் சிங்கள தேசியவாதிகளுக்கும் சற்று சஞ்சலத்தை தோற்றுவித்திருப்பதில்

என்பதை நோக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஜெயலலிதா போய், தமது நீண்டகால சந்தேகத்துக்கு ஆளான ஒரு பேர்வழி பதவிக்கு வந்திருப்பது யதார்த்தமேயாகினும் தமிழக மக்கள் புலி ஆதரவு போக்கினை இனி ஏற்க மாட்டார்கள் என தம்மைத்தாமே திருப்திப் படுத்திக்கொள்ளவேண்டிய ஒரு உளவியல் தேவையையே ம.தி.மு.க..

## இந்தியத் தேர்தல்- 96

மொத்த ஆசனங்களின் எண்ணிக்கை- 545

இதுவரை வெளியிடப்பட்ட தொகுதிகள்- 511

| கட்சிகள் | |
|---|---|
| (1) காங்கிரஸ் (ஐ) | 136 |
| (2) இந்து தேசிய கட்சிகளின் கூட்டணி- | 178 |
| ● பாரதீய ஜனதாக் கட்சி (பி.ஜே.பி) | 154 |
| ● சிவசேன | 15 |
| ● சமதா கட்சி | 06 |
| ● ஹர்யன விகாஸ் கட்சி | 03 |
| (3) தேசிய முன்னணி-இடது முன்னணி கூட்டு | 98 |
| ● ஜனதா தள் | 39 |
| ● இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) | 25 |
| ● சமாஜவாதிக் கட்சி | 17 |
| ● இந்திய கம்யுனிஸ்ட் கட்சி | 10 |
| ● புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி | 04 |
| ● போவேர்ட் புளொக் | 03 |
| (4) ஏனைய கட்சிகள்: | |
| ● தமிழ் மாநிலக் காங்கிரஸ் | 20 |
| ● திராவிட முன்னேற்றக் கழகம் | 17 |
| ● தெலுங்கு தேசம் கட்சி | 16 |
| ● வெகுஜன சமாஜக் கட்சி | 11 |
| ● அஹாலி தளம் | 08 |
| ● சுயேட்சைகளும், ஏனைய கட்சிகளும் | 27 |

13-05-96

### இந்தியத் தேர்தல்

| கட்சிகள் | |
|---|---|
| பாரதீய ஜனதாக் கட்சி/ கூட்டணி | 182 |
| காங்கிரஸ்/ கூட்டணி | 138 |
| தேசிய முன்னணி— இடது முன்னணி | 113 |
| ஏனைய கட்சிகள்/சுயேச்சைகள் | 92 |
| இதுவரை வெளியான தொகுதிகளின் எண்ணிக்கை | 533 |

14-05-1996

பா.ம.கவும் தோல்வியுற்ற செய்திக்கு கொடுத்த முக்கியத்துவம் பிரதிபலிக்கின்றது.

கலைஞரின் வெற்றியினை சற்று கலக்கத்துடன் நோக்கிய சிங்கள தேசியவாதியான ஒரு பத்திரிகையாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து உடைந்து

தாலும் இந்திய தேசிய அரசியலுடனும், நேருகுடும்பத்துடனும், சம்பந்தப்பட்டவர்களின் தலைமையில் உள்ள கட்சி. அது தனது தோழமைக்கட்சியான தி.மு.கவை ராஜீவின் கொலையாளிகளுடனோ அல்லது இலங்கைத் தமிழ் அரசியலில் நேரிடையாகவோ சம்பந்தப்பட அனுமதிக்காது என அவரது எண்ணம்.

இவற்றிடையே இலங்கை ராஜதந்திர வட்டாரங்களுடன் சம்பந்தப்பட்ட சிலர் இலங்கை அரசு தமிழகத்து புதிய ஆட்சியாளர்களுடன் பேசி அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெற சிபாரிசு செய்துள்ளனர்.

இப்படியாக இந்திய தமிழகத் தேர்தல் முடிவுகள் தென்னிலங்கையில் தோற்றுவித்துள்ள கரிசனையின் பின்னணிதான்

உண்டு. சிவசேனைத் தலைவர் பால் தக்கரே.

இலங்கை அரசு புலி ஆதரவாளர் எனக்கருதும் இங்கிலாந்துத் தமிழர் - முன்னாள் அவ்விடம் ஒரு மூலையில் மேயராக இருந்தவர். சின்னமணி தக்கரேயுடன் 95இன் பின்கூற்றில் பேசினார். இதைத் தொடர்ந்து பால்தக்கரேயும் வேறு சில சிவசேனை முக்கியஸ்தர்களும் இலங்கை இராணுவம் இந்துக்களை அழிப்பதை தாம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற பாணியில் சில காரமான அறிக்கைகளை வெளியிட்டனர். யாழ் தமிழரின் போராட்டத்திற்கு நேரடி ஆதரவு வழங்கத் தயங்க மாட்டோம் எனவும் கூறினர்.


இதைத் தொடர்ந்து கிளிநொச்சியில் வெளியாகும் (தற்போது) புலிகளின் ஈழநாதம் பத்திரிகை இந்தியாவிற்கு நேசக்கரம் நீட்டி இருந்தது. ஆசிரியர் தலையங்கங்களில் தனித்தமிழ் ஈழம் அமைந்தால் அது ஒரு போதும் தமிழ்நாடு என தனிநாடாகப் பிரிவதற்கு வழிவகுக்காது வரைந்தது என்பதை இந்திய மத்திய அரசு உணர்ந்து ஈழப்போராட்டத்திற்கு உதவ வேண்டும் எனவும், தமிழ் ஈழப்போராட்டம் தமிழகத்தையும் இலங்கையின் வடகிழக்கையும் உள்ளடக்கிய அகண்ட தமிழ்ப் பேரரசை நிறுவுவதற்கான ஒரு நோக்குடன் நடத்தப்படுகிறது என்பது சில விஷமிகளின் பொய்ப்பிரச்சாரம் என புலிகளின் ஈழநாதம் கூறிற்று. இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப்பார்த்த சில அரசதரப்பினருக்கு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஆபத்து என்பது போல் ஒரு எண்ணம் தோன்றுகிறது.

இன்று பா.ஜ.க. மத்தியில் ஆட்சி அமைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பது மட்டுமல்ல இப்படியான ஒரு ஆட்சியை தீர்மானிப்பதில் கலைஞருக்கு கணிசமான பங்கிருக்கப்போகிறது என்பதும் மேற்கண்ட சிங்களத் தேசியவாதிகள், அரசு, அதன் வெளிநாட்டமைச்சு என்பவற்றிற்கு யோசனையாக உள்ளது.


பா.ஜ.க. மத்தியில் ஆட்சியமைத்தால் கலைஞருக் கூடாகவும், சிவசேனையின் மூலமாக நேரிடையாகவும் புலிகள் எப்படியாவது சுழியோடி தம் காரியத்தை முடித்துவிட முயற்சிப்பர் எனவும் சில தென்னிலங்கை அரசியலாளர், மற்றும் அவதானிகள் மத்தியில் சஞ்சலம் உண்டு. இலங்கை அரசிற்குச் சார்பாக வடகிழக்கு



கருணாநிதி



அத்வானி.



பிரபாகரன்



சந்திரிகா.

வது தொடர்பாகப் பேசியதும் அது தொடர்பான செய்தி ஏரிக்கரை பத்திரிகைகளில் படத்துடன் முன்பக்கத்தில் வெளியானதும் நாம் அறிந்ததே.

இது போன்ற இன்னும் பல புலிஎதிர்ப்பு மற்றும் இலங்கை தமிழ் விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் அவற்றிற்கு

சந்தேமில்லை. எனினும், புலி ஆதரவுக் கட்சிகளான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றகழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும் தமிழகத்தேர்தலில் மண்கவ்விவிட்டன என அரசின் வெகுசன தொடர்பு சாதனங்கள் கடுமையாக கொக்கரித்து ஒரு திருப்தியை தேட முற்பட்டமை ஏன்

மூப்பனாரால் ஆரம்பிக்கப்பட்டு தேர்தலில் வெற்றியும் கண்டுள்ள தமிழ்க மாநில காங்கிரஸ் தி.மு.கவுடன் கூட்டாக ஆட்சியமைக்கவுள்ளதால் கலைஞர் அரசானது ஒரு தமிழ் ஆதரவு போக்கை மேற்கொள்ள வாய்ப்பில்லை என்பது அவரது வாதம். தமிழக மாநில காங்கிரஸ் என்ன இருந்

என்ன?

முதலாவது புலிகள் சிவசேனை உறவு பற்றியது. சிவசேனை பாரதீய ஜனதாவில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சி. பம்பாய் மற்றும் ம காராஷ்டிர மாநிலங்களில் அதற்குச் செல்வாக்கும் அதிகாரமும்

போர்விடயத்தில் இனி நடந்துகொள்வதில்லை என இந்திய மத்திய அரசு இனி முடிவெடுத்தால் புலிகளின் கை ஓங்கி விடும் என்பது இதில் மறுக்க முடியாத உண்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சபாஷ் சந்திரசேகரன்!



அரசியல் தொழிற்சங்க வாதிகளுக்குத் தேவையேற்படும்போது தொழிலாளர்கள் பகடைக்காய்களாகப் பாவிக்கப்படுவது மலையகத்திற்கு ஒன்றும் புதிய விடயமல்ல. தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சிவாழ்ந்து கொண்டிருக்கும் தொழிற்சங்க முதலாளிகளின் சமூகத்துரோகச் செயல்களும் சந்தர்ப்பவாத செயற்பாடுகளும் நிறைந்ததாகவே கடந்த 50 வருட கால தொழிற்சங்க அரசியல் வரலாறு உருவாக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த ஆறு நாள் வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்த நிலைமைகள் இக்கூற்றை நிரூபிக்கக் கூடியவையாக அமைந்துள்ளன.

நிர்வாகக் கெடுபிடிகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளால் அல்லலுறும் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளான வருடமொன்றிற்கு 300நாள் வேலை, நாளொன்றிற்கு 8 ரூபாய் சம்பள உயர்வு போன்றக் கோரிக்கைகள் மிகவும் சாதாரணமானவை என்பதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை. ஆனால், இக்கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட வேலைநிறுத்தப்போராட்டத்தை ஏற்பாடு செய்த தன்மையானது ஒரு கேள்விக் குறியாகவே அமைந்துள்ளது. தனது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் அம்பலத்தின் தலைவர் என்ற வகையில், தனது இ.தொ.கா. சகாக்களுடன் கூட பேச்சுவார்த்தை நடத்தாமல் இரகசியமான முறையில் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்காமல் தொண்டமான் அதற்கு தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்த சம்பவமானது இத்தொழிலாளர்களின் நலன்களைத் தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததாகவே அமைந்து விட்டது. இன்று தொண்டமானின் அந்த சந்தர்ப்பவாத, வியாபார நோக்கம் கொண்ட முடிவின் விளைவாக அவரே போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எது எப்படியிருப்பினும் தனது ஆறுநாள் சம்பளத்தையும் இழந்த நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் நேர்மையுடன் இப்போராட்டத்தில் குதித்தார்கள் என்பது மட்டுமே உண்மைச்சம்பவமாகும்.

எனினும், இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், இவ்வரசின் பிரதியமைச்சர்களில் ஒருவரும், மலையகத் தமிழர்களின் மாற்றுத் தலைவராக உருவெடுக்க முயற்சி செய்பவருமான சந்திரசேகரன் நடத்திய ''கூத்து'' மிகவும் பிரபலமான தொன்றாக அமைந்து விட்டது. வேலைநிறுத்தத்தில் ''அழையாவிருந்தாளியாகப்'' பிரவேசித்தது மலையக மக்கள் முன்னணி. தன்னுடைய செயற்பாடுகளில் மற்றவர்களை இணைத்துக் கொள்வது இ.தொ.காவைப் பொறுத்தவ பதிலாக இனரீதியான கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை என்பது ஒரு வித்தியாசமான கேள்வியேயாகும். வேலைநிறுத்தத்திலிருந்து வாபஸ் வாங்குவதற்கான காரணம் இதுதான் என்றால் இவ்வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றாமல் ஆரம்பத்திலேயே எதிர்த்திருக்கலாம். அப்படியான சூழ்நிலையில் அவரது தொழிற்சங்க அங்கத்தினர்கள் அவரது முடிவை மீறி வேலைநிறுத்தத்தில் குதித்து விடுவார்கள். அதன் மூலம் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்த்துகொள்வதற்கு வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பது தவிர்க்க முடியாத நிலைமையாக உருவாகியது. மறுபுறத்தில் 2 அல்லது 3 நாட்கள் மட்டும் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றுவதாக முன்பே அறிவித்து மூன்றாம் நாளுடன் தனது ஆதரவை நிறுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால், இதுவரையில் தமிழர்களின் நம்பிக்கையைப் பெற எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது; மறுபுறத்தில் எல்லாத் தமிழர்களும் புலிகள் என்ற நிலைப்பாட்டில் மலையக மக்களையும் பரவலாகப் பேரினவாத இராணுவக் கெடுபிடிகளுக்கு உட்படுத்தி வரும் இவ்வரசின் மீது பெரும் நம்பிக்கையைப் பிரகடனப்படுத்திய இவரது ''வேலைநிறுத்த வாபஸ்'' அறிக்கையானது தனக்குப் பிரதியமைச்சர் பதவியையும், சலுகைகளையும் வழங்கியுள்ள அரசுக்குக் கைக்கூலியாக செயற்படவும், அதுவும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்கு எதிராகவும் செயற்படுவதில் தனக்குள்ள தயார் நிலையைப் பிரகடனப்படுத்துவதாகவே கருதுதல் வேண்டும்.

மாவதைத் தொடர்ந்து சரிந்து வருகின்ற தனது செல்வாக்குகளை மீண்டும் நிலைநாட்டிக்கொள்வதற்காகவா? அல்லது இ.தொ.கா.வின் ஏக உரிமையாளராக தனது பேரனை உருவாக்கும் தொண்டமானின் முயற்சியின் காரணமாக பேரனால் மேற்கொள்ளப்பட்டுள்ள கெடுபிடிகளினால் ஏற்பட்டுள்ள பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காககவா? அல்லது தோட்டத் தொழிலாளர்களின் எதிர்கால நலனின் தொடர்பான நேர்மையான அக்கறையுடனா இவ்வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது என்ற கேள்விகள் மலையகப் பிரதேசங்களில் பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றன.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அமைச்சர் பதவியைப் பெற்று அவ்வரசைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தொண்டமான் மேற்கொண்ட பல்வேறு தமிழர் விரோத தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் இவ்விதமான சந்தேகங்களை எழுப்புவது இயல்பே. குறிப்பாக 1980 -84 காலப் பகுதியில் அரசவரவு - செலவுத்திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்ட சம்பள உயர்வு பல வருடங்களாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமலிருந்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சம்பள உயர்வைக்கோரி தோட்டத் தொழிற்சங்க கூட்டுமுன்னணியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தை முறியடிப்பதில் இனவாதியான சிறில் மெத்தியவுடன் கூட்டுச்சேர்ந்து செயற்பட்டமையும், இறுதியில் 1984ம் ஆண்டு இ.தொ.கா. சம்பள உயர்வை கோரி வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டமையும் மறக்க முடியாத கசப்பான நிகழ்வுகளாகும்.

தோட்டங்களை தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்க ஐ.தே.கட்சி முடிவு செய்த போது தோட்டத் தொழிலாளர்களின் எதிர்கால நலன்கள் தொடர்பாகப் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. எனினும், பெரிய தொழிற்சங்கத் ரையில் ஒரு ''வருமானப்'' பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. இந்நிலையில் ''ஒரு விமரிசன ரீதியான ஆதரவை வழங்குகின்றோம்'' என அறிக்கை விடுத்து வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொண்ட சந்திரசேகரன் மூன்றாம் நாள் பல்வேறு வகையில் பிரச்சாரப்படுத்தி இவ்வேலை நிறுத்தத்தில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தது. இவ்வேலை நிறுத்தப்போராட்டத்தை சீர்குலைக்க முயற்சி செய்தமை தொண்டமானின் ''அரசியற் பாசறை''யில் ஒரு தசாப்தங்களுக்கு மேலாக பழக்கப்பட்ட சந்திரசேகரன், சந்தர்ப்பவாத தனிமனித லாபம் கருதித் தன்னை வாழவைத்துக் கொண்டிருக்கும் சமூகத்தின் நலன்களைவிட தனது நலனே மேலானது எனக் கருதி செயற்பட்டு வரும் அவரது 'அரசியல் குருவையும்' மிஞ்சி விட்டமையின் வெளிப்பாடாகத் தெரிகின்ற ஒரு விடயமாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கைகள் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் சார்ந்த இன உரிமை தொடர்பான அரசியற் கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை என இவர் இப்போது கூறுவது ஒரு வேடிக்கையிலும் வேடிக்கையான விடயமாக அமைந்து விட்டது. தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் என்பதோடு அவர்களின் சமூகப் பொருளாதார இனத்துவத் தன்மைகளும் தோட்டத்துறையுடன் பின்னிப் பிணையப்பட்டவையாகவே அமைந்து விட்டதொன்றாகும். எனவே தொழில் ரீதியான பிரச்சினைகள் எழும்போது அவர்கள் சார்ந்த இனத்துவரீதியான பிரச்சினைகளும் எழுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால், இப்போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகள் இவர்களின் தொழில்சார்ந்தவையேயன்றி இவர்களின் இனம் சார்ந்தவையல்ல. இப்போராட்டத்தில் கணிசமான சிங்களத் தொழிலாளர்களும் சேர்ந்து கொண்டனர் என்பதும் ஒரு முக்கிய விடயமாகும். இது இப்படியிருக்க ஒரு வர்க்க ரீதியான கோரிக்கைகளுக்குப்

இதன் மூலம் அதிகாரதத்துக்கு அடிமைப் படநானும் தயங்காதவன் என்பதையும், தொழிலாளர்களைப் ''பகடைக்காய் களாகப் பாவிப்பது'' மலையகத்தில் மாற்றப்படமுடியாத வரலாறு என்பதையும் நிரூபித்து விட்டார் சந்திரசேகரன். அவருக்கு ஒரு ''சபாஷ்'' போடத்தான் வேண்டும். ஏனென்றால், இவ்வளவு கெதியில் இத்தகைய விதமாகத் தனது சுயரூபத்தை வெளிக்காட்டியமைக்காக.

சந்திரசேகரன் அவர்களே! அரசு உறுதி கூறியிருக்கும் வருடத்திற்கு 300நாள் வேலையும், நாளொன்றுக்கு 3 ரூபாய் சம்பள உயர்வும், தோட்டத் தொழிலாளரின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் சார்ந்த 12 விடயங்கள் தொடர்பாக அரசு அளித்துள்ள வாக்குறுதிகளும் இத்தொழிலாளர்கள் நடத்திய இந்தத் தியாகப் போராட்டத்தின் பலனாகப் பெற்றவையேயன்றி நீங்கள் மேற்கொண்டுள்ள உறவின் பலனாகப் பெற்றவையல்ல என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மலையகமே! உன்னுடைய உழைப்பை உறிஞ்சிக்கொண்டு, உனது தோளிலேயே சவாரிசெய்துகொண்டு, உனக்கே தெரியாதென்ற நினைப்பில் உனக்குத் துரோகம் விளைவிப்பவர்களை எவ்வளவு காலம் பொறுத்துக்கொள்ளப் போகின்றாய்? உன்னுடைய அரசியலை, தொழிற்சங்கத்தை உனது கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரும்வரை இம்மாதிரியான வியாபாரிகளுக்கு விலைபோவதை மட்டும்தான் உனது வரலாறாகக் கொண்டிருப்பாய் என்பதை நீ எப்போது உணர்வாயோ அன்றுதான் உனக்கு விடுதலை கிடைக்கும்.

**மலையகத்தான்**

# ஒரு போராட்டத்தின் 19 வருட பூர்த்தியும் சிவனுலெட்சுமணன் நினைவும்

1977 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாரம் மலையக மக்களால் மறக்க முடியாத வாரமாகும். அன்று ஆட்சியிலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரும் நோக்கில் நுவரெலியா மாவட்டத்தில் வீதியின் இருமருங்கிலுமுள்ள தேயிலைத் தோட்டக் காணிகள் 7 ஆயிரம் ஏக்கரை சுவீகரித்து பெரும்பான்மை சிங்கள மக்களை குடியேற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டது.



அத்திட்டத்திற்கு எதிராக நுவரெலியா மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் இறங்கினர். அப்போராட்டத்தில் மே 13 ஆம் திகதி ஒக்ஸ்போர்ட் தோட்டத்தைச் சேர்ந்த சிவனுலெட்சுமணன் என்ற இளைஞர் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டான். அச்சம்பவத்தை அடுத்து போராட்டம் மேலும் உக்கிரமடைந்தது. அன்றைய அரசிற்கு எதிராக பல முனைகளிலும் மலையக மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டினர். மாணவர்களும், ஆசிரியர்களும் வகுப்பு பகிஸ்கரிப்புக்களிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் ஈடுபட்டனர்; தோட்டச்சேவையாளர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

இப்போராட்டத்தாக்கத்தினால் மேற்படி குடியேற்றத்திட்டம் கைவிடப்பட்டது.

அத்திட்டத்தை தொழிலாளர்கள் எதிர்த்தமைக்கு பல காரணங்கள் இருந்தன. 1970 - 1977 வரை சிறுகச் சிறுக தோட்டக்காணிகள் சுவீகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டு தோட்டத்தில் சிங்கள கொலனிகள் ஏற்படுத்தப்பட்டன. இது மலையக மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தியது. தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கப்படவில்லை. சுவீகரிப்பினால் தோட்டத்தில் தேயிலைக்காணியின் பரப்பளவு குறைந்து தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைந்தது.

தோட்டத் தொழிலாளர்களினால் வளப்படுத்தப்பட்ட காணி அவர்களுக்கு வழங்கப்படாமல் வெளியாருக்கு வழங்கப்பட்டது. அதனால் வேலைவாய்ப்பும் குறைந்தது. வேறு தோட்டங்களுக்கு தொழிலாளர்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

1970 மே மாத திட்டப்படி மேற்படி பாதிப்பு பெருமளவில் ஏற்படும் அபாயம் இருந்தது. 1970 - 77வில் உணவுக்குக் கூட கஷ்டப்பட்ட தொழிலாளர்கள் மேற்படி திட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தன் மூலம் அன்றிலிந்து அரசிற்கு எதிராக பூரணமான எதிர்ப்பை எடுத்துக்காட்டினர். இதனால் அத்திட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் தொண்டமான் அமைச்சராக இருந்த போதும் தோட்டக்காணிகளை சிங்கள மக்களுக்கு பிரித்துக் கொடுக்கும் திட்டங்கள் ஆங்காங்கே நடந்த எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மத்தியிலும் சிறுக சிறுக நடந்தேறின.

1977 மே மாதம் நடந்ததுபோன்று திட்டமிட்டு பேரினவாத குடியேற்றத்தை எதிர்த்து ஐக்கியப்பட்ட போராட்டம் நடைபெறவில்லை.

ஆனால், தனியார் கம்பனிகளின் நிர்வாகக் கொடுமையை எதிர்த்து 8 ரூபா சம்பள உயர்வையும், வேலை நாட்களை கூட்டியும் கேட்டு கடந்த மாதக் கடைசியில் சகல மலையகத் தொழிலாளர்களும் ஐக்கியப்பட்டு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இத்தருணத்தில் சிவனுலெச்சுமணன் கொலை செய்யப்பட்டதையும் அப்போராட்டத்தையும் நினைவு கூருவது சாலப்பொருந்தும்.

மலையக மக்களால் வளப்படுத்தப்பட்ட காணியில் மலையக மக்களுக்கு எவ்வி உரிமையும் இல்லாத நிலை இன்றும் தொடரவே செய்கிறது. மலையக மக்களின் காணி பல்வேறு வழிகளில் பறிக்கப்படுகின்றது. இதுஎதிர்காலத்திலும் தொடரும். அன்று ஆட்சியிலிருந்த சுதந்திரக் கட்சியே இன்றும் ஆட்சியிலிருக்கிறது. சட்டப்படியான திட்டமிட்ட குடியேற்றங்கள் மட்டுமன்றி, அத்துமீறியும் சிங்கள மக்கள் தோட்ட காணிகளில் குடியேறுகின்றனர். அது தற்போதைய அரசினால் ஊக்குவிக்கப்படுகின்றது.

இவ்வழியில் மட்டுமன்றி தனியார் கம்பனிகளுக்கு தோட்டங்களைக் கையளித்தமையாலும், உலகவங்கியின் ஆலோசனையின் கீழ் தோட்டக் காணிகளில் காடுவளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்படுவதாலும் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கின்றனர்.

இதனால் மலையக மக்களின் பொருளாதாரமான பெருந்தோட்டக் கைத்தொழில் சீரழிக்கப்படுகிறது. அதற்கு மாற்றீடாக தொழிலாளர்களின் வருமானத்தை உறுதி செய்ய எவ்வித திட்டமும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

19 வருடமாகிவிட்ட போராட்டத்தையும் ஒரு தியாகியின் மறைவின் 19 வருட பூர்த்தியையும் நினைவு கூரும் இவ் வேளையில் மலையக மக்களின் இருப்பு, அவர்களின் பொருளாதாரம் என்பன குறித்து மலையக மக்கள் அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் மண்ணைப் பாதுகாக்கும், அவர்களின் இருப்பைப் பாதுகாக்கும், அவர்களின் தொழிற்துறையைப் பாதுகாக்கும் திட்டம் பற்றியும் அத்திட்டத்தை வென்றெடுக்கும் வழிமுறை பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து செயற்படுவது அவசியமாகும்.

**மதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வை இந்தியா எதிர்ப்பது ஏன்?

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கம் வடக்கு - கிழக்கில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் ஏனைய துன்புறுத்தல்களை உடனுக்குடன் இந்திய அரசாங்கம் முன்னர் கண்டித்ததுடன் உலக அபிப்பிராயங்களை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக உருவாக்குவதிலும் முன்நின்றது. கடந்த ஒரு வருடகாலமாக வடக்கு கிழக்கில் நடைபெறும் தமிழ்மக்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இந்தியா கவலை தெரிவிக்கக்கூட இல்லை. மாறாக இராணுவ நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றது. இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும், ஆயுத உதவிகளையும் செய்து வருகின்றது.

கடந்த மாதம் லெபனானில் 50 பேர் கொல்லப்பட்டவுடன் அமெரிக்கா தலையீடு செய்து இஸ்ரேலுக்கும் லெபனான் ஹிஸ்புல்லா கெரில்லாப் படைக்குமிடையே யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், ரிவிரெச - 1 ரிவிரெச -2 இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ள போதும் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த எந்தவொரு சர்வதேச சக்தியும் முன்வரவில்லை. இராணுவ நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் ஆதரிப்பதே மேற்படி சர்வதேச சமூகத்தின் மௌனத்திற்கு காரணமாகும்.

பௌத்த சிங்கள பேரினவாத நிலைப்பாட்டினின்று பொ.ஐ.ஐ.முன்னணி அரசாங்கம் தீர்வுத்திட்ட யோசனைகளை முன்வைத்தது நினைவிருக்கலாம். இதனை வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கூறுகிறது. ஐந்து தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திற்கு சென்ற போது மேற்படி தெரிவிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. அரசாங்கத்தின் அரைகுறையோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் வடக்கு - கிழக்கு இரண்டு மூன்றாக துண்டாடப்பட்டாலும் அதனை தமிழர்கள் ஏற்க வேண்டும் என்றே இந்திய அரசு விரும்புகிறது என்றும் அறியப்படுகிறது.

ஆகவே இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே இந்தியா எடுக்கிறது என்பது தெளிவாகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளிலும் நேர்மையான நடுநிலைமையான முற்போக்கான பாத்திரத்தை இந்தியா வகிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

1. பொதுவாக குறிப்பிடப்படுவது போன்று இந்தியா பல தேசிய இனங்களின் சிறைக்கூடமாகவே இருக்கிறது. பல தேசிய இனங்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு செயற்கை யான ஒரு இந்திய தேசியமே வெளிப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் அண்டை நாடான இலங்கையில் ஒரு தேசிய இனத்திற்கு தான் வழங்கியதிலும் கூடுதலான உரிமைகளை உறுதிசெய்யும் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்திய அரசு விரும்பாது.

2. இந்தியாவில் நடைபெறும் காஷ்மீர் போன்ற தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக வெளிநாடுகள் இருப்பதை இந்தியா விரும்பவில்லை. காஷ்மீர் போன்ற மக்களின் உரிமைகளை உறுதிசெய்யும் வகையில் தீர்வொன்றை வெளிநாட்டு தலையீட்டில் ஏற்படுவதை இந்தியா ஒரு போதும் விரும்பியதில்லை. இந்நிலையில் இலங்கையில் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பது என்பது இந்தியாவில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிநாடுகள் எடுப்பதனை நியாயப் படுத்தி விடும்.

3. இலங்கை தமிழ் மக்களுக்கு இந்திய தமிழக மக்களை விட கூடுதல் சுயாட்சி கிடைத்தால் தமிழக மக்களும் கூடுதல் சுயாட்சி கோரி அல்லது பிரிவினை கோரி போராடலாம் என்று அச்சமும் இந்தியாவுக்கு இருக்கிறது.

4. வடக்கு - கிழக்கில் இலங்கை தமிழ் மக்களுக்கு பலமான சுயாட்சி கிடைக்குமாயின் தமிழக மக்கள் உட்பட பல இந்திய தேசிய இனங்கள் அவர்களது போராட்டங்களுக்குப் பின்புலமாக வடக்கு - கிழக்கை பாவிக்கலாம் என்று இந்தியா எண்ணுகிறது.

5. இந்தியா இப்பிராந்தியத்தில் ஒரு மிகப்பெரிய ஜனநாயக நாடெனினும் ஐரோப்பிய நாடுகளில் போன்று தாராளமான, பன்முகப்பட்ட ஜனநாயக பண்புகளை காணமுடிவதில்லை. எனவே இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தேவையான தாராளமான, பன்முகப்படுத்தப்பட்ட ஜனநாயக பண்புகளுடன் இந்தியா முன்நின்று செயலாற்றுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது.

6. அமெரிக்கா - சோவியத் யூனியன் என்ற பழைய சர்வதேச ஒழுங்கு மாறியுள்ளது. இன்று அமெரிக்காவிற்கும் அதன் ஐரோப்பிய நேசநாடுகளுக்கும் ஏற்றவகையிலேயே பிராந்திய வல்லரசுகள் இழுபடுகின்றன. இந்தியாவும் இவ்வாறு இழுடுவதால் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா முற்போக்கான பாத்திரத்தை வகிக்க முடியாது.

எனவே உடனடியாக இந்தத்தீர்வுப்பற்றி சிந்திப்போமாயின் இந்தியாவைத் தவிர்த்து அதனை பகைத்துக்கொள்ளாமல், விருப்பம் தெரிவிக்கும் ஐரோப்பிய நாடுகளை இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வில் தலையிட வரவழைக்கலாம். இது எப்படி சாத்தியமாக்கப்படலாம் என்பது பற்றி இனப்பிரச்சினைத் தீர்வில் சாத்தியமான மூன்றாவது தரப்பு எது என்ற தலைப்பின் கீழ் சரிநிகரில், இதழ் 95ல் ஆராயப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா, அமெரிக்கா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டை அல்லது மத்தியத்துவத்தை கொண்டுவருவதில் வெற்றிகாண முடியாவிடின் தமிழ்மண்ணில் நீண்ட நாட்களுக்கு போராட்டம் தொடரலாம். அப்படிப் போராட்டம் தொடரும் போது இந்தியா பற்றி ஒரு சரியான நிலைப்பாட்டிற்கு வருவதும், தமிழ் தரப்பிற்கும் இந்தியாவுக்குமிடையேயான உறவைச் சீர் செய்வது அவசியமாகும். ஐரோப்பிய மத்தியத்துவத்துடன் தீர்வொன்று காணப்படுமாயின் இந்தியாவுடனான உறவு சீர்செய்யப்படுவது அவசியம் என்பது உணரப்படவேண்டும்.

1. இலங்கை தமிழ் மக்களின் வெளிநாட்டு அபிப்பிராயத்தை இந்திய அரசின் தமிழ் தரப்பினரே நேரடியாக சுயமாக ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தும் வரை இந்திய அரசு இலங்கை தமிழ் மக்களுக்கு எதிரான வெளிநாட்டு அபிப்பிராயத்தை ஏற்படுத்தாதவாறு இந்திய அரசுடன் தந்திரோபாயமாக (இந்திய விஸ்தரிப்பு, மேலாதிக்கம் என்பவற்றுக்கு அடிபணியாதவாறு) உறவைப் பேணவேண்டும். தமிழ் மக்களுக்கென வெளிநாட்டு கொள்கையை திறம்பட வகுத்து செயற்பட வேண்டும்.

2. இலங்கை தமிழ் மக்களின் இந்தியாவுடனான உறவு என்பது இந்தியாவிலுள்ள தனிப்பட்ட அரசியல்தலைவர்களுடனானதாக இருக்கக் கூடாது. கடந்த காலத்தில் அவ்வாறிருந்தமையால்தான் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டவுடன் அவரினது நிலைப்பாட்டையே ராஜீவ்காந்தியிடம் எதிர்பார்க்க முடியவில்லை. பின்னர் வி.பி.சிங்கிடம் ராஜீவின் நிலைப்பாடு இருக்கவில்லை. இன்றைய சர்வதேச ஒழுங்கு இந்திய அரசு, அரசுயந்திரம், மாறிவரும் அரசாங்கங்கள் என்பவற்றை விளங்கிக்கொண்டு இந்தியாவுடனான உறவை எவ்வாறு பேணுவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

3. தமிழ் நாட்டு மக்களின் ஆதரவைப் பூரணமாகப் பெற்று பரஸ்பர உறவை வளர்த்தல் அவசியம். இதுவும் தனிப்பட்ட தலைவர்களுடனான உறவாக மட்டுமன்றி தமிழ் மக்களுடனான உறவாக வளர்த்து மாறிவரும் அரசாங்க சூழ்நிலைகளில் தமிழக அரசுடனான எதிர்க்கட்சிகளுடனான தமிழக மக்களுடனான உறவு என்பவற்றை சமநிலைப் படுத்த வேண்டும். கடந்த காலத்தைப் போன்று எந்தத் தமிழ் நாட்டுத்தலைவருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்வது கூடுதலாக பணம் பெறுவது எந்த தமிழர் அமைப்பு யாரிடம் கூடுதலாக நெருங்குவது என்ற அடிப்படையில் செயற்படாமல் முழு இலங்கை தமிழ் மக்களின் நலனின் அடிப்படையில் திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

4. இந்தியாவிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளுடனும், விடுதலைப் போராட்ட சக்திகளுடனும், உறவைத் திட்டமிட்டு வளர்க்க வேண்டும். அவற்றுடனான உறவுகள் தொடர்புகளால் எமக்கு பாதிப்பு ஏற்படாதவாறு நடப்பதுடன் இந்திய மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறும் நடந்து கொள்ளல் வேண்டும்.

5. இந்திய அரசின் இலங்கை தமிழ் மக்களுக்கு எதிரான போக்கு முழு இலங்கைக்கும் எதிரான போக்கு, விஸ்தரிப்பு, மேலாதிக்கம் என்பவற்றை சரியாக இனம்கண்டு அவற்றுக்கு அடிமையாகிவிடாது தந்திரோபாயமாக நிலைமையை கையாள வேண்டும். தேவையானபோது அவற்றை எதிர்த்துப் போராடவும் தயங்கக் கூடாது. இந்திய சமாதானப்படைக்கு எதிராக புலிகளின் தாக்குதல்கள் ராஜீவ் காந்தி கொலை என்பவற்றுக்கு பிறகு ஏற்பட்ட சாதக பாதக நிலைமைகளை கற்று போராட்டத்தை சரியான வழியில் முன்னெடுக்காமை சர்வதேசரீதியாக தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு குறைந்தமைக்கு அடிப்படையான காரணம் எனலாம்.

இலங்கையின் பேரினவாத சக்திகளுக்கு எதிராகப் போராடும் போதும் எமது உள்நாட்டு வெளிநாட்டு நண்பர்களை சரியாக இனங்கண்டு அவர்களை எமது போராட்டத்திற்கு சார்பாக அணிதிரட்ட வேண்டும்.

இலங்கைப் பேரினவாத சக்திகளுக்கு ஆதரவான ஒரு வெளிநாட்டு சக்தியுடன் போராடும் போது அதற்கு எதிரான போராட்டவடிவம், போராட்ட இலக்கு என்பன இல்லாமல் செயற்படக்கூடாது. போராட்டத்திற்குச்சார்பான வெளிநாட்டு சக்திகளை இனம் காண்பது போன்று வெளிநாட்டு சக்திகள் எமது போராட்டத்திற்குச் சார்பாக எடுக்கும் நிலைப்பாடுகள் எதிராக எடுக்கும் நிலைப்பாடுகளையும் சரியாக இனம் கண்டு கையாள வேண்டும்.

6. இந்திய அரசுடனான உறவைத் தந்திரோபாயமாக கையாள்வதினாலும் தமிழக அரசுடனும் ஏனைய தமிழ் சக்திகளுடனும் தமிழ்மக்களுடனும் சமநிலையான உறவை வளர்ப்பதன் மூலமும், ஏனைய இந்திய முற்போக்கு ஜனநாயக சக்திகளுடனும் போராட்டச் சக்திகளுடன் சரியாகவும் நிதானமாகவும் உறவை பேணுவதன் மூலமும் இந்திய அரசு தமிழ் மக்களுக்குஎதிரான நிலைப்பாட்டை எடுப்பதை தடுக்க முடியும்.

7. மேற்படி விடயங்களையும், கடந்தகால குறைநிறைகளையும் அனுபவங்களையும் கருத்திற்கொண்டு இலங்கை தமிழ்தரப்பு (தமிழர் தலைமைகளிடம் ஒரு ஏகோபித்த முடிவு கொள்கை வேலைத்திட்டம் ஏற்பட வேண்டும்)

தமழர் போராட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய வெளிநாட்டுக் கொள்கையும் நடைமுறையும் சரியாக வகுக்கப்பட வேண்டும். இந்தியாவுடனான உறவும் பன்முகப்பட்டவகையில் ஆராயப்பட்டு வகுக்கப்படவேண்டும்.

**ராம் பிரசாத்.**

---

## சொல்வதைத்தவிர வேறு வழியில்லை.

*சொல்வதற்கு நிறையவே இருக்கிறது;*
*சொன்னது கொஞ்சம் தான்*
*உண்மையை உரக்கச் சொன்னால்*
*உன்னைச் சுடுமென்ற மனோபாவத்தை மாற்றிவிடு!*

*நம்மைப் பற்றி*
*நாம் சுயவிமர்சனம் செய்யாது விடின்;*
*நமக்கு நன்மைதானென்ற*
*போலி நம்பிக்கையைத் தகர்த்து விடு!*

*நமது வீட்டை;*
*நமது அழுக்குகளை யார் சுத்தப்படுத்துவது?*
*நாம் - நம் மீது கவிந்துள்ள அழுக்குகளை*
*துடைத்தெறியாது விடின் -*
*நமக்கு நல் விளைச்சல் கிடைக்குமா சகோதரனே!*

*நமது அரசியல் பயணம்*
*இன்று தனித்துவமானது தானெனில்*
*நாம் - நம்மையே வழிநடாத்தும்போது*
*நமக்குத் தீங்கு நேரலாமோ?*

*இதுதான் எனது கேள்வி*
*இதுதான் எனது குரல்*
*உனது கேள்வி இதிலில்லையா சகோதரனே?*
*உனது குரல் இதிலில்லையா சகோதரனே?*

*சுய விமர்சிப்புக்கும்*
*நியாயமான வழிகாட்டல்களுக்கும்*
*உனது மனதில் எப்போது*
*இரும்புத் திரையை போட்டாய்?*

*உனது அகஉளராதியில்*
*தனிக் கட்சியென்றால்*
*தலையாட்டுவதற்கும் - தலைவரின் முடிவும் என்று*
*எப்போது அர்த்தம் கற்பித்தாய்?*

*நீ கோரி நின்ற விடுதலை இதுவா சகோதரனே?*
*நீ யாத்திரை செய்ய விரும்பிய பாதை இதுவா?*
*இதுதானென்று நான் நினைக்கவில்லை.*

*எது நன்மை? எது தீமை!*
*எது சரி? எது பிழை?*
*உனது தலைமை சொல்வதெல்லாம் சரியா?*
*உனது தலைமை போகும் பாதை சரிதானா?*
*உன்னையே நீ கேள்!*
*உனக்குள் ஆயிரம் தரம் கேள்!*

*தலையாட்டி பொம்மைகளாய்*
*நலிந்து வாழ்ந்தது போதுமென்றுதானே*
*மந்தை மனோபாவம் விட்டெறிந்து*
*தனித்துவ வழி கோரி நின்றாய்*

*இப்போது நீ*
*எதனைப் பெற்றிருக்கிறாய்?*
*எதனைஇழந்திருக்கிறாய்?*
*சிந்தித்து சிந்தை கொள் சகோதரனே!*

*யாரை நண்பனாக்கி இருக்கிறாய்*
*யாரை பகைவனாக்கி இருக்கிறாய்*
*எப்போது நாம் மொழியை மறந்தோம்*
*எப்போது நாம் நம்மை மறந்தோம்*

*அமைச்சர் பதவிகளுக்கு*
*ஆலாய் பறந்த கதையை நாம்*
*மீண்டும் வாசிக்கவா*
*புது அத்தியாயம் எழுதினோம்?*

*உனது பாட்டன் இதற்காகத்தானிருந்தான்*
*உனது தகப்பன் இதற்காகத்தானிருந்தான்*
*நீ இப்படி இருக்கக் கூடாது என்பதே*
*எனது குரலுக்கான நியாயமாகும் சகோதரனே!*

*உரிமைகளுக்காய் குரல் எழுப்ப அனுப்பியவர்கள்*
*சலுகைகளுக்காய் சார்ந்து நிற்கும் போது*
*உண்மையைச் சொல்லுவது*
*சிந்திப்பதற்காகவன்றி; சினம் கொள்வதற்காகவல்ல -*

*எனக்கு "சொல்வதைத் தவிர*
*வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை"*
*நான் சொல்வதில் தவறிருப்பின்*
*உனது ஆவேசம் எனைச் சுட்டெரிக்கட்டும்!*

*மாறாக - நீ தவறுகளுக்காய்*
*வாதாட வருவது*
*ஒருநாளும் நமது இருண்ட விழிகளுக்கு பார்வை தராது சகோதரனே!*

*விடுதலைப் பாடி*
*ஊர்க் குருவி ஆகலாமா?*

தவறிருப்பின் சுட்டெரிக்கட்டும்..

**அபூரிதால்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இந்த அவசரகாலச் சட்டத்தின் மூலம் நாம் பிரிய வேண்டிய சந்தியை வந்தடைந்திருக்கிறோமோ?

1958ஆம் ஆண்டு இனக்கலவரத்தைப் பற்றி தாசி வித்தாராச்சி எழுதிய 'Emergency 58' நூலில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அவ்வளவுக்கு அந்த அவசரகாலச் சட்டத்தைப் பற்றி தெளிவாக அறிந்திருந்தார். அன்றைய இன அடக்குமுறை ஒருபுறம் காடையர்களால் வழிநடத்தப்பட்டாலும் அரசாங்கம் விதித்த 'அவசரகாலச் சட்டம்' காடையர்களை அடக்குவதற்குப் பதிலாக தமிழ் மக்களை ஒடுக்கவே அதிகம் பயன்பட்டது.

கடந்த ஏப்ரல் 8ம் திகதியன்று 'ஏப்ரல் 4ம் திகதியிலிருந்து நாடு முழுவதும் அவசர காலச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது' என அரசு அறிவித்தது.

ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வருமுன்பு மக்களுக்கு அவசர காலச் சட்டம் தொடர்பாக அளித்த வாக்குறுதியில் இவ்வாறு கூறியிருந்தது;

அவசர காலச் சட்டம் உடனடியாக நீக்கப்படும். மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பேரில் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற துஷ்பிரயோகங்கள் இல்லாது செய்யப்படும் அவ் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே வழங்கப்படும்''

ஆனால் பதவிக்கு வந்ததன் பின் பொ.ஐ.முவின் சகல வாக்குறுதிகளும் எந்தளவு தூரம் மீறப்பட்டன என்பதை சரிநிகர் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வந்திருக்கிறது. அவசரகாலச் சட்டம் தொடர்பான வாக்குறுதியும் அவற்றில் ஒன்று. இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான இன்னொரு அம்சம் என்னவென்றால் இம்முறை நாடு முழுவதும் அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியவர் ஜனாதிபதி அவர்கள். ஜனாதிபதி சந்திரிகாவின் தற்றுணிவின் பேரிலேயே இது பிரகடனப்படுத்தப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை 1995 ஜூலை 15ம் திகதிக்கு முன்னர் இல்லாதொழிப்பதாக வாக்குறுதி அளித்த ஜனாதிபதி அவர்கள் அதைச் செய்யவில்லை. பின்னர் அந் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி தான் ஒரு சர்வாதிகாரியாக நடக்கப் போவதில்லை என்று அறிவித்த சில மாதங்களுக்குள்ளேயே இந்த அவசரகாலச் சட்டப் பிரகடனம் நடைபெற்றது என்பது கவனிக்கத்தக்கது. ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் வாக்குறுதிகள் எவையுமே ஒடுக்கப்படும் மக்களின் நலன் சார்ந்ததல்ல. வெறும் ஏமாற்று என்பது நிருபணமாகிக் கொண்டிருக்கிறது.

இந்த அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட நாளோ ஏப்ரல் 8. ஆனால் ஏப்ரல் 4இலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவித்த போது அது முன்னைய நான்கு நாட்களுக்கு முன்னிருந்து செல்லுபடியாகும்படி அரசு பிரகடனப்படுத்தியதன் உள்நோக்கம் என்னவென்று சரியாகத் தெரியவில்லை. ஆனால் அரசு நாடுமுழுதும் அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியதன் பின்னர் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தை ஏன் அரசு பிரகடனப்படுத்தியதென்பதை தெளிவாக விளக்குபவையாக அமைந்தன.

அவசர காலநிலைமை பிரகடனப்படுத்தி இரண்டு நாட்களிலேயே (ஏப்ரல் 10ம் திகதி) உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுத்தான் இருந்தது. ஆனால் அரசாங்கம் இன்னமும் மக்களின் ஆதரவை பலப்படுத்திக் கொண்டு தேர்தலை நடாத்தலாம் என எண்ணியது. அதை மீண்டும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து அதில் வெற்றி பெறுவதன் மூலம் சாதிக்கலாமென நம்பியது. எனவே ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் தேர்தலைத் திரும்பவும் ஒத்தி வைத்தது.

ஏப்ரல் 19ம் திகதி ரிவிரச - 2 இராணுவ நடவடிக்கை வடக்கில் தொடரப்பட்டது. அவசர காலச் சட்டப் பிரகடனம் இதற்கு சகல விதத்திலும் தோதாக அமைந்தது.

ஏப்ரல் 19ம் திகதியே பத்திரிகைத் தணிக்கையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் ரிவிரச - 1 இராணுவ நடவடிக்கை அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட போது இதேவகையில் பத்திரிகைத் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு அது 3 மாதங்களின் பின் அதாவது இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததன் பின் நீக்கப்பட்டது. இம்முறையும் அதே வகையில் பத்திரிகைத் தணிக்கை கொண்டு வரப்பட்டது. வடக்கில் நடத்தப்படும் இராணுவ அட்டூழியங்கள் எதுவுமே வெளித் தெரியாத வண்ணம் இருப்பதற்காகவே அத் தணிக்கை அமுல்படுத்தப்பட்டது.

ஏப்பிரல் 22 தொடக்கம் 27 வரை மலையகத் தோட்டப்புறங்களில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்போவதாக மார்ச் 18ம் திகதியன்றே இ.தொ.கா அறிவித்தது. இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தை எப்படி அடக்கலாம் என்றும் அரசு திட்டமிட்டு இறுதியில் நாடு முழுவதிலுமான அவசரகாலச் சட்டத்தினைப் பயன்படுத்தி இதனை அடக்கி விடலாம் எனக் கருதியது. ஆனால் அதற்கிடையில் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர் போராட்டத்தை அடக்கக் கூடாதென அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்திருந்த இடதுசாரிக் கட்சிகள் அரசை வலியுறுத்தியதைத் தொடர்ந்து அவ்வெண்ணம் கைவிடப்பட்டது.

மே முதலாம் திகதி தொழிலாளர் தினத்தன்று தொழிலாளர்கள் வழமையாக நடத்தும் ஊர்வலங்களைத் தடை செய்தது. ஏற்கனவே தென்னிலங்கையில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் உக்கிரமாகி இருந்ததால் மேதினத்தன்று தொழிலாளர்கள் அணிதிரள்வதென்பது அரசாங்கத்துக்குப் பெரும் எச்சரிக்கையாகவே இருந்து வந்தது. அரசின் தடையையும் மீறி ஊர்வலம் நடத்திய நவசமசமாஜக் கட்சித் தொண்டர்களை கடுமையாகத் தாக்கியும் கண்ணீர்ப்புகை அடித்தும் கலைத்தது. அதே தினத்தன்று அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் லங்கா சமசமாஜக் கட்சியும் ஊர்வலம் நடாத்தியபோது அக்கட்சியின் மீது கைவைக்கவில்லை. இதற்குக் காரணம் ஐக்கிய முன்னணிக்குள் இதனால் சச்சரவு ஏற்பட்டு விடும் என்பதாலேயே. பாராளுமன்றத்தில் உறுப்பினர்களேயற்ற நவசமசமாஜக் கட்சியின் ஊர்வலத்தை இலகுவாகத் தடுக்க அரசாங்கத்துக்கு முடிந்தது. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊர்வலத்தடையை நியாயப்படுத்தியது மட்டுமல்லாமல் அதே அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊர்வலத்தை அடக்கியதையும் நியாயப்படுத்தியது.

இத்தனை அட்டூழியங்களையும் செய்ய அரசாங்கம் பயன்படுத்திய கருவி அவசரகாலச் சட்டமே. அரசின் மக்கள் விரோத செயற்பாடுகள் அனைத்துக்குமே சட்டரீதியில் அங்கீகாரமளிக்கின்ற சட்டமே அவசரகாலச் சட்டம். இதன் மூலம் நாட்டில் மக்களுக்கு இருக்க வேண்டிய சகல அடிப்படை உரிமைகளையும் மட்டுப்படுத்தலாம். இந்தப் பொதுஜன முன்னணி மாத்திமல்ல. சகல ஆளும் வர்க்கமுமே இவ்வவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே தமது இருப்பைத் தேடி வந்திருக்கின்றன. அது இன்று நேற்றல்ல. 54 வருட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

## கடந்த காலங்களில்....

இலங்கையில் முதற் தடவையாக அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது 1942 மார்ச் மாதம் 19ம் திகதியாகும். சுதந்திரமடைவதற்கு முன்னமே அன்றைய காலனித்துவ அரசாங்கத்தின் ஆளுனரால் பிறப்பிக்கப்பட்டது இது. இரண்டாம் உலக மகாயுத்தம் தீவிரமடைந்து ஜப்பான் இலங்கையைச் சுற்றிவளைக்க முயன்று கொண்டிருந்த காரணத்தைக் காட்டி கட்டாய இராணுவச் சேவைக்காகவே இந்த அவசர காலச் சட்டநிலை அன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 4ம் திகதி கொழும்பிலும் ஏப்பிரல் 9ம் திகதி திருகோணமலையிலும் ஜப்பான் குண்டுத் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து இக் கட்டாய இராணுவச் சேவை அதிகம் வலியுறுத்தப்பட்டது. அதன்பின்னர் 1947 ஜூன் மாதம் நடந்த தொழிலாளர் வேலைநிறுத்தமும் அதனைத் தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவும் அன்றைய சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இவ்வவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர்களின் போராட்டத்தை அரசாங்கம் நசுக்கியபோது கந்தசாமி என்னும் தொழிலாளி கொல்லப்பட்டார். இந்த 1947ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 25ம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டமே பிற்காலத்தில் 1972ம் ஆண்டும் முதலாவது குடியரசு அரசியல் அமைப்பிலும், 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் அமைப்பிலும் சேர்க்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தியே 1953ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த மாபெரும் ஹர்த்தால் போராட்டமும் அடக்கப்பட்டது. இக் ஹர்த்தாலின் போது எட்டு நாட்கள் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் வைத்திருந்தது. ஹர்த்தாலின் போது 9 பேர் கொல்லப்பட்டனர். பலர் சிறையிடப்பட்டனர். பலர் படுகாயமுற்றனர். இத்தனையும் டட்லி அரசாங்கத்தின் போது கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடந்தன.

பண்டாரநாயகவின் ஆட்சியின் கீழ் 1958ம் ஆண்டு மே மாதம் இனக்கலவரம் நடந்தது. இவ் இனக்கலவரத்தின் போது நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொழும்பில் அகதிகளாக்கப்பட்டனர். பல தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இவ் இனக்கலவரத்திற்கு அரசாங்கம் தூண்டுகோலாக இருந்தது. ஆனால் இனக்கலவரத்திற்கு காரணமாக இருந்ததாகக் கூறி ஜாதிக விமுக்தி பெரமுனவோடு தமிழரசுக் கட்சியையும் தடை செய்தது. இனக் கலவரம் 27ம் திகதியே தொடங்கி விட்டிருந்த போதும் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகிய மூன்றாவது நாளே அதாவது 29ம் திகதியே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அதாவது அவசர காலச் சட்டம் அவசியமான நேரத்தில் போடப்படவில்லை. அது மட்டுமல்லாது போடப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் பலியானார்கள்.

1958 மே 29ம் திகதி போடப்பட்ட அவசரகாலச் சட்டம் 1959 மார்ச் 13வரை அமுலிலிருந்தது. அதன் பின்னர் பண்டாரநாயக்க செப்டெம்பம் 25ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அன்றிலிருந்து டிசம்பர் 2ம் திகதிவரை அவசரகாலநிலை அமுலில் இருந்தது.


மீண்டும் 1961 ஏப்ரல் 14ம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழரசு தபால் சேவையை நடாத்தியதைத் தொடர்ந்து ஏப்ரல் 17ம் திகதி அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியும் அன்றே தடைசெய்யப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். வடகிழக்குப் பகுதி இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 48 மணி நேர ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டது. இவ் அவசரகாலச்சட்டம் 1963 மேதினத்தன்று வரை அமுலில் இருந்தது.

டல்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து நாடளாவிய ரீதியில் கொண்டு செல்லப்பட்ட பிரச்சாரங்கள், ஊர்வலங்கள் காரணமாக 1966 ஜனவரி 8ம் திகதி அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் அது டிசம்பர் 17 வரை அமுலில் இருந்தது. அது நீக்கப்பட்டு 11 நாட்களுக்குள் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு அது 1969ம் ஆண்டு 17ம் திகதி வரை அமுலில் இருந்தது. இக்கால இடைவெளிக்குள் வடக்கு கிழக்குப் பகுதியிலும் மலையகத்திலும் நடந்த தமிழர்களின் போராட்டங்கள் மோசகரமாக அடக்கப்பட அவசரகாலச் சட்டமே துணை புரிந்தது.

1971ம் ஆண்டு ஜே.வி.பி எழுச்சி அடைந்ததைத் தொடர்ந்து பீதியுற்ற அரசாங்கம் மார்ச் மாதம் 16ம் திகதி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியது. இதன் கீழ் அனுமதியின்றி பிணங்களை எரிக்கும் சட்டத்தையும் கொண்டு வந்தது. ஏப்ரல் மாதம் 5ம் திகதி அடக்கப்பட்ட இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியை 20,000க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்து அடக்கியது. அதே அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தியே பல ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை முகாம்களுக்கும் சிறைக்கூடங்களுக்கும் அனுப்பியது அன்றைய சிறிமாவோ அரசாங்கம். 1976ம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதிவரை இவ் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. இக்கால இடைவெளிக்குள் வடக்கில் நடத்தப்பட்ட போராட்டங்களை நசுக்குவதற்கும் இச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. 1977ம் ஆண்டு ஜே.ஆர் தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் ஆட்சியமைத்தது. 1994 வரையான 17 ஆண்டு கால ஆட்சிக்குள் 11 வருடங்கள் அவசர காலச் சட்டத்தின் கீழேயே ஆட்சி நடாத்தியது. வடக்கில் எழுந்த உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதக் கிளர்ச்சியாகவே பார்த்த ஜே.ஆர் அரசாங்கம் 1979 ஜூன் 11ம் திகதி அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியது. இவ் அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்துக் கொண்டே ஜூலை 12ம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. 1979 டிசம்பர் 27ம் திகதி வரை அவ் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது.

1980ஆம் ஆண்டு ஜூலையில் சம்பள உயர்வு கோரி ஈடுபட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தை நசுக்குவதற்காக ஜூலை 16ம் திகதி போடப்பட்ட அவசரகாலநிலை ஓகஸ்ட் 15 வரை நீடித்தது. இதற்கான பிரகடனம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் மூலமே வெளியிடப்பட்டது இதன் இன்னொரு முக்கிய அம்சம். இதன் போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் பெரும்பாலானோரை வேலையிலிருந்து நீக்கியதும் அவசரகால நிலையைப் பயன்படுத்தியே. இத் தொழிலாளர்களில் சிலர் பிற்காலத்தில் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்தனர். ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் வேலையை இழந்த இத் தொழிலாளர்களுக்கு வேலை பெற்றுத் தருவதாகவும் நட்டஈடு தருவதாகவும் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்திருந்த பொ.ஐ.மு ஆட்சிக்கமர்ந்ததன் பின்னர் ஏமாற்றியது. 16 வருடங்கள் ஏமாற்றப்பட்டு வந்த இத் தொழிலாளர்கள் கடந்த ஏப்ரல் மாதம் ஊர்வலம் நடத்தியபோது காலிமுகத் திடலுக்கு அருகில் பொலிஸாரால் அடித்துக் கலைக்கப்பட்டனர். இதனை அடக்குவதற்கும் அவசரகாலச் சட்டத்தையே பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே காலப்பகுதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களை சுடுகாட்டுக்கு அனுப்புகின்ற அமைச்சர்களும் உருவாகினர். ஜே.ஆர் ஆட்சியில் சிரேஷ்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




அமைச்சராக இருந்தவரும். பிரேமதாச ஆட்சியினரால் துரோகியாக சொல்லப்பட்டவருமான அத்துலத் முதலியே அந்த அமைச்சர். ஜே.ஆரின் அவசர காலச் சட்டத்தின் கீழ் போராட்டத்தில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களை மயானத்துக்கு அனுப்புவதாக சத்தம் போட்ட அத்துலத் முதலி பிற்காலத்தில் தனிக் கட்சி ஆரம்பித்து கோட்டை புகையிரத நிலையத்திலும், இரத்மலானையிலும் தாக்கப்பட்டது கூட பிரேமதாசவின் அவசரகால சட்டத்தின் கீழேயே.

அடுத்ததாக 1981ம் ஆண்டு ஜுன் 2ம் திகதி கொண்டு வரப்பட்ட அவசரகால நிலை 1 கிழமைக்கு நீடித்தது. 1981 மே 24ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மாவட்ட சபைத் தேர்தல் வேட்பாளரான ஐ.தே.கவைச் சேர்ந்த ஏ.தியாகராஜா இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மீண்டும் அவசரநிலை 1981 ஒகஸ்ட் 17இல் போடப்பட்டு 1982 ஜனவரி 16ம் திகதி வரை அமுலில் இருந்தது. ஆனாலும் வரலாற்றில் முக்கியமான அவசரகால நிலையாக 1983 மே 18ம் திகதி போடப்பட்டதையே குறிப்பிட வேண்டும்.

இனக் கலவரத்தை திட்டமிட்டு தாமே முன்னின்று நடாத்திய ஜே.ஆர் அரசாங்கம் கலவரத்திற்கு பொறுப்பாளிகள் என்று கூறி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றைத் தடை செய்ததுடன் அவற்றின் பத்திரிகைகளையும் கூடவே தடைசெய்தது. அன்று அநியாய் முறையில் போடப்பட்ட தடையினால் இளைஞர்கள் பலர் தலைமறைவு அரசியலுக்கும் தீவிர அரசியலுக்கும் விரைவாகவே தள்ளப்பட்டார்கள். அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சியிலிருந்த ஐ.தே.கவினரும் படையினரும் சேர்ந்து நடாத்திய இனப்படுகொலைகள் சாதாரணமானவையல்ல. ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் எத்தனையோ நடந்தேறின. வெலிக்கடைப் படுகொலைகள் நடைபெற்றது. பலர் அகதிகளாயினர். இச்சம்பவம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பெருமளவு ஊக்குவித்தது. 1983 மே 18ம் திகதி நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு அமைச்சர் தொண்டமானும் ஆதரவாக வாக்களித்திருந்தார். அவரது ஆதரவு என்பது மலையக மக்களை அடக்குவதற்கே பயன்பட்டது. இன்றுவரை அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து ஆதரித்து வருகின்ற ஒரே ஒருவராக அமைச்சர் தொண்டமானே இருக்க முடியும். அன்றைய அந்த அவசர காலச் சட்டம் 1989ஆம் ஆண்டு ஜனவரி 11 வரை அமுலில் இருந்தது. அந்த இடைக்காலத்திற்குள் எவ்வளவோ நடந்து முடிந்திருந்தன. குறிப்பாகத் தென்னிலங்கையில் பல தொழிலாளர்கள் மாணவர்கள் உட்பட பல கிராமிய இளைஞர்களுமாக 60,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இவர்கள் அவசர காலச்சட்டத்தின் பேரால் டயர்களுக்கு இரையாக்கப்பட்டனர். புதைகுழிகளுக்கு அனுப்பப்பட்டனர். ஆறுகளில் பிணமாக மிதக்க விடப்பட்டனர். வதை முகாம்கள் எத்தனையோ இயங்கின. இதே அவசர காலச் சட்டத்தின் பேரில் ஆளும் கட்சியினர் தமது சொந்தப் பழிகளையும் தீர்த்துக் கொள்ள வழிவகுத்தது. இன்றைய பட்டலந்த விசாரணைகள் இதற்கு நல்ல சாட்சி.

தென்னிலங்கையில் இப்படியிருக்க வடக்கு கிழக்கிலும் பல இளைஞர்கள் அநியாயமாக சந்தேகத்தின் பேரில் கொல்லப்பட்டனர். போதாததற்கு இந்திய அமைதி காக்கும் படையையும் இந்த அநியாயங்களைப் புரிவதற்கு பங்காளிகளாக்கிக் கொண்டது ஜே.ஆர் அரசாங்கம்.

இலங்கைப் படையே மேல் எனப் பேசும் அளவிற்கு இந்தியப் படையினரின் அட்டூழியங்கள் நடந்திருந்தது.

இந்த அவசரகால நிலையும் 81 ஜனவரி 11இல் நீக்கப்பட்டிருக்கையில் ஒன்பதே நாட்களில் அதாவது ஜனவரி 20ம் திகதி மீண்டும் பிரேமதாசவால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அது 1994 செப்டெம்பர் வரை அமுலில் இருந்தது. இக்கால இடைவெளிக்குள் புரியக்கூடிய சகல அட்டூழியங்களும் தென்னிலங்கையிலும் வடக்கிலும் நடத்தி முடிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக வடக்கில் இந்திய இராணுவம் தனது அமைதிகாக்கும் பணியில் பல அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த போது தென்னிலங்கை இளைஞர்களை நசுக்க இலங்கை இராணுவத்திற்கு வாய்ப்புக் கிடைத்தது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வேளை தென்னிலங்கையிலும் தமது அழிப்புக்களைச் செய்து ஓய்ந்திருந்தது இராணுவம். அவ்விராணுவம் வடக்கில் ஓயாது இன அழிப்பை நடத்துவதற்காக மீண்டும் வடக்கிற்கு திசைதிருப்பப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான பல இராணுவ நடவடிக்கைகளையும் இனப் படுகொலைகளையும் நடாத்தியிருந்தது. கொக்கட்டிச்சோலை, மயிலந்தனை போன்ற பெரிய இனப்படுகொலைகளைச் செய்ய இவ் அவசரகாலச் சட்டமே அங்கீகாரமளித்தது. அக்குற்றங்களைப் புரிந்த இராணுவத்தினர் மீது இராணுவ விசாரணை எனும் போர்வையில் போலி நாடகமாடியது. இன்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான தீர்ப்பில்லை. இனவெறிபிடித்த இராணுவக் கொலைஞர்கள் இன்றும் சுதந்திரமாகத் தங்கள் படுகொலைகளைப் புரிந்து வருவதுடன் அவர்களுக்கு உயர்பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

1994 செப்டெம்பரில் (பொதுத் தேர்தல் நடந்து முடிந்த ஒரு மாதத்தில்) ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவால் வடக்கு கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. ஒகஸ்ட் மாதத்தில் தமது கட்சி படுதோல்வியடைந்ததன் காரணமாகவும், நவம்பர் மாதத்தில் நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலிலாவது வெல்ல முயல்வதற்காகவுமே இவ் அவசரகாலச் சட்டத்தை நீக்கினார் விஜேதுங்க.

ஐ.தே.கவின் அவசரகாலச் சட்டத்தைக் கண்டித்தும் தாம் பதவிக்கு வந்தால் அதனை நீக்குவதாக வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்து சிலமாதங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல நகரங்களில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தியது. பயங்கரவாதப் பீதியைக் காட்டி இதுவரை காலம் அடக்குமுறைகளைச் செய்துவந்த சகல அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் பயங்கரவாதப் பீதியைக் காரணம் காட்டியது. அப்பாவி மலையக தமிழ் இளைஞர்களையும் ஏனைய கொழும்பிலும் நடத்தப்பட்ட பல கைதுகளை இந்த அவசரகாலச் சட்டமே அங்கீகரித்தது. பதவிக்கு வந்த ஒரு மாத்திலேயே மலையகத்தில் கைதுகள் நடந்தன. அவர்களில் பலர் வெலிக்கடையிலும் களுத்துறைச் சிறைச்சாலையிலும் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் உரிமைக்காக வாய்கிழியக் கத்திய சந்திரிகா பதவிக்கமர்ந்த ஒரு மாதத்திலேயே பியகம சுதந்திர வர்த்தக வலைய தொழிலாளர்களது போராட்டத்தை அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே அடக்கினார்.

இரணவில அமெரிக்காவின் குரல் ஒலிபரப்புக்கெதிராக ஊர்வலம் நடாத்திய மக்களை ஒடுக்குவதற்கும் இதே அவசரகாலச் சட்டமே பயன்படுத்தப்பட்டது. இதன் போது ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மீண்டும் வெள்ளைவேன்கள் தலைகாட்டின. வடக்கு கிழக்குப் போலவே மலையகத்திலும் கொழும்பிலும் தலையாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். பலர் கடத்தப்பட்டனர். மீண்டும் ஆறுகளில் பிணங்கள் மிதக்கத் தொடங்கின. புல்லர்ஸ் ரோட் படுகொலைகள் பொல்கொட வாவிப் பிணங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள். இவை அரசபடையின் வேலையே என்பதை சரிநிகரும் அம்பலப்படுத்தியிருந்தது. இத்தனையும் அவசரகாலச் சட்டத்தின் பெயராலேயே.

ஏப்ரல் 4இலிருந்து நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் கொண்டு வந்ததன் உள் நோக்கங்கள் எமது கணிப்பையும் மீறியவையாகக் கூட இருக்கலாம் அது எது?

## அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாளர்கள் யார்?

மாதாந்தம் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதம் பாராளுமன்றத்தில் நடக்கின்றபோது பம்மாத்துக்காகவே அவற்றுக்கெதிராக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்று தோன்றுகின்றது. ஏனெனில் இறுதியில் நீடிப்புக்கான வாக்கெடுப்பு நடக்கின்ற வேளை ஆதரவாகவே வாக்களிக்கின்றார்கள். தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இந்த அவசரகாலச் சட்டத்திற்கு தமிழ் எம்பிக்களே அங்கீகாரம் வழங்கி வருகின்றார்கள். இ.தொ.கா, த.வி.கூ, ஈ.பி.டி.பி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சகல கட்சிகளுமே இதற்கு ஆதரவு வழங்குகின்றன.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரை அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்து வந்த ஐ.தே.க நவம்பரிலிருந்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. தென்னிலங்கை பேரினவாத சக்திகளை திருப்திப்படுத்த வேண்டுமென்றால் ஆகக் குறைந்தது ஆதரவளிக்காமல் நடுநிலைமை வகித்தாலே போதும் என்று ஐ.தே.க கருதியதோ என்னவோ.

த.விகூவின் அவசரகாலச் சட்ட ஆதரவு நிலைப்பாடு தொடர்பாக பரவலாக கண்டனம் எழுந்ததன் பின்னர் அது அண்மைக்காலமாக இதற்கு எதிர்த்து வாக்களித்து வருகின்றது.

இதேவேளை தொடச்சியாக அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்து வரும் ஒரேஒரு எம்.பி ஜே.வி.பியைச் சேர்ந்த நிஹால் கலபதியே. இச் சட்டத்திற்கு எதிராக பாராளுமன்றத்திற்கு வெளியிலும் எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுகின்ற ஒரே அமைப்பும் ஜே.வி.பியே என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த காலங்களில் ஐ.தே.க அவசரகாலச் சட்டத்தை நீடிக்கின்றபோது இன்றைய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் எதிர்த்து கருத்துத் தெரிவித்திருந்துடன் எதிர்த்து வாக்களித்துமிருக்கின்றனர். குறிப்பாக 1983 ஜுன் 27ம் திகதி அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது உரையாற்றிய அமரசிறி தொடங்கொட "எப்படியிருந்த போதும் தெற்கிலும் அமுலாகக்கூடிய வகையில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்துவதை நாங்கள் அங்கீகரிக்க முடியாது" என உரையாற்றினார். வடக்குக்கு இதை அமுல்படுத்தத் தான் வேண்டும், தெற்குக்கு அமுல்படுத்துவது கூடாது என குறிப்பிட்ட அவரும் அவர் சார்ந்த கட்சியுமே இன்று முழு இலங்கைக்குமான அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றி வருகிறது

இன்று அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைத்ததற்கு அரசாங்கம் சொன்ன காரணம் புலிகள் தேர்தலைக் குழப்புவதற்கு முயல்கிறார்கள் என்பதே. ஆனால் 1994 மார்ச் முதலாம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போதும் நாடு முழுதும் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. அத் தேர்தலின் போதும் புலிகளின் மிரட்டல் இருக்கத்தான் செய்தது. அப்படியிருந்த போதும் அன்றைய அவசரகாலச் சட்டத்திற்கு பொ.ஐ.மு எதிர்த்தே வாக்களித்தது. இன்று மட்டும் புலிகளின் மிரட்டலைக் காட்டி அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒத்திவைப்பதேன்? இது அப்பட்டமான சந்தர்ப்பவாதமில்லையா?

இலங்கையில் தற்போதைய அமைப்புமுறையின் கீழ் ஆட்சிக்கமர்கின்ற சகல அரசாங்கங்களுமே தமது இருப்புக்காக மேற்கொள்கின்ற அடக்குமுறைகளுக்கு இதே இராணுவ நிர்வாக சட்டவாக்க முறைகளைப் பயன்படுத்தியே தீரும் என்பது ஒரு இலகுவான விடை. இதைப்புரியாமல் ஜனநாயகமாவது. மாற்று ஆட்சியாவது. மண்ணாங்கட்டியாவது.

●

என்.சரவணன்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 6

குழந்தைகளைப் புகழ்ந்துரைக்கும் போது நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். எமது புகழ்ச்சி அவர்களது தன்மை அல்லது இயல்பு அதாவது ஆளுமை பற்றியதாக இருப்பதற்குப் பதில், அவர்கள் செய்யும் முயற்சி, சாதனை என்பன பற்றியதாக அமைதல் வேண்டும். எங்களது அபிப்பிராயங்கள் மூலமாக குழந்தைகள் தாமே தம்மைப்பற்றி முடிவு செய்துகொள்ளும் வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இந்த உதாரணம் இதனைத் தெளிவாக விளக்குகிறது:

பத்துவயதுச்சிறுவனான கென்னி தங்கள் வீட்டின் நில அறையை ஒழுங்குபடுத்துவதில் தன் தகப்பனுக்கு உதவி செய்து கொண்டிருந்தான். அது கொஞ்சம் கடினமான வேலைதான். இந்த வேலையின் போது மிகவும் பாரமான தளபாடங்களை அவன் நகர்த்த வேண்டியிருந்தது. அவனது வேலையைக் கவனித்த தகப்பனார் சொன்னார்:

''அந்த மேசை மிகவும் பாரமான மேசை. அதை நகர்த்துவது சரியான கஷ்டம்...''

''ஆனால் நான் அதை நகர்த்தினேன்'' என்றான் கென்னி பெருமையுடன்.

''அதை நகர்த்த சரியான பலம் தேவை'' -இது தகப்பன்.

கென்னி உற்சாகத்துடன் இவ்வாறு சொன்னான்:

''நான் நல்ல பலசாலி''

- இந்த உதாரணத்தில் தகப்பன் அந்த வேலை எவ்வளவு கடினமானது என்பது பற்றியே பேசினார். கென்னி தானே தனது சொந்தப் பலத்தைப் பற்றி ஊகித்துக் கொண்டான். இதற்குப் பதிலாக தகப்பன் ''நீ நல்ல பலசாலி தான் மகன்'' என்று சொல்லியிருந்தால் குழந்தையின் எதிர்வினை வேறாக இருந்திருக்கும். அது ''இல்லை... என்னைவிடப் பலமானவர்கள் எனது வகுப்பில் இருக்கிறார்கள்'' என்று அது பதிலிறுத்திருக்கக் கூடும். இது ஒரு கசப்பான அல்லது பயனற்ற வாக்குவாதத்திற்கு கூட இட்டுச் சென்றிருக்கக்கூடும்!.

*

புகழ்ச்சி இரண்டு பகுதிகளைக் கொண்டது; ஒன்று எமது வார்த்தைகள். மற்றையது; குழந்தைகள் தாமே அதன்மூலம் ஊகித்து செய்துகொள்பவைகள். எங்களது சொற்கள் நாம் குழந்தையின் முயற்சி, வேலை, சாதனை, உதவி அல்லது படைப்பு என்பவற்றைப் பாராட்டுவதாக தெளிவாக வெளிப்படுத்தப்படவேண்டும். நாம் சொல்லும் முறை மூலமாக குழந்தை தனது சொந்த ஆளுமை குறித்து ஒரு முடிவுக்கு தவிர்க்க முடியாமல் வருதல் வேண்டும். அதாவது அதற்கேற்ற விதத்தில் நாம் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். நாம் எமது சொற்கள் என்ற மந்திரச் சுவரை எழுப்புவதன்மூலமாக குழந்தை தன்னைப்பற்றிய ஒரு நேர்ப்படியான (Positive) சித்திரத்தை அதில் வரையும் நிலைக்கு நகர்த்த வேண்டும். கீழுள்ள உதாரணங்கள் இதை விளக்குகிறது:

பயனுள்ள புகழ்ச்சி: அந்தக் காரை கழுவியதற்கு உங்களுக்கு நன்றி. அது இப்போது புதுக்கார்போல வந்துவிட்டது.

குழந்தை ஊகிக்ககூடிய முடிவு: நான் ஒரு நல்ல வேலை செய்திருக்கிறேன். எனது வேலை பாராட்டப்படுகிறது.

(பயனற்ற புகழ்ச்சி: நீங்கள் அருமையான பிள்ளை)

பயனுள்ள புகழ்ச்சி: உங்களது வாழ்த்து மடல் எனக்கு நன்றாகப் பிடித்தது. அது மிகவும் அழகாகவும் உள்ளார்த்தம் பொதிந்த ஒன்றாகவும் இருந்தது.

குழந்தை ஊகிக்கக்கூடிய முடிவு: எனக்கு நல்ல ரசனை இருக்கிறது. என்னுடைய தெரிவுகள் குறித்து நான் பயப்படத் தேவையில்லை.

(பயனற்ற பாராட்டு: நீங்கள் எப்போதுமே நல்ல அக்கறையுள்ள ஒரு பிள்ளைதான்)

பயனுள்ள புகழ்ச்சி: உனது கவிதை எனது இதயத்துடன்பேசியது.

ஊகிக்கக்கூடிய முடிவு: எனக்கும் கவிதை எழுதமுடியும்! எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது.

(பயனற்ற புகழ்ச்சி: உங்கள் வயதுக்கு நீங்கள் ஒரு கவிஞரே தான்)

பயனுள்ள புகழ்ச்சி: நீ செய்திருக்கும் புத்தகப் பெட்டி மிகவும் அழகாக இருக்கிறது.

ஊகிக்கக் கூடிய முடிவு: நான் இவற்றை செய்யும் திறமை உடையவன்தான்.

பயனற்ற புகழ்ச்சி: நீ உண்மையிலேயே ஒரு நல்ல தச்சன்தான்)

(பயனுள்ள புகழ்ச்சி: உனது கடிதம் எனக்கு ரொம்பவும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஊகிக்கக் கூடிய முடிவு: என்னால் மற்றவர்களைச் சதோஷப்படுத்த முடியும்.

(பயனற்ற பாராட்டு: கடிதம் என்று வந்து விட்டால் நீ ஒரு அபாரதிறமைசாலி தான்!)

பயனுள்ள புகழ்ச்சி: பாத்திரங்களை நீ கழுவியது எனக்கு ரொம்பவும் உதவியாக இருந்தது... நல்ல சந்தோஷம் எனக்கு.

ஊகிக்கக் கூடிய முடிவு: நான் பிறருக்கு உதவியாக இருக்கிறேன்.

(பயனற்ற பாராட்டு: வேலைக்காரியை விட நன்றாகவே நீ செய்திருக்கிறாய்)

பயனுள்ள புகழ்ச்சி: நான் உங்களுக்கு அதிகமாக தந்துவிட்டேன் என்று சொன்னதற்கு நன்றி. நான் உங்கள் நடத்தையை மெச்சுகிறேன்.

ஊகிக்கக் கூடிய முடிவு: நான் நேர்மையாக நடந்து கொண்டதற்காக சந்தோஷமாய் இருக்கிறேன்.

(பயனற்ற புகழ்ச்சி: நீங்கள் ஒரு நேர்மையான பிள்ளை)

பயனுள்ள புகழ்ச்சி: நீ எழுதியிருப்பது எனக்குப் பல சிந்தனைகளை ஏற்படுத்தியது.

ஊகிக்கக் கூடிய முடிவு: நான் ஒரு சுயமான படைப்பாளியாக இருக்க முடியும்.

(பயனற்ற புகழ்ச்சி: உனது வகுப்புக்கு நீ எழுதி இருப்பது அபாரம். உண்மையில் நீ இன்னும் கற்பதற்கு நிறைய உண்டு!)

இத்தகைய கூற்றுகளும் அவை தொடர்பான குழந்தையின் நேர்ப்படியான முடிவுகளும்தான் மன ஆரோக்கியத்தினை கட்டியெழுப்புவதற்கான செங்கட்டிகள். எமது சொற்களை அடிப்படையாக வைத்து குழந்தைதான் என்ன முடிவை எடுக்கிறதோ அதைபிறகு அது தனக்குள் திரும்பத்திரும்பச் சொல்கிறது. யதார்த்த பூர்வமான நேர்ப்படியான கூற்றுகள் தனக்குள்ளே திரும்பத் திரும்பச் சொல்லப்படும் போது ஒரு குழந்தை தன்னைப் பற்றியும், தன்னைச் சூழவுள்ள உலகத்தைப்பற்றியும் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்ள உதவுகிறது.

## *விமர்சனம்: ஆக்க விமர்சனமும் அழிவு விமர்சனமும்*

ஒரு விமர்சனம் எப்போது ஆக்கபூர்வமானதாய் அமைகிறது. எப்போது அழிவு பூர்வமானதாக அமைகிறது? ஆக்கபூர்வ விமர்சனம், ஒருவிடயத்தை எப்படிச் செய்வது? எந்த விடயம் செய்யப்படவேண்டும் என்பதை சொல்லிக் கொள்வதுடன் நிறுத்திக் கொள்கிறது. குழந்தையின் சொந்த ஆளுமை குறித்து அது எந்த எதிர்ப்போக்கான கருத்தையும் சொல்வதில்லை.

பத்துவயதான லாரி கவனக் குறைவினால் கிளாசில் இருந்த பாலை சாப்பாட்டு மேசையில் கொட்டிவிட்டான்.

தாய்: ஒரு கிளாசை எப்படிப்பிடித்திருப்பது என்பதைத் தெரிந்துவைத்திருக்கும் அளவுக்கு உனக்கு வயது வந்து விட்டது. எத்தனை தடவை நான் உனக்கு சொல்லி விட்டேன். கவனமாக நடந்து கொள் என்று.

தகப்பன்: அவனுக்கு அது ஏலாது. அது ஒரு புத்தி கெட்டது. எப்பவும் அப்படித் தான் இருந்தது. இனியும் இருக்கப் போகுது!

லாரி ஊற்றியதே ஒரு ஐந்து காசு பெறாத பால். ஆனால், அந்த விடயத்தைத் தொடர்ந்து வந்த கடுமையான அவமதிப்பு, குழந்தையின் தன் நம்பிக்கையில் ஏற்படுத்தும் பாதிப்பின் பெறுமதியோ இதைவிட எவ்வளவோ அதிகமானது. ஒரு பிழை நடக்கும்போது, பிழை செய்தவரது இயல்பு குறித்து விளங்கப்படுத்துவதற்குரிய தருணம் அதுவல்ல. ஒரு தவறு நடக்கும் போது அந்தத் தவறினைக் கையாளுவதே சிறப்பானது . தவறு செய்தவரைக் கையாளுவது அல்ல.....

ஒரு குழந்தை தவறாக நடந்து கொள்ளும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இந்த உதாரணத்தைப் பாருங்கள்:


எட்டு வயதான மாட்டின் தவறுதலாக தன்னுடைய பாலை மேசை மீது ஊற்றி விட்டான். இதைத் தாய் கண்டு விட்டாள்: ''ஓ.... பால் ஊத்துப்பட்டிட்டுது...'' என்றவள், ''இதோ இன்னொரு கிளாஸ் பால் இருக்கிறது. இதோ துடைக்கும் துணியும் இருக்கிறது'' என்று கூறியபடி துணியையும் பாலையும் கொடுக்கிறாள். மாட்டின் ஒரு வகையான ஆறுதலுடனும் சுயநம்பிக்கையுடனும் தாயைப் பார்க்கிறான். 'நன்றி அம்மா' என்று முணு முணுக்கிறான். தாய் உதவிசெய்ய மகன் மேசையைத் துடைக்கிறான். அவள் எந்த விதமான, குழந்தையின் மனதை நோகச் செய்யும் அபிப்பிராயங்களையோ, பயனற்ற அறிவுரைகளையோ சொல்லவில்லை. இது தொடர்பாக பிறகு தாய் சொன்னது இது தான்:

''எனக்கு 'அடுத்தத்தடவை கவனமாக இரு'' என்றாவது சொல்ல வேண்டும் போலத்தான் இருந்தது. ஆனால் எனது மௌனத்தையிட்டு அவன் எவ்வளவு நன்றியுள்ளவனாக இருக்கிறான் என்பதைக்கண்டபோது நான் எதையும் சொல்லவில்லை. கடந்த காலம் முழுவதும் இத்தகைய கொட்டப்பட்ட பாலுக்காக கத்தியதில் கண்டதெல்லாம் அன்றைய முழு நாளையும் வீணாக்கியது மட்டும்தான்!

(வரும்)

## எமது சொற்களும் குழந்தைகளின் ஊகங்களும்

*ஆங்கிலமூலம்:*
*டொக்டர் ஹெய்ம் ஜீ ஜினோல்ட்*
*தமிழில்: அருண்*



# பிரகடனம்

தமிழில்: எம்.கே.எம்.ஷகீப்

பெண்-அழகிய மலர்.
நிறையக் கனவுகளும் அழகுகளும்..
அன்பும் மகிழ்வுமாய்.....அவள்
............எனினும்
ஓர் உழைப்பாளியாய்
ஆடை தைப்பவளாய்
விற்பனைப் பெண்ணாய்
தாதியாய் உதவியாளாய்.
பணி செய்து தியாகித்து.......
..................
துன்பத்திலேயே அவள் வளர்ந்தாள்!

நான்-
தவறாக வழி நடத்தப்பட்ட ஒரு பெண்
காரணமின்றி அடிபட்டவள்
வாயடைக்கப்பட்டவள்
வல்லுறவுக்குள்ளானவள்
யுத்தம் என்னை பாதிக்கப்பட்டவளாக்கிற்று.

மொட்டிலேயே கிள்ளியெறியப்பட்ட
ஒரு மலராய்.....நான்
வாடியும் வதங்கியும்...
எதுவுமற்று...

ஆயினும் நான்
ஒரு பெண்ணாய்ப் பெருமையுற்று
துணிவுறுகிறேன்.

ஆக்கிரமிப்புக்களில் அச்சுறுத்தப்படாது
எப்போதும் பலம் பெற்ற பெண்ணாய்
நான் இனி

இறந்த காலம் பின் கிடக்க
இனி
யதார்த்தங்களை எதிர்கொண்டு துணிந்து..
விடா முயற்சியுடன் என் உழைப்பு

எனை நோக்கிய கல்லடிகள்
இனியில்லாது நின்றெதிர்ப்பேன்

சந்தோஷங்களை எதிர்கொள்ளவும்
நீதி எங்கும்
வியாபித்து நிலை பெறும்வரை
வானம் நோக்கிச் சண்டையிடவுமே
நான் இனி !

"பிலிப்பைன்ஸ் போராளிப் பெண்களின் கவிதைகள்" தொகுப்பிலுள்ள ஒரு கவிதையின் தமிழாக்கம் இது. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தின் போது ஜப்பானிய இராணுவத்தினரால் பாலியல் அடிமைத்தனத்திற்கும், வல்லுறவுக்கும் உட்பட்ட பெண்களின் குரலாக இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் ஒலிக்கின்றன. அரை நூற்றாண்டு கால கவலைகளதும் நோவுகளதும் வெளிப்பாடாகவும், அதிலிருந்து விடுபடும் சுதந்திரப் பிரகடனமாகவும் இக் கவிதை வெளிப்படுகின்றது. நன்றி: Option

# துயருறும் இரவு

*அடுப்பு ஊதி,*
*உன்தலை முழுக்க சாம்பல் பூக்க*
*அதனை தட்டிவிட்டு சிணுசிணுப்பதும்,*
*உனைக் கருக்குவதும் இப்போதைக்கில்லை.*

*சொந்த மண்ணின் மணம் வந்தால்*
*கட்டில் மணக்குதென்பாய்,*
*வாப்பாவின் * "கப்றடி" மணமென்பாய்*
*கஷ்டப்படுவாய்.*

*உனதும் எனதும் பெருமூச்சுக்களை வந்து*
*கூட்டியள்ளிப் பார்த்துவிட்டுப் போகட்டும்,*
*அவர்கள் பதுங்கு குழியே பத்தி எரிந்து விடும்.*

வேண்டாம்; விட்டு விடு!
அதைப்பற்றியெல்லாம் கிண்டி விட்டு
நமது சொந்த மண்ணைப் பற்றி சொல்லியழ
எனக்கு இஷ்டமில்லை.

என்ன செய்ய..
தலை நகரத்து கடுங் குளிர் உன்னைத் தாக்கும் வரை
ஒரு கடுமையான இரவு உன்னைக் கவ்வி இழுக்கும் வரை
என்னைப் பற்றியதான உனது கடுப்பு கலையும் வரை
நீ படுத்தும், தனித்தும் இரு

உனது பற்கள் கொண்டு உனது விரல்களை கடி
உனது விரல்கள் கொண்டு உனது கண்களில் குத்து
அல்லது கால்களைச் சொறி,
அடர்த்தியான தலையைக் கோதி பேனெடு
அதற்குள் நான் வந்து விடுவேன்;
ஒரு நல்ல கவிதை என்னை அனுப்பி வைக்கும்.

*01.10.95*

* கப்றடி- முஸ்லிம்களின் அடக்கஸ்தலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யார் யார் வாய் தேடினும் மெய்ப்பொருள் காண்பது அரிது!

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் (யாழ்) விடுத்த அறிக்கை.

(சென்றஇதழ் தொடர்ச்சி)

இத்தகையதொரு பின்னணியில்தான் 1988ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. 1988இல் இருந்து நாம் வெளியிட்ட அறிக்கைகளை வாசித்து வருபவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிந்திருக்கும். அதாவது நாம் எவ்வித தயக்கமுமின்றி பல்வேறுபட்ட சக்திகளாலும் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களை கேள்விக்குட்படுத்தியது மட்டுமல்லாது முடியுமானவரை அச்செயற்பாடுகளின் பின்னணி அரசியலையும், மக்கள் முகம் கொடுத்த இடர்பாடான நிலையையும் ஆவணப்படுத்தி வந்துள்ளோம். எமது ஆவணங்கள் மூலம் எமது அரசியலையே நாம் கேள்விக்குட்படுத்தியது ஏனெனில், செயலிழந்து போயிருக்கும் எமது மக்களுக்கு செயற்படும் ஓர் இடைவெளியை உருவாக்குவதற்கும், இன்று தற்காலிகமாக ஆளுஸ்ம் செலுத்தும் 'குறுகிய தேசியவாத' அரசியல் அளவுகோயமான போக்குகளை முளையிலேயே கிள்ளி எறிந்து சூழலை மோசமாக்குவது நமது ஆதிக்க அரசியலின் இருப்பிற்கு அத்தியவசியமானதாகத் தோன்றியுள்ளது.

சின்னஞ் சிறார்களை ஆயுதபாணிகளாக்குவது, மரணத்தை மையப்படுத்திய தற்கொலை அரசியலின் ஆளுமை, மாற்றுக்கருத்துக்களுக்குத் தடை, வதைமுகாம்களின் கொடூரம், முஸ்லிம் மக்கள் படுகொலையும் வெளியேற்றமும்... இவையெல்லாவற்றையும் கணக்கில் எடுத்து ஆராயும் போது, எமது அரசியல் உள்ளடக்கம் ஒரு சந்ததியினரை முழுமையாக மரணத்தை நோக்கி இட்டுச்சென்ற வண்ணமுள்ளது. அதுமட்டுமன்றி, அவர்கள் மீது ஸ்ரீலங்கா அரச யந்திரங்களின் ஒடுக்குமுறையை தொடர்ந்து நிரந்தரமாக்குவதன்மூலம் சகல சமூகங்களையும் தொடர்ந்து ஒரு குரூர அரசியல் சூழலில் வைத்திருப்பது அவசியமாகியுள்ளது. இவ்வாறாக எமக்கு தெளிவாகத் தெரியும் ஒன்றை அந்த உண்மையை மக்களிற்கு எடுத்துக் கூறுவது அறிவுரீதியாகவும், உயர்ந்த தார்மீகக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் மிகச் சரியானது என நாம் நம்புகிறோம். ஆனால், உண்மைகளைப் பேசுதல் இன்று மிக ஆபத்தாக மாறியுள்ளது.

இன்றுள்ள இச்சூழலின் உருவாக்கத்திற்கு ஸ்ரீலங்கா அரசும், அதன் தென்பகுதி அரசியலும் எவ்வாறு தொடர்ச்சியாக பங்களித்து வந்துள்ளன என்பதில் எமக்குக் கருத்துக் குழப்பமோ தளம்பலோ இல்லை. இன்று சாதாரண தமிழ் மக்களின் யதார்த்த நிலையைப் புரிந்துக்கொள்ள அத்தெளிவு அவசியமே ஆயினும், அவ்வாறான விளக்கங்களை கொடுப்பதில் மட்டும் எமது சமூகப் பொறுப்பை தட்டிக் கழித்துவிட முடியாது. சகல வகையான ஒடுக்குமுறைக்கும் ஏதோ ஒரு வரலாற்றுக் காரணியையோ அல்லது காரணிகளையோ காரணங்காட்டி நியாயப்படுத்தி விட முடியும். இதன் மூலம் எமக்கு தனிப்பட்ட முறையில் பிரச்சினை ஏற்படாது தற்காலிகமாக வாழ்ந்து கொள்ளவும் முடியும். ஆனால், அவ்வாறு செய்வது சரியானதா? அல்லது எமது சமூகத்தின் ஆரோக்கியமற்ற அரசியலைக் கண்ணுற்று, அத்தவறுகளுக்கு நாமும் ஒருவகையில் பொறுப்பு என உணர்ந்து செயற்படுவது சரியானதா? அவ்வாறான ஓர் குற்ற உணர்வினால் உந்தப்படாமல், நடப்பவற்றை நியாயப்படுத்தி வாளாவிருப்பின், முழுச் சமூகமும் மீட்சி பெறாத ஓர் அழிவு நிலையை நோக்கியே தள்ளப்படும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தோல்வியுற்றதை அடுத்து 08.05.95இல் நாம் ஒரு சிறிய அறிக்கையை வெளியிட்டோம். அதில் தென்பகுதியில் சமாதானத்தை விரும்பும் சக்திகளின் கைகள் ஓங்கக்கூடிய ஓர் ஆரோக்கியமான காலகட்டத்தை தமிழ் மக்களுக்கு சாதகமாகச் சரியாகப் பயன்படுத்தாது, மீண்டும் மக்களை போரிற்குள் தள்ளிவிடும் தாற்பரியத்தைப்பற்றி விளக்க முயற்சித்திருந்தோம். குறிப்பாக நீண்ட காலமாக வளர்க்கப்பட்ட சிங்கள ஆதிக்க கருத்தமைவுக்குள் இருக்கும் அரசயந்திரங்களின் பிடியிலிருந்து சிங்கள மக்களை விடுவித்து சமாதானத்தின் பால் ஈர்க்க அச்சூழல் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அதன் பின்னர் 04.07.95இல், ''யாழ் இராணுவ நடவடிக்கை, அதன் பின்னணித்தாக்கங்கள்'' என்னும் தலைப்பில் எம்மால் வெளியிடப்பட்ட சிற்றறிக்கையானது, இராணுவ ஏவுகணை வீச்சு, விமானக்குண்டுத் தாக்குதல்கள், குறிப்பாக நவாலித் தேவாலயத்தின் மீதான தாக்குதல் போன்றவற்றையும் அதன் அரசியல் பின்னணிகளையும் ஆராய்ந்தோம். அத்துடன் தமிழ் மக்களின் அனுபவம், மக்களை விடுதலைப் புலிகள் எவ்வாறு கையாண்டார்கள், அங்கு சிறுவர்களின் மனோ நிலையும் அவர்களை புலிகள் கையாளும் முறை போன்ற விடயங்களை வெளிக்கொணர்ந்தது.

10.08.95இல் வெளியிடப்பட்ட ''போர்க்காலத்தில் மக்களின் நலன், நம்பிக்கையற்ற எதிர்காலம்'' எனும் அறிக்கையில் நாகர் கோயிலில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பான தகவல்கள் வெளிக்கொணரப்பட்டன. அதன் பின்னர் 08.11.95இல் ''யாழ் தாக்குதலும் பொதுமக்களும்'' எனும் சிற்றறிக்கை (இல.9) வெளியிடப்பட்டது. அதில், மக்கள் எவ்வாறு தென்மராட்சி நோக்கி அகதிகளாக குடிபெயர்கிறார்கள், எத்தனைபேர் குண்டுத்தாக்குதல்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள், அகதிகளின் உண்மை நிலை என்ன, நிவாரண நடவடிக்கைகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பவற்றை உள்ளடக்கியிருந்தோம். யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் குழுவானது தமது அறிக்கையில் கூறிய பல விடயங்கள் மேற்கூறிய எமது அறிக்கைகளில் முன்னரே உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஒரு பாரிய மானுடப் பிரச்சினை எவ்வாறு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ் மக்களின் வெளியேற்றம் பற்றி நீண்டதோர் அறிக்கை புத்தகவடிவில் வெளிவந்தது. அதனடிப்படையிலேயே பி.பி.சி. ஆங்கில, தமிழ் சேவைகளில் குறிப்புகள் ஒலிபரப்பப்பட்டன. இதனை செவிமடுத்தபின்னரே யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் ''சோகமும் ஆத்திரமும்'' கலந்த அறிக்கை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இவ்வாத்திரத்திற்கு பிரதான காரணம் பி.பி.சி. முகவர் தமது குறிப்பிலே பக்கசார்பற்ற ஒரு ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை என அறிமுகப்படுத்தி அதன் சாராம்சத்தை வெளியிட்டதுதான். அவரின் இக்கணிப்பு நீண்ட காலமாக எமது அறிக்கைகளை ஆராய்ந்ததன் ஊடாக ஏற்பட்டதேயாகும். பெருமளவில் கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி எமது பல அறிக்கைகள் வெளிவந்துள்ளன. கிழக்கு மாகாணத்துக்கு சென்று வரும் வாய்ப்பு பி.பி.சி. முகவருக்கு இருப்பதால் அங்குள்ள நிலைமைகளுடன் எமது அறிக்கைகளை ஒப்பிடுவதற்கு அவருக்கு சந்தர்ப்பமுண்டு. அதுமட்டுமன்றி கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத்திட்ட பிரச்சினை (Land, Human Rights Eastern Predicament. Rep.11), மணலாறு குடியேற்றம் (Manal Aru to Weli Oya--Sprit of July '83) தமிழ் - முஸ்லிம் சிக்கல், இராணுவத்தின் கொடூரங்கள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியும் பல அறிக்கைகளை நாம் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ளோம்.

எமது முதல் 10 அறிக்கைகளையும் சுருக்கி ஒரு புத்தக வடிவில் 'எவரோ ஒருவரின் யுத்தம்' Some one Else's War எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. அது 'மோர்ஜ்' ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்டது. இதுவும் 'யுக்திய' பத்திரிகையாளர்களால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகவடிவில் அச்சிடப்பட்டு, பரவலாக சிங்கள மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது. தமிழ் மக்களின் உண்மை நிலையை சிங்கள மக்கள் உணர இந்நூல் கணிசமான பங்காற்றியது என்பதை தென்பகுதியிலுள்ள சமாதான விரும்பிகள் பலரும் அறிவர்.

எமது தொடர்ச்சியான பணியினையும், அதன் அர்த்தத்தையும் பங்களிப்பையும் வரலாறும் மக்களும் மதிப்பீடு செய்யட்டும். ஆனாலும் எம்மைப் பொறுத்தவரை எமது சமூகம் மிகவும் ஒரு சிக்கலான நிலையில் இன்றுள்ளது. எம்மக்களை வழிநடத்தும் அரசியலின் இயக்கபோக்கு அவர்களை கையாலாகாத்தனம் மிக்க பலமிழந்தவர்களாக ஆக்கியுள்ளது. நமது எதிர்காலம் கேள்விக்குறிகள் நிறைந்ததாகவும், இருள்மயமானதாகவும் காணப்படுகின்றது. அத்துடன், இன்று இலங்கையில் தென்பகுதியில் காணப்படும் சூழலின் எந்த ஓர் ஆரோக்கியமான வளர்ச்சிப்போக்கையும் ஊக்குவிக்கவோ அல்லது தமிழ் மக்களின் நலனுக்காக சாதகமாகப் பயன்படுத்தவோ முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக ஆரோக்கியமான போக்குகளை...

...லுக்கும் அப்பால் எம்மக்களின் நலனை பிரதிபலிப்பதற்கும் ஆகும்.

இதுகாலவரையும் புத்தக வடிவிலான 13 நீண்ட அறிக்கைகளையும், 6 விஷேட அறிக்கைகளையும், 10 சிற்றறிக்கைகளையும் நாம் வெளியிட்டுள்ளோம். அவை பெரும்பாலும் ஆங்கிலத்தில் வெளிவந்ததனாலும் ஆங்கிலப் பத்திரிகைகள் தமக்கேற்ற வகையில் தேர்ந்தெடுத்த சில பகுதிகளை மட்டும் பிரசுரித்ததாலும் இவ்வறிக்கையின் முழுமையான உள்ளடக்கம் தமிழ் மக்களைச் சென்றடையவில்லை. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சில சிற்றறிக்கைகளைக் கூட வீரகேசரி போன்ற பத்திரிகைகள் பிரசுரிப்பதில் அக்கறை எடுக்கவில்லை. ஒரு சில அண்மைய சிற்றறிக்கைகளே சில தமிழ்ப் பத்திரிகைகளில் சிரமத்துடன் பிரசுரிக்கப்பட்டன. இவை அனைத்தையும் தமிழில் கொண்டு வருவதில் நாம் முகம் கொடுத்த சிரமங்கள் பல.

ஆனாலும் இவ்வறிக்கைகள் சர்வதேச ரீதியில் குறிப்பாக மனித உரிமை ஸ்தாபனங்களாலும் மற்றும் அரசியல் ஆய்வாளர்களினாலும் பெரிதும் மதிக்கப்படுகின்றன. அத்துடன் இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் அப்பால் நின்று தமிழ், முஸ்லிம் மக்களின் உண்மை நிலையைப் புரியவைப்பதில் இவ்வறிக்கைகள் வெற்றி கண்டுள்ளன. அதேவேளை எமது செயற்பாட்டைக் கண்டித்து வெளியிடப்பட்ட 27 பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கைகள் போன்றவை சர்வதேச சமூகம் மத்தியில் ஒரு வித தாக்கத்தையும் ஏற்படுத்தாமைக்குக் காரணம், இவ்வாசிரியர்கள் பல உண்மைகளை வலிந்து மறைக்க முயற்சித்து ஒரு பிரச்சாரப் பாணியில் தமது கருத்துக்களை செயற்கையாக முன்வைத்து வருவதாகும்.

அடுத்த இதழில் முடியும்...

# அமைச்சர் சந்திரசேகரனுக்கோர் பகிரங்கக் கடிதம்!

அமைச்சர் சந்திரசேகரனுக்கு ஒரு அவசரக்கடிதம்!

அன்புடன் அமைச்சருக்கு வணக்கம். இப்போதெல்லாம் உங்களை அண்ணன் என்று அழைப்பதை விட அமைச்சர் என்று அழைப்பதையே நீங்கள் விரும்புவீர்கள். உங்களுக்கு இக் கடிதத்தை 22ம்திகதிய வேலைநிறுத்தப் போராட்டம் சம்பந்தமாகவே எழுதுகிறேன்.

இவ்வேலைநிறுத்தப் போராட்டம் அரைகுறை திட்டமிடல் என்பதும் ஒரு சிலரின் சுய விளம்பரத்திற்காகவும் செல்வாக்கு சரிக்கட்டலுக்காகவும் உருவாக்கப்பட்டது என்பதும் வெளிப்படை. ஆனால், இவ் வேலைநிறுத்தத்தில் மலையகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்ற உங்களுடைய தொழிற்சங்கத்தின் நிலைப்பாடு கோமாளித்தனமாக அமைந்தது வியப்புக்குரியதாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் போதாது என்பது உண்மை. 8/= சம்பள உயர்வு கூட இன்றைய வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட எந்தவகையிலும் நியாயமான தொகை அல்ல. ஆனால் சிலரின்சுயநலனுக்காக இப்போராட்டம் பயன்படுத்தப்பட்டாலும் அதன் வெளிப்படையான நோக்கம் தோட்டத் தொழிலாளர்களின் வருமானத்தை உறுதிப்படுத்திக் கொள்வதாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்நிலையில் நீங்கள் இப்போராட்டத்திற்கு எத்தனை முழு மனதுடன் ஆதரவு கொடுத்தீர்கள்?

வேலைநிறுத்தத்தில் உங்களுடைய நிலைப்பாட்டை அறிய உங்கள் தொழிலாளர் முன்னணியின் அங்கத்தவர்கள் 21ம்திகதி மாலைவரை மலையக நகரங்களில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்திற்கு சென்று எவ்விதமான சரியான பதிலும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார்கள். அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குவதற்காக தங்கள் சங்க அங்கத்தவர்களுக்கு துரோகம் செய்யும் அளவுக்கு தங்கள் அமைச்சர் பதவி தங்களுக்கு துணிவு கொடுத்து விட்டதா?

உங்களுடைய பிராந்திய காரியாலயத்திற்கு எழுத்து மூலமாக எவ்வித அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. உங்கள் சங்க தோட்டக் கமிட்டித் தலைவர்களுக்கு எவ்வித அழைப்பும் வழங்கப்படவில்லை. ஆனால், 21ம்திகதி கட்சிக் கிளைகள் அனைத்தையும் அழைத்து ஒப்புக்காக ஒரு கூட்டத்தை கூட்டி வேலை நிறுத்தத்திற்கு விமர்சனரீதியாக ஆதரவு கொடுப்பதாக கூறி நல்ல பிள்ளையாக நடித்தீர்கள்.

இந்த வேலைநிறுத்தத்தினால் உங்களுடைய அரசியல் எதிரி தொண்டமான் ஆதாயம் அடையப்போகிறார் என்ற ஆதங்கத்தை விட அரசாங்கத்திற்கு ஆதரவாளனாகக் காட்டிக் கொள்வதிலேயே உங்களுடைய முழுக்குறியும் இருந்தது. இதை உங்களால் மறுக்க முடியுமா?

குறைபாடுகளுடைய கோரிக்கைகளுடன் வேலை நிறுத்தம் நடைபெறுவதாக குறைப்பட்டுக் கொள்கிறீர்கள். உங்களுடைய முழுமையான கோரிக்கைகளுடன் கடந்த 1 1/2 வருடங்களில் எத்தனை முறை மலையக மக்களிடம் போராட்ட அறைகூவல் விட்டிருக்கிறீர்கள்? அல்லது மலையக மக்களுக்கான உரிமைப் போராட்டத்திற்கு அவர்களை தயார் படுத்தியுள்ளீர்கள்.

ஆறு அம்சக்கோரிக்கையின் பிரகாரம் அரசுடன் இணைந்தீர்கள். அதுவும் நிபந்தனையுடன் ஆதரவு என்றீர்கள். உங்களுடைய ஆதரவின் தயவில்தான் இன்றைய அரசாங்கம் ஆட்சியை அமைத்தது. அரசாங்கம் அமைத்த கையோடு இவ்வரசு உங்களுக்கு பிரதியமைச்சர் பதவியை வழங்கியது. ம.ம.மு.வையும உங்கள் ஆறு அம்சக் கோரிக்கையையும் மறந்தது.

கடந்த 1 1/2 வருடங்களில் பலமுறை இவ்வரசாங்கத்தால் நீங்கள் ஏமாற்றப்பட்டீர்கள். அப்போது நீங்கள் விதித்த நிபந்தனைகள் சவால்களுக்கு உள்ளான போது இப்போதுள்ள நாற்காலிச் சுகம் மேலதிகமாக உங்களைச் சிந்திக்கத் தூண்டவில்லை.

நீங்கள் உங்கள் நாற்காலியை கைவிட ஒரு போதும் விரும்பமாட்டீர்கள் என்பதால்தானே அரசாங்கம் அந்த ஆறு அம்சக்கோரிக்கையைக் கைவிட்டது.

இந்த நிலையில் அரசியல் ரீதியான உரிமையைப் பெறப் போராட்டம் நடத்த வேண்டும் என்று மேடையில் பேசிவிட்டு வேலைநிறுத்தப் போராட்டத்திலிருந்து பட்டும் படாமல் நழுவப்பார்க்கிறீர்கள். தலைவரே மலையகத்தில் உள்ள படித்தவர்கள், புத்திஜீவிகள், தொழிலாளிகள் அனைவரையுமே உங்கள் அறிவாற்றலை விட குறைந்தவர்கள் என மட்டமாக எடைபோட்டு விட்டீர்களே, உங்களோடு முன்னர் இருந்தவர்களில் பல பேர் புத்திஜீவிகள் என்று தெரிந்திருந்தும் துணிந்து உங்களின் துரோகத்தனத்தை இனப்பற்றாகக் காட்ட முற்படுகிறீர்களே. உங்களோடு இருந்து கடந்த 50 வருட அரசியலை விமர்சித்தவர்கள். உங்களுடைய அப்பட்டமான அநியாயத் தீர்மானங்களை அப்படியே ஒத்துக்கொண்டு வாய் பொத்தி கைகட்டி மௌனியாக இருப்பார்கள் என்று நீங்கள் தப்பாக எடை போட்டால் அது தவறு தலைவரே!

ஏன், உங்கள் பின் வந்தோம்? 150 வருட அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்! ஏமாற்றுகின்ற தலைமைத்துவத்தை மலையகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். மலையக மண்ணிலே சுதந்திரமாக வளர வேண்டும். குடியேற்றங்கள் மூலம் மலையக கலாசாரம் சீரழிக்கப்படுவது தடுக்கப்படவேண்டும். செயற்கையான மாகாண மாவட்ட எல்லைக்கோடுகளைத் தகர்த்தெறிந்து மலையக சமூகத்தினர் முழுபேரும் ஒரே மாகாணத்தில் வாழ்வதற்கான நாளை நோக்கி நாம் நகர வேண்டும். இந்தக் கோசங்கள் தானே, இந்த இலக்குதானே அத்தனை முற்போக்காளரும் தங்களை ஆதரிக்கக்காரணமாயிற்று.

இதற்காக அன்றி சந்திரசேகரன் என்ற தனி மனிதன் மேல் கொண்ட மையலினால் இ.தொ.கா. விற்கு எதிராக ஒரு பிரதி அமைச்சரை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தினால், அதிகார, ஆட்சி சுகபோகத்தால் திழைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பினால், உங்கள் பின் எவரும் அணிதிரளவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அரசாங்கம் இந்த வேலைநிறுத்தம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் 14 அம்ச தீர்வை குறிப்பிட்டுள்ளது. இந்தத்தீர்வு வெளியீட்டிற்கு உங்களுடையதும் உங்கள் பொதுச்செயலாளரினதும் பங்களிப்பு மிகக் கூடுதலாக இருந்ததாகவும் இந்தத் தீர்வை நீங்களே எழுதி பெருந்தோட்ட அமைச்சர் ஊடாக வெளியிட்டதாகவும் உள்ள கதை பரமரகசியம். இந்த காகித ஒப்பந்தத்தைப் பார்த்து நீங்கள் திருப்திப்பட்டுக்கொண்டதாக தலவாக்கொல்லை கிளைக் கூட்டத்திற்கு வந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வாறான காகித ஒப்பந்தத்திற்கெல்லாம் திருப்திப் பட்டுக்கொள்வதற்கு உங்களைப்போன்ற புதிய அரசியல் வாதிகள் தயாராக இருக்கலாம். ஆனால் காலம் காலமாக ஏமாற்றப்பட்டுள்ள மலையக மக்கள் தயாராக இல்லை.

இந்நடவடிக்கையில் இருந்து ஒன்று

—▷15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌன யுத்தம்

## Article 19 கண்டனம்.



வடக்கு - கிழக்கில்மனித உரிமை மீறல் மற்றும் அதையொத்த சம்பவங்களை விசாரணை செய்வதற்கும் அதனைப் பற்றிய செய்தி திரட்டுவதற்குமுள்ள தடைகளை உடனடியாக நீக்க வேண்டும்.

✱வடக்கு - கிழக்கு யுத்தத்தில் இடம் பெறுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்ற மனித உரிமை மீறல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றி பக்கசார்பற்ற பூரண விசாரணையொன்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்க ள் சட்டத்திற்கு முன்னால் கொண்டுவரப்படுவதுடன் அவ்வாறன சம்பவம் விசாரணை மூலம் பெறப்படுகின்ற் தகவல்களைப் பகிரங்கப்படுத்தவும் வேண்டும்.

✱ அரசாங்க அதிகாரிகளினால் பத்திரிகை ஆசிரியர்கள் மீது தொடுக்கப் பட்ட அநியாயமான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் விலக்கிக் கொள்ள வேண்டும்.

✱ அரசாங்க அதிகாரிகளினால் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கின்ற பத்திரிகைகளுக்கும் பத்திரிகையாளர்கள் மீதும் ஏற்படுத்தப்படும் தொல்லைகளை நிறுத்த வேண்டும்.

✱ எஸ்.ஜே.டி. தம்பையாவின் Buddism Betrayed (பௌத்தத்தின்துரோகம்) எனும் புத்தகத்தின் மீதான தடையை நீக்கவேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை உள்ளடக்கிய நீண்ட அறிக்கை ஒன்றை Article 19 எனப்படும் தணிக்கைக்கெதிரான சர்வதேச நிறுவனத்தினர் (International Centre Against Censorship) வெளியிட்டுள்ளனர். அரசு தணிக்கையை மீண்டும் அமுல்படுத்தியிருக்கிற நிலையில் இவ்வறிக்கை மிகவும் கவனத்திற்கொள்ள வேண்டிய ஒன்று.

பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய அரசின் முன்னைய வாக்குறுதிகளை ஆகக் குறைந்தது 1996க்குள்ளேனும் நடைமுறைப்படுத்துங்கள் என கேட்டுள்ள இவ்வமைப்பின் மேற்படி அறிக்கையில் தொடர்புசாதனங்கள் மீதான அரச வன்முறைகளை கடுமையாக கண்டித்துள்ளது. ''மௌன யுத்தம்'' (Silent war) எனும்தலைப்பில் வெளியிட்டுள்ள இவ்வறிக்கைப்புத்தகத்தில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கெதிரான அரசின் நடவடிக்கைகள் பற்றிய பின்னுக்கும் பல தகவல்கள் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

'தேசிய பந்தோபஸ்து எனும் பேரில் பத்திரிகைத் தணிக்கை' எனும் தலைப்பில் எழுதப்பட்ட அறிக்கையொன்றும் இதில் அடங்கும்.

இலங்கையில் தொடர்ச்சியாக பத்திரிகைகளின் மீது போடப்பட்ட தணிக்கைகளைதாம் பதவிக்கு வந்துவிட்டால் முடிவுக்கு கொண்டுவருவதாக தேர்தல் மேடைகளில் வாக்குறுதியளித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க; ஆட்சியைக்கைப்பற்றி மூன்று மாதம் முடிவதற்குள் அவசரகாலச் சட்டத்தை பிரயோகித்து பத்திரிகைத் தணிக்கையை அமுலுக்குக் கொண்டு வந்தார். அதனைத் தொடர்ந்து வடக்கில் யுத்தநிலைமை தொடர்பாக அறிவதற்கு பத்திரிகையாளர்கள் போவதற்கும் இராணுவத்தினரால் அனுமதிமறுக்கப்பட்டது. இத்தணிக்கையின் காரணமாக யுத்தத்தினால் ஏற்பட்ட உளவியல் மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான பிரச்சினை பற்றி மக்களுக்கு அறிய முடியாமல் போனது.

உத்தியோகபூர்வமாக இத்தணிக்கை 1995 செப்டம்பர் மாதம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அது மூன்று மாதங்களுக்குப் பின்னர் நீக்கப்பட்டது. ஆனால், ரிவிரெச இராணுவ நடவடிக்கையை திட்டமிட்டபடி செய்து யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிய பின்னரே அது நீக்கப்பட்டது. இன்றும் கூட பத்திரிகையாளர்கள் போவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. யுத்தத்தினால் அநாதரவானவர்கள் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கானோர் வாழும் இடங்களும் இத்தடை செய்யப்பட்ட இடங்களுக்குள் அடக்கம்.

தணிக்கை போடப்பட்டு அது நடைமுறைபடுத்தப்பட்டபோது பத்திரிகை தணிக்கை பற்றிய செய்திகள் கூட தணிக்கைக்கு உள்ளானது. சர்வதேச தொடர்பு சாதனங்களினால் வெளிவந்த செய்திகளை ஆதாரம் காட்டிக்கூட தேசிய தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிடுவதும் தடுக்கப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் தணிக்கை அதிகாரி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை தன்னிஷ்டப்படி திரித்தார்.

இதைவிட மோசமானதென்னவென்றால் யுத்தத்தினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட நிலையினை பத்திரிகையாளர்கள் ஆராய்வதற்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது. யுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது அரசின் உத்தியோகபூர்வ செய்தியையே நம்பியிருக்க வேண்டியேற்பட்டது

யுத்தத்தின் காணமாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தொகையையும் அவர்களின் நிலைமை தொடர்பாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிடுவது கட்டுப்படுத்தப்பட்டது. அது பற்றி அறிக்கைகளை வெளியிட்ட மனித உரிமைகள் அமைப்புக்களுக்கு எதிராக அரசும் அறிக்கை வெளியிட்டிருந்தது. (மேர்ஜ் போன்ற அமைப்பையே இந்த இடங்களில் குறிப்பிட்டுள்ளது)

இராணுவத்தால் ஏற்பட்ட தடைகள் பற்றிய பல புகார்கள் பத்திரிகையாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மாத்திரமே சில நேரங்களில் பத்திரிகையாளர்களை செல்ல இராணுவம் அனுமதிக்கிறது. விடுவிக்கப்படாத அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் செல்வதற்குத் தடை. இதற்கான தெளிவான காரணங்கள் இல்லை. விடுவிக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்படாத பிரதேசங்கள் பற்றிய உத்தியோகப்பூர்வ பட்டியல்கூட இது வரை இல்லை.

இங்கு நடப்பவைப்பற்றி உலகத்துக்கு தெரியாமல் இருப்பதற்காக இலங்கை இராணுவம் செய்யாதது எதுவுமில்லை. இருக்கிற சிறிய ஜனநாயக சட்டகத்திற்குள் யுத்தமொன்று இடம்பெறும் போது என்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு நல்லபாடம். பத்திரிகையாளர்களுக்கு பொய்கூறுவது பாதுகாப்புத் துறையினரின் முக்கிய நோக்கம்.

சில வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் புதுமையான இடையூறுகளுக்கு முகம் கொடுக்கவேண்டியேற்பட்டது. இந்திய தொலைக்காட்சியைச் சேர்ந்த குழுவொன்று வவுனியா சோதனைமுகாமில் ஐந்து மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது என்பதும் பதிவானது.

கிழக்கு மாகாண புலிகள் இயக்க பிரதிநிதியை சந்திப்பதற்காக சென்றிருந்த பிரித்தானிய தொலைக்காட்சி குழுவொன்று கைது செய்யப்பட்டு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அசோசியேட்ஸ் செய்திச் சேவையைச் சேர்நத செய்தியாளர் ஒருவர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு மூன்று மணித்தியாலங்கள் விசாரணைக்குள்ளானார். கிழக்கு மாகாணத்தின் புலிகள் பொறுப்பாளருடன் அவர் நடத்திய செவ்வி அடங்கிய 16 வீடியோ நாடாக்களும் கைப்பற்றிக் கொண்டு செல்லப்பட்டது.

வடக்கு பகுதியில் இராணுவத்தின்கட்டுப்பாட்டில் இருக்கின்ற மன்னார் பிரதேசத்திற்கு செல்வதில் தாம் எதிர்நோக்கிய இடையூறுகளை அனுபவரீதியாக போல் வோர்சன் இவ்வாறு குறிப்பிடுகிறார். பத்திரிகையாளர்கள் மன்னார் வருவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தவர் பிஷொப் அவர்கள்.

''சாதாரணமாக 8 மணித்தியாலம் செலவிடக்கூடிய மன்னார் பிரயாணத்துக்காக 125 பேரளவில் படகில் ஏற்றப்பட்டிருந்தார்கள். பிஷொப் அவர்களைச் சந்திப்பதற்காக செல்வதொன்றும் கடினமான காரியம் என்று நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் படகில் ஏற்றப்படும் போதே சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.படகில் எவரெவர் செல்லவேண்டுமென்பதை தீர்மானிப்பவர்கள் இலங்கை கடற்படையினர். பத்திரிகையாளர்களுக்கு படகில் இடமில்லை. கொழும்பு இராணுவத்தலைமை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்தித்தந்தால் சிக்கலை தீர்க்கலாம் என பத்திரிகையாளர்களால் கோரப்பட்டது. ஆனால், கடற்படை அதிகாரியோ கொழும்புடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி தொடர்பு இல்லை எனக் கூறினார். தான் கூறிய பொய்யில் உள்ள முட்டாள்தனம் பற்றி கூட அதிகாரி தெரிந்திருக்கவில்லை. ஆரம்பத்தில் இதே அதிகாரிகள் மன்னார் ஒரு விடுவிக்கப்பட்ட பகுதியென்றும் பின்னர் அது விடுவிக்கப்படாத பகுதியென்றும் முரணான பதில்களைத் தந்தார்கள்.

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களோடு தடையின்றி பத்திரிகையாளர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகள் இல்லை. வவுனியாவில் தாம் ரோமன் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்தபோது பொலிசாரால் அவ்விடத்திலிருந்து துரத்தப்பட்டதாக ஒரு பத்திரிகையாளர் ஆர்ட்டிகள் 19க்கு முறைப்பாடு செய்திருக்கிறார்கள். வவுனியாவிலேயே அரச ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தினர் இடம் பெயர்ந்தோர்களுடன் சுதந்திரமாக பேட்டிக்காண முடிந்தது. அவர்கள் அரசின் பிரச்சாரத்துக்கு ஊக்கியாக செயல்பட்டதே இதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுகின்ற சமரின்போது இடம்பெயர்ந்தோர் பற்றிய எண்ணிக்கை ஆரம்பத்திலிருந்து இன்று வரை முரண்பாடானதாகவே இருக்கிறது.

**என்.எஸ்.குமரன்**

---

# வைத்தியர்களின் வேலை நிறுத்தம்:

# ஆதரவில்லை, ஆனால் வென்றார்கள்!

வடக்கில்நடைபெறும்ரிவிரச-2இராணுவ நடவடிக்கை தொடர்பாக மக்கள் மத்தியில் செய்யப்படும்பிரசாரங்களை நோக்கும்போது வெற்றியளிப்பதாகவே தெரிகின்றபோதும் பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கு தெற்கில் இன்னொரு ஒப்பரேஷன் ஒன்றையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இதனை Midweek Mirror எனும் ஆங்கிலப் பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருந்தது: Operation Successfull Patient Dead. (ஒப்பரேசன் வெற்றி; நோயாளி காலமானார்)

உண்மையில் வைத்தியர்களின் வேலை நிறுத்தம்காரணமாக, சாதாரண பொதுமக்கள் மிகவும் இக்கட்டான நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

வைத்தியர்களின் வேலைநிறுத்தத்திற்கு பிரதான காரணம், 'உள்ளகப்' பயிற்சியை முடித்துக்கொண்ட வைத்தியர்கள் பத்துப் பேருக்கு பட்டியலில் முன்னுரிமை அளிக்கப்பட்டதே என்று சொல்லப்படுகிறது. இவ்வைத்தியர்கள் பத்துப்பேரும் கியூபாவிற்கு வெளிநாட்டு புலமைப்பரிசிலின் அடிப்படையில் சென்று மருத்துவம் படித்தவர்களாவர்.

இவர்கள் புலமைப்பரிசில்கள் பெற்றுச் சென்றது முன்னைய ஆட்சியின் போது. இவர்களை முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்தது அநீதியானது என்பது அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அபிப்பிராயமாக உள்ளது.

உள்ளக வைத்தியர்களை நியமிக்கும், தகுதிப்பட்டியலில் உள்ள இப்பத்து மருத்துவர்களும் கியூபா பயிற்சி நெறியை பூரணப்படுத்தவில்லை என்பதாலேயே இச்சங்கம் இவ்வாறு குறிப்பிடுவதாக சொல்லப்படுகிறது.

எனினும், சுகாதார அமைச்சு, இவ்வாறான நியமிப்பு சட்டவிரோதமானதல்ல எனக் குறிப்பிடுகின்றது.

இதனை மே 4ம்திகதி ''தினமின'' பத்திரிகை இவ்வாறு வெளியிட்டிருந்தது.

''....கடந்த வருடம் 'உள்ளகப்' பயிற்சி தொடர்பாக பட்டதாரிகள் நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தகுதிப்பட்டியலின் இறுதிப் பகுதியில் அதாவது தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டுக்கல்விவாய்ப்பைப் பெற்றுவரும் மருத்துவ பட்டதாரிகளுக்கு ஒதுக்கப்படும் பகுதியில் உள்ளடக்கப்பட்ட பத்துப்பேரும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். கியூபா கல்வியைப் பெற்ற இப்பிரிவினர் கியூபா அரசினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் மூலம்கியூபாவில்கல்வியைப்பெற்றுக்கொண்டதனால் தாம் இரண்டாவது பகுதியில் அதாவது அரசு வழங்கும்புலமைப்பரிசில்கள் மூலம் கல்விவாய்ப்பைப் பெற்றவர்கள் பகுதிக்கு உரியவர்கள் எனக்குறிப்பிட்டனர்.''

கியூபா தேசத்தில் மருத்துவ விஞ்ஞானத்தை கற்ற மாணவர்கள் அறிக்கை விடுத்ததன் பின்னர், சுகாதார அமைச்சு அதை நிருபிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இதன்படி இப்பட்டதாரிகள் வெளிநாட்டு அமைச்சிலிருந்து கடிதங்களை முன்வைத்து அரசின்புலமைப்பரிசிலை பெற்றுச் சென்றதை நிருபித்ததாக கூறுகின்றனர்.

பிரச்சினையின்இருமுகத்தன்மை இதுவாகும். அரச மருத்துவர்கள், குறிப்பிட்ட அப்பத்து மருத்துவர்களும் அத்தகுதியை பூரணப்படுத்தவில்லை. எனக்குறிப்பிடுகின்றனர். எனினும் அமைச்சு அவர்கள் தகுதியை பூர்த்தி செய்து விட்டனர் எனக் குறிப்பிடுகின்றது.

தற்போது உள்ளகப்பயிற்சி நெறிதொடர்பாக மருத்துவப் பட்டதாரிகள் பொதுத் தகுதிப்பட்டியலின் அடிப்படையிலேயே சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள் இபபட்டியலில் முதலில் இருப்பது அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மருத்துவர்கள் ஆவர். இரண்டாவதாக அரச புலமைப்பரிசில்கள் மூலம் வெளிநாட்டுக் கல்வியை பெற்ற மருத்துவ பட்டதாரிகள். மூன்றாவது இருப்பது கொழும்பு வடக்கு தனியார் பாடசாலைகளில் கல்வி கற்ற பிரிவினர். நான்காவது வெளிநாட்டு கல்வி பெற்ற மருத்துவ பட்டதாரிகள்.

இலங்கையில் வைத்தியசாலைகளுக்கு மேற்கூறிய தகுதிப்பட்டியலின் அடிப்படையிலேயே மருத்துவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சுகாதார அமைச்சின் அறிக்கையின் படி கியூபாவில் பயிற்சியைப் பெற்ற மருத்துவர்கள்இரண்டாவதுவகைக்குள் உள்ளடக்கப்படுவர். இந்த நியமிப்புக்களின் போது அரசு சட்டவிரோதமாக செயற்படுகின்றது என பிரதி வைத்திய அத்தியட்சகர் (சுகாதார சேவை) கே.எம்.வேலும்மயிலும் குறிப்பிடுகின்றார்: அவரின் அறிக்கையின்படி மருத்துவ அதிகாரிகள் சங்கத்தலைவருக்கும் செயலாளருக்கும் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

எவ்வாறாயினும் மருத்துவர்கள், அமைச்சு பிணக்குமுடிவுக்கு கொண்டு வரும் அறிகுறிகள் இல்லாததால் நாட்டில் வெவ்வேறுபட்ட பிரதேச வைத்தியசாலைகளில் தங்கியிருந்த நோயாளிகள்தம் வீடுகளை நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 2900மாக தங்கி இருந்த நோயாளிகள் எண்ணிக்கை மே 6ம்திகதியில் 2100 ஆக குறைந்தது. எனினும் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்களின் சேவை நோயாளர்களுக்கு சுகாதார அமைச்சுக்கும் கிடைத்ததனால், நாடு முழுவதும் உள்ள 887 வைத்தியசாலைகளில் 822 வைத்தியசாலைகள் இயங்கும்நிலையில் காணப்படுகின்றது என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இக்குறிப்பு எழுதும் வரை மருத்துவர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழுவில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ.எஸ்.எம்.செனவிரத்ன உள்ளார். அவருடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாதென அரச மருத்துவர்கள் குறிப்பிட்டாலும் பின்னர் பேச்சுவார்த்தைநடாத்த சம்மதித்தனர். முதலில் மருத்துவர்கள் விசாரணைக் கமிஷன் முன் செல்ல தமக்கு விருப்பமில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர்.

அரச வைத்தியசாலைகளில் சேவை புரியும் மருத்துவர்களில் பெரும்பான்மையானோர் மருத்துவருடன் தொடர்புடைய ஹிப்போகிரட்டீஸ் சத்தியத்திற்கு உட்பட்டு தொழில் புரியவில்லை என்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. இப்பொது ஏற்றுக்கொள்ளல் | காரணமாகவே வைத்தியர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து எந்தவொரு சிங்களப் பத்திரிகையும் செய்தி வெளியிடவில்லை என்பது ஒரு முக்கியமானவிடயமாகும்.

அரசாங்கத்திற்கு எதிரான கொள்கையை கடைப்பிடிக்கும் திவயின பத்திரிகைக் கூட அமைச்சுக்கும், பொதுமக்களுக்கும் ஆதரவாகவே குரல்எழுப்பியது. அதைப் போலவே மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற உக்கிரமான அரசாங்க எதிர்சார்பான கட்சிகூட அரசாங்கத்திற்கு சார்பாகவே செயற்பட்டது. இவ்வாறான காரணங்கள் காலம் காலமாக முழு இலங்கையும் அரச வைத்தியர்களின்பால் விரோத மனப்பான்மையையும் அவநம்பிக்கையையும் கொண்டிருந்ததோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்கின்றன.

குறிப்பு:

**எவ்வாறாயினும் பிரதியமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டதன் பேரில் போராட்டம் கைவிடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**சதுன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காண்டாவனம்

அ.
புடமிடப்பட்டும் புழுதியில் கிடந்தது
பேரிடப்பட்ட எழுதா கவியென
பெருநிலம்
காண்டாவனம்
உக்கிர அனலெறிந்து தொடங்கிற்று!

ஆ.
1.
கொதிக்கும் வெயில்
வீசியடிக்கும் செம்மண் புழுதி
குடம் குடமாய் குடித்தும்
அடங்கா விடாய்
காட்டு மரச் சிற்றிலைகள்
விடும் அனல் மூச்சு

எண்ணெய் காணா தலையும்
தோளில் துண்டுமாய் வலித்த மேனியர்
நிரம்பி வழியும் கள்ளுக் கொட்டில்
அரசியல் நெடி
தெட்டந் தெட்டமாய்
ஆயனின் ஞாபகம்

கலைபட்டோடி வருமுன்
கழிந்த காலம்
கொக்கிளாய் கொக்குத்தொடுவாய்
நாயாறெனப் பரந்த அவன் நாடு
பற்றை பறுவுகள் படர்ந்து
காடாய் போனது

முன்னர்
சீசனிற்கு மீன் பிடிக்க வரும் சிங்களவர்
வாடிகளில் குடித்த வென்னப்புவ வடி
லொறி லொறியா கொழும்பேறும் மீன்
இறைச்சி மாட்டிற்கு வரும் காக்கா

லோங்ஸ் போட்ட பிறத்தியாருக்கு
நல்ல மதிப்பு ராஜபோகம்
நாகு செல்லத்தை வைத்திருந்தான்
செல்லம் தனபாலை வைத்திருந்தாள்
லிகோரியின் மகளை ராமு வைத்திருந்தான்
செல்லமணியின் ரஜனா
நாகுவிற்கு பிறந்தாள்
டயனா யேசுரத்தினத்திற்கு
ரனா எட்வேட்டிற்கு
ராஜா ஜயகோனின் மகனிற்கு

புயலடித்து ஓய்ந்ததும்
புத்தகம் வந்தது
புரட்சி பற்றி கேள்விப்பட்டதும்
வெள்ளையும் அமலனும் பின்னால் திரிந்தனர்
பெருங்காட்டுக்குள் வீரர் சென்றனர்
தளங்கள் இருந்தன
தந்திரம் தெரிந்திருந்தது
தளபதிகள் இருந்தனர்
தம்முள் முரண்பட்டு
பின்னரெலாம்
வெள்ளை வெளியில் போனான்
அமலனின் காத்திருப்பு
கரைவலையுடன் ஆனது

2.
ஆயன்
காண்டாவனத்திற்கு அனலிட்டான்
பெருமேகத் திரளாய் தீ
விலங்குகள் வெருண்டோட
இருபத்தொரு நாட்கள் காட்டுத் தீ
இரு குட்டிகள் தீய்ந்து செத்தன
வெகுண்டெழுந்த நாகம்
இருபத்தொரு நாட்களை
நல்லதாகாவெனச் சபித்து
எதிரியிடம் சென்றது
பெரும் போரை எதிர்பார்த்து
காத்திருந்தது
நாகாஸ்திரமாய்

3.
தமிழோசையோ வெரித்தஸோ
கேட்டிரா காட்டுக்குடி
பின்னால் கடலோசை
கண்போர்ட் உறுமுஞ் சத்தம்

குளத்துப் பக்கமாய் நரியின் ஊளை
துரத்தில் எதிர்க்குரல்
இரவு
ஆயனிற்குத் தெரியும்
ஆட்டுக் குட்டிகளுக்காபத் தென
நோய்களைப் போலிவை பயங்கரமில்லை


இந்தியனாமி காலத்தில்
மாடுகளிற்கு முன்னடைப்பான் கண்டது
நிறைய செத்துப் போயின

வெகுவாய் பட்டி குறைந்தது
சிலோனாமி படையெடுத்ததும்
கிராமம் ஓடியது
பட்டி இல்லாதொழிந்தது
என்ன சீவியமிது
ஊரே வீடற்று வெறிச்சென்றது

வாழ்ந்து பெருகிய மனிதன்
பிடுங்கப் பட்டது போல் சாய்க்கப் பட்ட தென்னை
தென்னை தென்னையாய் அரியப்பட்ட
ஏராளம் இராணுவ பரண்கள்
இராணுவ மெழுப்பிய மண்முகடு
மறக்கேலா அவச்சாக்கள்
கண்ணியில் காலிழந்த எருதுகள்
காயம் பட்ட ஆயிரக்கணக்கான தென்னைகள்
சொல்லாமல் போனவர்
பேருடன் வந்தனர்
எல்லோரும் சொந்தம் பேசினர்
ஆலாத்தி எடுத்தனர்

காண்டாவனம் காடாய் இருந்தது
சபிக்கப்பட்ட காலமானதும்
காட்டில் சண்டைகள் நடந்தன
மின்னல் தெறித்தது முழக்கம் கேட்டது

தம் கரங்களை தாமே
வெட்டிக் கொண்டதாய் வதந்தி
பேர் பெற்ற வீரர் மாண்ட போது



சனம் அபத்தமாய் கதைத்தது
உண்மைகள் வதந்தியாய் பரவின
சனம் பயத்துள் உறைந்தது

4.
இரவிரவாய்
உடுப்பு குளத்தில் கூத்தாடினர்
மடார் யோகனும் முட்டுக்காய் கணேசனும்
புள்ளையும் யேக்கப்பும்
குடித்து குடித்து ஆடினர்

காத்தவராயன் இரவிரவாய் அலைந்தான்
சம்பங்கி தேவடியாள் வீடுகளை தட்டினான்
மதுரையில் நின்றான்
கப்பலேறி காசிக்குப் போனான்

மூதேவி வாலாயம் செய்த முனியிடம்
ஆசி பெற்றான்
தாலி வைத்து சூதாடினான்
வெளியில் போனான்

சோதனைச் சாவடியில் எரிச்சலூட்டும் கேள்விகள்
எங்கு போகிறாய் பதரே?
எதற்கு? யாரைப் பார்க்க?
தலைகுனிந்து போனான்

போகிற வழியில்
பெருநகரில் வரி கொடுத்து திரும்பும்
கணேசனின் தமக்கையைக் கண்டான்

கணத்திற்குக் கணம் மாறும் செய்திகளாலான
உலகத்தைக் கண்டான்
களவாய்த் தோணியில் திரும்பினான்
குளிர்ந்த இரவில் வேட்டை ஆடினான்
சிங்களக் கிராமத்தில் மாடுகள் திருடி வந்தான்
கடற்கரையில் அடையலில்
ஆம்பல் கிடைத்தது

கொளுத்த விலை போனது

கோடையில் அம்மாள் வருத்தம் கண்டது
அம்மனின் உக்கிர கோபம்
உடலெல்லாம் போட்டது
துடித்துப் போனான்

வல்லத்து மாகாளி
வேப்பிலையுடன் தோன்றினாள்
அரங்கு அருண்டது
டோலக் அதிர்ந்தது
சபை மிரண்டது
ஆயன் விழித்து விழித்துப் பார்த்தான்
கூத்தன் ஆடினான்
கூத்தி ஆடினாள் விடியு மட்டும்

கூத்து நடந்த இரவில்
ஆர் ஆருடன் ஓடிப் போயினர்
பார்த்திபனின் பெண்டு
பிள்ளைகளை தவிக்க விட்டு
கண்ணனுடன் ஓடிப் போனாள்
கண்ணன் மலைக்கோடிய போது
திரும்பி வந்தாள்
குளத்தங்கரை ஊத்து மண்ணில்
பார்த்திபன் மனைவியுடன் குடி வந்தான்

புள்ளையின் கவலைகள்
தேங்காய் பறியல், உரியல்
காலை பத்து மணி வரை
பின்னர் கள்ளுக் கொட்டில்
அரச நிவாரணமும் சகாய வேலையும்
இரவில் பெண்டு, பின் பிள்ளைகள்.

காற்று மாறியது
அமலனிற்கு மீன் பிடிபட்டது
மடி மாற்றி மடி மாற்றி
லட்சம் லட்சமாய் கொட்டியது

ஆயன் நாம்பன்களிற்கு காயடித்தான்
காயடிக்கையில் இறந்தவை
குறை நலத்துடன் தப்பியவை போக
எருதுகளை நல்ல விலைக்கு விற்றான்

பட்டி நாம்பன்
ஒய்யாரமாய் உலா வந்தது
பட்டி பெருகியது

5.
உடல் சிதறி கையிழந்து காலிழந்து
படுக்கையில் முடங்கி
கோரமாய் கிடக்கும் படுக்கைப் புண்ணுடன்
வேதனை பட்டு சோர்ந்தும்
ஜீவன் குன்றா இளைய மண்
கண் முன் பரந்து கிடந்தது

புண்ணியம் செய்து போன
பிறவிகளிற்கு நன்றி
போகும் பாதையில் உங்கள் பெயர்களை
வழிகாட்டிகள் திரும்பத் திரும்ப உச்சரித்தனர்

பேரால மரத்தடி விழுதென
ஆதி இருந்தது
பெருங்குரலெடுத்து
வெகு வேகமாய் நதி போனது
நாணல் இருந்தது
சேறு இருந்தது
நதி போனது

நிலத்தைக் கிளரக் கிளர
வீரம் விளைந்தது

இ.
புரிந்து கொள்ளு மட்டும்
காத்திருக்கச் சொல்லி போய் விட்டது
கவிதை
மீதி சொற் கூட்டத்துடன்
மெய்ப் பொருளைத் தேடச் சொல்லி
கடல் பொங்கி ஆர்ப்பரிக்கிறது
சிறுக்கிகளைப் பற்றிய வலைஞர் பாடல்
வானத்தில் செம்பருந்து
கரையில் துள்ளி வீழும் மீனினம்
கடுகி மடி மாற்றும் மனிதர்
அலைகளிற்கப்பால்
இருண்டு செல்லும் அற்புதக் குகையாய்
வங்காள விரிகுடா!

குறிப்பு:
**அருச்சுனன் காண்டாவனத்தை தீயிட்ட கதை எடுத்தாளப்பட்டது. விபரிக்கப்பட்ட காரணம் பற்றியே காண்டாவனம் என்னும் காலம் விலக்கப்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உளவியல் தனித்துவம்!

கொன்ஸ்ரன்ரைன்



கீழைத்தேய நாடுகளில் சமூக, தனி மனித காரணிகளுக்கு இயைய கலை இலக்கியப் படைப்பாக்கம் சீராக வளர்ந்து வந்துள்ளது. இருப்பினும் அந்நியராட்சியின் வருகையுடன் இந்த நிலை சிறிது சிறிதாக மாற்றமடையத் தொடங்கியது. எமது சமூகத்தின் கட்டமைப்புகளும் தளரத்தொடங்கின.

எமது சமூகத்திலிருந்த குறைபாடுகளையும் பிற்போக்குத்தனங்களையும் அந்நியர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி தம்மைப் பின்பற்றக்கூடிய ஒரு சமூக மட்டத்தையும் தமது வாழ்நிலைப்புலம் உயர்வானது என்ற ஒரு மாயத் தோற்றப்பாட்டையும் உருவாக்கினர். இதனால் பாரம்பரிய சமூக நியமங்களும் எதிர்பார்ப்புகளும் கேள்விக்குள்ளாகின.

எம்மிடையே நிலவிவந்த சமூக அரசியல் முறைகளும் பொருளாதார உற்பத்தி முறைகளும் சமூக தலைமை முறைகளும் செல்வாக்கிழக்கத் தொடங்கின. எமது சமூகம் மேலைத்துவ மனப்பாங்கில் தனது சுயத்தை இழக்கத்தொடங்கியது.

இப்படியாக ஒரு சுய இழப்பிற்கு அடிப்படையாக அமைந்தது எமது சமூக அரசியல் போக்கின் சிதைவேயாகும். அந்நியர் தமது மேலாதிக்கத்தால் எம்மிடையே ஒரு தாழ்வு மனப்பாங்கினைப் புகுத்தினர். அதற்கு ஏற்ற விதத்தில் எமது சமூகத்திலும் ''மேலைத்துவ மனப்பாங்கும்'' வெள்ளையங்கித் தொழிலில் கவர்ச்சியுமுடைய ஒரு சமூக மட்டம் வளரத்தொடங்கியது.

இந்த சமூக மட்டத்தினர் நாளடைவில் அந்நியரின் தரகர்கள் போன்று செயற்படத் தொடங்கினர். இப்படியாக ஒரு சமூக மட்டத்தை வளர்த்தெடுக்கவும் நிலவிவந்த சமூக நியமங்களை செல்வாக்கிழக்கச் செய்யவும் ஒரு வலுமிக்க கல்வி அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏற்கெனவே நிலவிவந்த கல்வியமைப்புகளிலும் பயில் முறைகளிலும் இருந்த பல குறைபாடுகள் இந்தப் புதிய கல்வியமைப்பின் அறிமுகத்திற்கும் செல்வாக்கிற்கும் தக்க தளத்தை அமைத்துக் கொடுத்தன.

இந்த மாற்றங்கள் படிப்படியாக எமது மனப்பாங்கினையும் சிந்தனைப் போக்கினையும் மாற்றியமைக்கத் தொடங்கின. எமது பாரம்பரியங்களிலும் எமது கலை இலக்கிய வளங்களிலும் எமது பரிச்சயம் குறைந்தது. அவற்றின் முக்கியத்துவமும் சிறப்பும் எமக்கு விளங்காப் பொருளாகின. எமது இரசனைப் பண்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டது.

இப்படியான ஒரு மாற்றம் ஏற்படுவதைப் பற்றி சிலர் பலமாக சிந்திக்கத் தொடங்கினர். இத்தகைய நிலையினை மாற்றியமைக்க வேண்டிய ஒரு தேவை இருப்பதனை அவர்கள் உணர்ந்தார்கள். இந்த சிந்தனை வழிவந்தவர்களில் தாகூர், ஆனந்தகுமாரசாமி, மார்டின் விக்கிரமசிங்க போன்றோர் முக்கியமானவர்கள்.

இந்த இடத்திலே நாம் ஒரு விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும். அதாவது இந்தச் சிந்தனை மாற்றம் அதன் தாக்கம் பாதிப்பு என்பன பற்றி முக்கியமாக கலை இலக்கியப் பரப்பிலேயே சிந்திக்கப்பட்டது. சமூக அரசியல் தளத்திலும் காந்தி போன்றோரால் மாற்றுச் சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

இருப்பினும் சமூகத்தளத்திலேயே அந்நியரின் பிரதிநிதிகளாக தம்மை வரித்துக் கொண்ட ஒரு சமூக மட்டம் அந்நியர் ஏற்படுத்திக் கொடுத்த அரசியலமைப்பு முறைகளுக்கூடாக தமது இருப்பையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளத் தலைப்பட்டது. இதனால் அந்நியராட்சிக்குப் பின்னரும் இந்த அரசியலமைப்பினை தொடர்ந்து பேணுவதிலும் பாதுகாப்பதிலும் இவர்கள் கண்ணாயிருந்தார்கள்.

இந்த மேலைத்துவ மனப்பாங்குடைய சமூக மட்டத்தினர் தான் அரசியல்வாதிகளாகவும் சமூக மாட்சிமை பொருந்தியவர்களாகவும் விளங்கினார்கள். எம்மத்தியில் அரசியல்வாதிகள் பெரும் சமூக சக்திகளாக இருந்து வருவதனால் அவர்களது சிந்தனைப் போக்கும் செயற்பாடுகளும் சமூகத்தில் கலை இலக்கிய முயற்சிகளிலும் கணிசமான செல்வாக்கினைச் செலுத்தக்கூடியதாக இருந்தது. சமூகத்தின் வெவ்வேறு பண்பாட்டம்சங்கள் கூட இவர்களால் இவர்களது இருப்பையும் அதிகாரத்தையும் நிச்சயித்துக் கொள்ளும் வகையிலேயே அன்றிலிருந்து இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த சமூகம் அந்நியராட்சியிலிருந்து விடுபட்ட பின்னரும் பொதுவாக ஆளும் வர்க்கத்திற்கும் சாதாரண மக்களுக்கும் இடையில் இருந்து வந்த இடைவெளி பேணப்பட்டே வருகிறது. இந்த இடைவெளி அண்மைக்காலங்களில் குறுக்கமடையத் தொடங்கியுள்ளது.

ஒரு நாட்டினது அரசியலமைப்பும் அரசியல் நடைமுறைகளும் அச்சமூகத்தின் மனப்பாங்கிலும் சிந்தனையிலும் பெரும் செல்வாக்குச் செலுத்த வல்லது. இந்த அரசின் நடைமுறைகள் குறுகிய எண்ணம் படைத்த அரசியல்வாதிகளால் சுயநலத்திற்காக பாவிக்கப்பட்டாலும் அவை பொதுவான நியதிகளாக காலப் போக்கில் பரிணமிக்கின்றன.

ஜனநாயக அரசியல் முறைமை பெரும்பான்மையினருக்கு அதிகாரத்தை வழங்கி ஒரு 'பெரும்பான்மை மேலாதிக்க மனப்பாங்கிற்கு' வித்திடுகிறது. இந்தப் 'பெரும்பான்மை மனப்பாங்கு' அரசியல் தளத்தில் மட்டுமன்றி கலை இலக்கியத் தளத்திலும் பரவலாக செல்வாக்குச் செலுத்துகிறது.

இப்படியாக ஒரு சமூகத்தில், ஒரு நாட்டில் இருக்கக் கூடிய பண்பாடு உபகுழுமங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து ஒரு சாராரின் கலாசாரமே மொத்த கலாசாரமாக பிரதிநிதித்துவப்படுத்துவது இந்த 'பெரும்பான்மை மனப்பாங்கின்' ஒரு வெளிப்பாடே. இந்த மனப்பாங்கின் வளர்ச்சி அந்நியராட்சியினது ஒரு முக்கிய விளைவாகும்.

இந்தப்போக்கு இனங்களுக்கிடையே மட்டுமல்லாது ஒரே இனத்தின் பல்வேறு பண்பாட்டு உபகுழுமங்களின் செயற்பாடுகளிலும் காணப்படுகிறது. ஆக அந்நியராட்சி எமக்கு அந்நிய மோகத்தைக் கொடுத்ததோடு மட்டுமல்லாது எமது பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களையும் நோக்கும் விதத்தையும் பாதித்துள்ளது.

அந்நியர் ஆட்சியின் வருகையுடன் அந்நிய கலாசாரமும் எமக்கு அறிமுகமாகியது. அத்துடன் அவர்களது கலை இலக்கியங்களும் எம்மிடையே பரவத்தொடங்கியது. இவர்களால் அறிமுகப்படுத்திப் பரவலாக்கப்பட்ட கல்விமுறை இதனை துரிதப்படுத்தியது.

அந்நியராட்சியில் எம்மிடையே உருவான 'மேலைத்துவ மனப்பாங்குடைய' சமூகத்தினர் செல்வாக்குப் பொருந்தியவர்களாக இருந்தனர். இவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்புப் பெற்றுவிளங்கினர். இவர்கள் வாழ்க்கை முறையிலும் பழக்கவழக்கங்களிலும் பெருமளவு மேலைத்தேயத்தினரின் போக்குகளை வரித்துக் கொண்டனர்.

இந்த மட்டத்தினரது அந்நியத்தனம் மற்ற சுதேசிகளிடம் ஒரு வித தாழ்வு மனப்பாங்கினை ஏற்படுத்தி வலுப்பெறச் செய்தது. இது படிப்படியாக மேலைத்துவ போக்குடைய எல்லாவற்றினையும் உயர்வாகக் கருதும் ஒரு கலாசாரத் தாழ்வு மனப்பாங்கிற்கு வழி கோலியது.

இப்படியாக மேலைத்தேய கலாசார மோகம் எம்மிடையே வேரூன்றத் தொடங்கியது. இந்தப் பாதிப்பு எம்மை எமது யதார்த்தத்தையும் எமது பாரம்பரிய செழுமை மிக்க கலை இலக்கிய வரலாற்றையும் புரிந்து கொள்ள, ஏற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளியது. இன்றும் நாம் இந்த கலாசார குழப்ப நிலையிலேயே இருந்து வருகிறோம்.

கீழைத்தேய கலைகளில் காணப்படும் நவீனத்தன்மையும் அவற்றில் கையாளப்படும் உத்திகளும் இதுவரை மேற்குலகக் கலைவடிவங்கள் காணாதது. கீழைத்தேய கலை வடிவங்களிலிருந்து மேற்குலக கலைஞர்கள் பெற்றது பல. இருப்பினும் நாம் மேலைத்தேய கவர்ச்சியினால் இச்சிறப்புகளை சரிவரப் புரிந்து கொள்ளத் தவறுகிறோம்.

இதற்கான அடிப்படைக்காரணம் காலனித்துவ ஆட்சி விட்டுச்சென்றிருக்கும் இந்த உளவியல் பாங்குதான். இந்த வித உளவியல் பாங்கு மேலைத்தேய கல்விமுறையினாலும் அரசியல் முறைமையினாலும் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது.

எமக்கு இப்பொழுது தேவைப்படுவதெல்லாம் இந்த வகையான 'உளவியல் காலனித்துவத்திலிருந்து' மீட்சிதான். இந்த உளவியல் பாங்கிலிருந்து விடுபடுவதே எமக்கு கலாசார விடுதலையினை ஏற்படுத்தும்.

அப்பொழுதுதான் நாம் எமது சுயத்தில் நின்று எமது இருப்பினையும் எமது அடையாளங்களையும் உறுதிப்படுத்தி எமது தனித்துவத்தைப் பேணலாம்.

# நெறியாளர் என்ற அதிகாரம் எமக்கு வேண்டாம்!

-1 நாடகம் சம்பந்தமான விமர்சனத்தில் விசேடமாக தடித்த எழுத்துக்களில் 'குறியீட்டு நாடகத்தில் ஒரு தளத்தில் கேள்வி எழும் போது வசதியாக மறுதளத்தில் ஒளியலாம் என்றும், இதனால், நச்சுக்கருத்துக்கள் மக்களிடம் சென்றடையலாம் எனவும் ரி.வி. ஆர்.எஸ். என்பவர் கடந்த சரிநிகர் இதழில் குறிப்பிட்டிருந்தார்.

இது சம்பந்தமான வினாக்களை எழுப்புவதே இந்த எழுத்துருவின் நோக்கம்.

ஆண்டான் அடிமைச் சமூகத்தில் அடிமையின் கருத்து ஆண்டானுக்கு நச்சுக் கருத்தாகும்! நிலப்பிரபுத்துவத்தில் பிரபுத்துவத்திற்கு எதிரான கருத்து நச்சு வெளிப்பாடாகும்! முதலாளித்துவத்தில் முதலாளித்துவத்திற்கு எதிரானது நச்சுக்கருத்தாகும். அடக்குமுறையாளர்களின் அடக்குமுறைக்கெதிரான கருத்து நச்சுக்கருத்தாகும். ஒரு கருத்தை வெளிப்பாடு செய்வோர் மாற்றுக் கருத்துக்களை பிற்பாடு ஏற்பதில்லை. பல எசமானர்களைக் கொண்ட நமது சமூகத்தில் எசமானத்துவத்திற்கு எதிரான கருத்துக்களை தமக்கு எதிரான நச்சுக்கருத்தாக எண்ணி அடக்கமுற்படுகின்றனர்.

மாற்றுக் கருத்துக்கு இடம் கொடுக்காத எமது எசமானர்கள் மூன்றாம் கருத்துக்கு இடம் கொடுக்காமல் நமது சமூகத்தை அகமாயும், புறமாயும் சிதைத்து தலையில்லாத ஜீவன்களாய் குதறி வீசியிருக்கிறார்கள். இவர்கள் இனியாவது மூன்றாம் கருத்துக்கு இடம் கொடுப்பார்களா!

அளிக்கையின் பாத்திரங்களை X,Y என்று மட்டும் இனங்காணாமல் தமக்கு தமக்கான வரையறைகளை களைந்து விட்டு மொத்த குண இயல்புகளை பரிசோதிக்க வேண்டும் என்பதே எங்கள் அவா. இந்த மன்றாட்டத் தொனியில் இருந்துதான் எங்களது குறியீட்டு நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இங்கு பங்காளிகள் தரவுகளிலிருந்து தங்கள் அனுபவங்களிலிருந்து தேட முயல்வார்கள். இது மூளையைச் சலவை செய்யும் அரங்கல்ல. அப்போது தான் எசமானத்துவத்திற்கு துதிபாடும் அரங்காக இல்லாமல், மாறாக கேள்வி எழுப்பும் அரங்காக எசமானரை பரிசோதித்து அதிகாரத்தை (Check & Balance) சமனாக பேண வழிசமைக்கும். நமது எசமானர்கள் எல்லோரும் ஒரே குண இயல்புகளை பேணுவோராயின் அது எல்லோரையும் பரிசோதிக்கும். எனவே இங்கு எசமானர்களுக்குப் பின்னால் அம்மணம் மாத்திரமே. எனவே பின்னால் ஒளிய இடமில்லை.

''ஒரு கருத்து எவ்வளவு பிழையானது என்றாலும் அதனை கருத்துக்களின் சந்தையில் அனுமதிக்க வேண்டும்.'' என்கிறார் ஜெஃப்ரி தொம்சன் (Jeffry Thomson)

அரங்க அளிக்கையில் எழுப்பும் கேள்விகள் மானிடத்தை உயர்த்தும் நோக்கில் திசை திருப்பும் ஆயின் அது மனிதகுலத்திற்கு செய்யும் கடமையாகும். "-1" இல் கொடுக்கப்பட்ட கைப்பிரதியில் கேட்டப்பட்ட வினாக்கள் கொத்து.

1. வித்து ஒன்று தேவையா? வித்து ஒன்று உண்மையில் உள்ளதா?
2. அவ்வாறாயின் அதைப் பாதுகாப்பது எப்படி?
3. வித்து முளைப்பதற்குரிய காரணிகள் கட்புலனாகக் கூடிய சாத்தியபாடு உண்டா?
4. வித்து புறக்காரணிகளால் மட்டுமல்லாமல் அகக் காரணிகளாலும் சிதைவுறுவதை எவ்வளவு காலத்திற்கு மௌனத்தால் அனுமதிப்பது?

இது பங்காளிளை தேட வைக்காதா?

மானிடத்துவத்தின் உயர்ந்த பெறுமானங்களை தேடவைக்காதா? மாறாக மானிடத்துவத்திற்கு எதிரான நச்சுக் கருத்துக்களை பரப்ப முயல்கின்றதா?

அரங்க ஆற்றுகை என்பது ஆற்றுகையின் விளம்பரத்திலிருந்து கொடுக்கப்பட்ட கைப்பிரதி மட்டும் அல்ல. அதற்கு பிறகு ஏற்படும் விமர்சனமும் தேடலும் தான்.

பயிற்றப்பட்ட அரங்கப் பங்காளிகள் நோக்கும் திசைக்கே சாதாரண பங்காளிகள் தங்கள், தங்கள் சூழலில் நின்று நோக்குவார்கள். மாறாக பின்புறத்தை காட்டுபவர்கள், காட்டுபவர்கள் என்று நினைப்பவர்களும் கூட அதிமேதாவிகள் என்று நினைத்துக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

அரங்கப் பங்காளி புற எஜமானர்களை மட்டும் அல்லாது அகத்திலுள்ள எஜமானர்களையும் கணக்கிலிட்டு அவர்களை நோக்கியும் கேள்வி எழுப்புவது பங்காளியின் பிழையா? எஜமானர்களின் பிழையா?

அரங்கப் பங்காளியின் சுதந்திர நிலையிலிருந்து சொந்தக் கருத்து உருவாக்கம் நிகழ்வதும், அதனைத் தேட முற்படவைப்பதும் எசமானத்தை கைவிட முடியாத விமர்சகர்களுக்கு சங்கடம்தான். இது நச்சுதான் அவர்கள் பார்வையில்.

மக்களை முட்டாளாக்கி, மந்தைகளாக்கும் எஜமானருக்கு மக்கள் சிந்திப்பதும் வயிற்றில் கரைத்த புளிதான்.

நச்சுக்கருத்தாயின் அதை ஏற்க பங்காளிகள் மந்தைகள் அல்ல. குறுகிய காலத்தில் அவர்கள் பிழையான தீர்மானங்களை எடுத்தாலும் சரியான கருத்து பரிமாறல்கள் நிகழுமாயின் அவர்கள் சரித்திரத்தை படைப்பது தவிர்க்க இயலாது. எனவே அவர்களை சிந்திக்க வைக்கும் அவர்களது ஆளுமையை ஒரு அரங்கு அகலமாக்கும் என்றால் ஏன் நாம் பிழையாளிகள்? இல்லையாயின் பயப்படவேண்டும்.

எனவே சிந்தனா சக்தியுள்ள சமூகத்தை உருவாக்க விரும்பின் தேடலுக்கான அரங்கை மன்றாட்டமாய்க் கேட்கிறோம். தயவு செய்து அனுமதியுங்கள். கேள்வி எழுப்புங்கள். ஆசிரியன், மாணவன் விரிவுரையாளன், கற்பவன் என்ற அதிகார நிலையில் வைக்காமல் புதிய கற்கைக்கான வழியை நாடுவீர்களா? நாடுவோமா?

'தேவையற்றது' என்ற முடிந்த முடிவோடு இல்லை. 'தேவைதானா என்ற பரிசோதனை முயற்சியில் முகபாவனை இல்லாமலும், உடல் மொழியாலும் ஆற்றுகை நிகழ்த்தலாம். இதனை ஒரு உளவியல் அரங்காகத்தான் செய்தோம். எனவே 'கொள்கரியையும்' அதன் உருவத்தையும் கேள்விக்குள்ளாக்கிறோம் என்பது தான் எங்களது நிலைப்பாடு.

நாட்டின் மின்சாரத் தடையானது ஒளியமைப்பினையும், பரிசோதிக்கத் தூண்டியது. எமது அரங்க அளிக்கைகளில் பயிற்றப்படாத பங்காளிகளையும், பயிற்றப்பட்ட பங்காளிகளையும், ஒன்றாக்கவே மேடையின் கீழ் அவ்வப்போது ஆற்றுகையினை நிகழ்த்துகிறோம். இது அவர்களை அன்னியமாக்காமல் ஓரளவேனும் குறைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. படிப்படியாக இத்தடைகளை முறித்தெறிவோம். படச்சட்ட மேடையமைப்பை நாம் நிராகரிக்கின்றோம். ஆனால், எமது சமூகசூழலில் மாற்று அரங்கை படைக்க முடியவில்லை. படச்சட்டமேடையப்பும் கல்விச்சட்ட அதிபுத்திமான்களும் எமது சமூகத்திற்குக் கிடைத்த.....

அரங்கக் கோட்பாடுகளை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றோம். இது தொடர்பான ஒரு கலந்துரையாடலை யாராவது ஒழுங்கு செய்வார்களாயின் நாம் எமது கருத்துக்களை மீள்பரிசீலனை செய்ய உதவும்.

இறுதியாக ''எது சரி எது பிழை என்பது கருத்து மோதல்களாலும் தேடல்களாலும் மட்டும்தான். சமநிலைக்கு கொண்டு வரப்படலாம். ஆதிக்கக்கருத்துள்ளவர்களின் அராஜகத்தால் அல்ல'' என்கிறோம்

"-1" பங்காளிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சுயநிர்ணயம் பற்றிய தவறான எண்ணங்களைக் களைவது அவசியம்!

சமுத்திரன் தேசியம், சுயநிர்ணயம், பிரிவினை என்பன பற்றி எழுப்பிய கேள்விகளின் முடிவில் வலிய முதலாளித்துவ நாடுகள் ஒன்றிணையுஞ் சூழலில் இப்பிரச்சினைகளை எவ்விதம் அணுகுவது என்ற பிரச்சினையைத் தொட்டிருக்கிறார். நிச்சயமாகத் தேசியம் என்பது தன்னளவிலேயே சமூகப் பெறுமதியானதும் முறபோக்கானதுமல்ல. அதன் சமகால முக்கியத்துவம் தேசிய இனஒடுக்கலின் சூழலிலேயே எழுகிறது. இலங்கையின் தமிழ்த் தேசியவாத எழுச்சிக்கான அடிப்படையான நியாயம் சிங்களப் பேரினவாதத்தினாலேயே உருவாகியது. எனவே இலங்கையிலும் தென்னாசியா முழுமையிலும் பேரினவாதம் பற்றியும் பிராந்திய மேலாதிக்கம் பற்றியும் ஏகாதிபத்தியக் குறுக்கீடு பற்றியுமான கேள்விகள் முக்கியமடைகின்றன. ஒடுக்குகிற தேசியவாதத்திடம் நாம் எழுப்புகிற வினாக்களை ஒடுக்கப்படும் தேசிய இனத்திடமும் அதே விதமாக எழுப்ப முடியாது. உலகின் சமீப கால மாற்றங்கள் சுயநிர்ணயத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவையினையே எனக்கு உணர்த்துகின்றன. சில புத்திஜீவிகள் ஒப்பமிட்டு சென்ற வருடம் வெளிவந்த பகிரங்கக் கடிதமொன்றில் சுயநிர்ணயம் என்பது அர்த்தமற்றுப் போய்விட்டது என்றவாறு எழுதியிருந்தனர். அது எவ்வாறு என்பதை ஏனோ அவர்கள் விளக்கவில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அதிகாரப்பரவலாக்கம் அவசியமென நம்புவோர் சிலர், சுயநிர்ணயத்திற்கும் அதில் ஒரு பங்கு உண்டு என ஏற்கத் தயங்குவதன் காரணமும் விளங்கவில்லை. 'மோர்ஜ்' ஒரு கட்சியல்ல, அங்குள்ள தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தோரும் சிங்களத் தேசிய இனத்தைச் சேர்ந்தோரும் பொதுவான சில உடன்பாடுகள் கொண்டு இருப்பினும், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தன்மையிலும் அளவிலும் வேறுபடுகின்றன. அவ் வேறுபாடுகள் அவர்களது எழுத்தில் வருவது தவிர்க்க இயலாதது. தமிழர் எவரும், சரிநிகருக்கோ, அதையொத்த தமிழ் ஏடுகளுக்கோ எழுதாமல் சிங்களப் பத்திரிகைகளிலும் ஆங்கிலப் பத்திரிகைகளிலும் எழுதிக்கொண்டு சரிநிகரின் உள்ளடக்கத்தின் சார்பு பற்றியப் புலம்புவதில் நியாயமில்லை. சரிநிகரின் ஆய்வுமுறைகளதும் அணுகுமுறையினதும் குறைபாடுகளை விரைவில் நீக்க அதன் ஆசிரியர் குழுவுக்கு பயிற்சியளிப்பது சிரமம். நல்ல ஆய்வுகளையும், மதிப்பீடுகளையும் செய்ய வல்லவர்கள், முன்னுதாரணமான கட்டுரைகளை எழுதி வருவார்களேயாயின் அது நல்லதாயிருக்கும். இவ்வாறே, சிங்கள மக்களிடையிலுள்ள நல்ல சக்திகள் பற்றிய தகவல்களை வழங்கக் கூடியவர்கள் அவற்றைத் தொகுத்து இடையிடையே சரிநிகரிலும் பிற ஏடுகளிலும் தமிழில் எழுதி வருவது நல்லது. சமுத்திரனின் கடிதம் எழுப்புகிற வினாக்களின் அடிப்படையில் தேசியம் பற்றிய முன்னைய விவாதத்தை மீண்டும் தொடர்வதற்கு இடமுண்டு. சிங்கள மக்கள் மத்தியில் சுயநிர்ணயம் பற்றி உள்ள தவறான எண்ணங்களைக் களைவது பற்றிய கவனமும் அவசியம். இதில் 'மோர்ஜ்' உட்படப் பலருக்கு முக்கியமான பொறுப்பு உண்டு.

செல்வி திருச்சந்திரன் 'விதவைத்துவம்' பற்றிய தனது குறிப்பில் அச்சொல் பாவிக்கப்படுவது தவிர்த்தற்குரியது என எழுதியுள்ளார். விதவைத்துவ அரசியல் என்ற சொல்லாக்கம் ஆங்கிலத்தில் இப்பிரச்சினை தொடர்பாக வந்த கட்டுரையொன்றின் விளைவே என நம்புகிறேன். விதவை என்ற சொல் தன்னளவிலேயே இழிசொல்லல்ல. ஆங்கிலத்திற் தாரமிழந்த ஆணைக் குறிக்கச் சொல்லுண்டு. தமிழில் இல்லாமைக்குக் காரணம் நமக்கே உரிய ஒரு ஆணாதிக்க மரபு தான். எனினும் கற்பழித்தல் என்ற சொல்லில் உள்ள அவமதிப்பும் அகமுரணும் விதவை என்ற சொல்லில் இல்லை. (1991ல் நோர்வே பெண்ணிய ஏடான சக்தியில் 'கற்பழித்தல்' என்ற சொல் பற்றிச் சிறிது விரிவாகவே எழுதியிருந்தேன்.) விதவை என்பது ஒரு சமுதாய நிலையைக் குறிக்கும் சொல். அதற்கு எந்தச் சொல்லை மாற்றீடு செய்தாலும் விதவைப் பெண்களின் சமூக அந்தஸ்து மாறிவிடாது. 'விதவைத்து அரசியல்' பற்றிய பல கட்டுரைகள் தம்மை நிலை நிறுத்திக் கொண்ட சில பெண்களையும் இழிவு செய்யுமாறு அமைந்திருந்தது உண்மை. நம் கண்டனத்துக்குரியது; இறந்தோரின் குடும்ப அரசியல் தான். இந்திராகாந்தி ஒரு விதவை என்பதாலன்றி, நேரு மகள் என்பதாலேயே அவர் பதவிக்கு வர இயலுமானது. ராஜீவ் காந்தி உட்பட அநுரபண்டாரநாயக்கா வரை எத்தனையோ ஆண்கள் இவ்வாறு மேலெழுந்து உள்ளனர். தென்னாசியாவின் குடும்ப அரசியலின் ஒரு சிறு அம்சமே விதவைகள் பதவிக்கு வந்தமை. குடும்பத்தில் தகுதிவாய்ந்த ஆண்பிள்ளைகள் இருந்திருந்தால் இந்தப் பெண்களுக்கு பதவி வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கலாம். இது வேறு விஷயம்.

**சிவசேகரம்.**
**லண்டன்.**

## அபூநிதால் யார்?

"அபூநிதால்" என்ற புனைபெயரில் சரிநிகரில் துவேசக்கட்டுரை எழுதிவரும் அபூநிதால் யார்? தன்னை அறிமுகப்படுத்தப்பயப்படும் முதுகெலும்பில்லாத அபூநிதால் ஒரு முஸ்லிமா?

இவர் எழுதும் கட்டுரைகள் இனத்துவேசத்தை தொலைத்து இன ஐக்கியத்தை எதிர்பார்க்கும் என்போன்ற வாசகர்களுக்கு எரிச்சலையும், கோபத்தையும் ஏற்படுத்துகின்றது. சரிநிகர் 92 இதழில் ''மர்சூக்கின் கோபம் இது'' என்ற தலைப்பில் மருதமுனை எம்.ஏ.எம். மர்சூர்க்கினதும், சரிநிகர் இதழ் 95ல் அபூநிதால் ஒரு முஸ்லிம் பிரபாகரன்'' என்ற தலைப்பில் அக்கரைப்பற்று எம்.ஐ.முஹம்மது கபீரினதும் சொல்லடிகள் இதற்கு உதாரணங்களாகும்.

அபூநிதாலின் கட்டுரைகள் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும், அக்கட்சியின் தலைவர் அரசியல் ஞானி எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களையுமே விமர்சிக்கின்றது. எழுத்துச்சுதந்திரம் உண்டு என்பதற்காக குறுகிய வட்டத்திற்குள் நின்று; இந்த நாட்டில் வாழ்கின்ற சகல இன மக்களுக்கும் சேவை செய்கின்ற நல்ல நோக்கமுள்ள ஒருவரை விமர்சிப்பது பொருத்தமற்றதாகும். மக்களின் மீது ஆதரவையும் அபிமானத்தையும் பெற்ற ஒருவர் தமது கட்டுரைகள் மூலம் கெட்ட பெயரை ஏற்படுத்திவிடலாம் என்று மருதூர் பஷீத்தோ அபூநிதாலோ கனவு காண வேண்டாம்.

***பி.எம்.எம். காதர், கல்முனை***

## அச்சம் வேண்டாம்!

இதழ் 92ல் எம்.ஏ.எம். மர்சூக், மருதமுனை என்பவர் கோபமாக அஷ்ரஃப் என்ற தனி மனிதனை ஒவ்வொரு இதழிலும் முக்கியத்துவம் கொடுத்து நீங்களே புனை பெயரில் எழுதுவதாக மறைமுகமாக எழுதியுள்ளார். நான் சரிநிகர் வாசகன் அபூநிதாலின் நண்பன். எனது நண்பன் அஷ்ரஃப்பின் இடத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் மட்டுமன்றி வளர்ந்து வரும் ஒரு கலைஞனும் கூட. எனவே அவர் முஸ்லிம்களின் அதிகார அலகு பற்றி நிகழ்கால, கடந்தகால அரசியல் தவறு பற்றி அவருடைய பார்வையில் எழுதுவதில் யாரும் கோபப்படுவதில் அர்த்தமில்லை. அஷ்ரஃப் நியாயமாக நடந்து கொண்டுள்ளார் என்றால் இந்த விமர்சனத்தைக் கண்டு அவரோ ஆதரவாளர்களோ அஞ்ச வேண்டியதில்லை. பதிலாக அதனை ஒரு தமிழர் எழுதுகிறார் என்றும் கற்பனை செய்ய வேண்டியதும் இல்லை.

***சி.குணசீலன்***

## விமர்சனமும் அவதூறும்!

விமர்சனம் என்கிற பெயரில் தனிமனித அவதூறுகளை எழுதுவது சரிநிகருக்குப் புதிய விடயமல்ல. எனினும் அத்தகைய போக்கிலிருந்து சரிநிகர் விடுபட்டு விட்டது என்று மகிழ்ந்திருந்த காலத்தில் எஸ். நடேசன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய **A History of the Upcountry tamil people** என்கிற நூலின் விமர்சனம் எனக்கு அதிர்ச்சி தந்தது.

போராடும் மக்களது அறிவுலகமும் சர்வதேச ஒருமைப்பாடும் மேற்படி மக்கள் தொடர்பாக சுயமொழிகளிலும் சர்வதேச மொழிகளிலும் எழுதப்படுகிற - மொழி பெயர்க்கப்படுகிற நூல்களில் மையப்பட்டே வளர்ச்சியடைகிறது. எனவே தமது வாழ்வோடும் போராட்ட வரலாறோடும் சம்பந்தப்பட்ட நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுவதும் மொழி பெயர்த்து வெளியிடுவதும் இன்றைய காலகட்டத்தில் மலையகப் புத்திஜீவிகளதும் சிறுசஞ்சிகையாளர்களதும் தலையாய பணியாகும்.

சரிநிகர் பிரதம ஆசிரியர் சேரனும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமது ஆக்கங்களை எழுதி வெளியிடுகிற இலங்கைதமிழ் புத்திஜீவிகளது பட்டியலில் இடம் பெறுகிறவர்தான். சரிநிகர் விமர்சனத்தில் மேற்படி நூல் தமிழிலும் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்கிற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தால் அர்த்தமுள்ளதாக அமைந்திருக்கும். சரிநிகர் ஜோதிகுமார் மீதான அவதூற்றை எடிட் பண்ணாமல் அனுமதித்ததன் பங்களிப்பு என்ன?

யாழ்ப்பாணத்தில் மத்தியதர வர்க்கம் மட்டுமே ஆங்கிலத்தில் ஆய்வு நூல்களை எழுதலாம், வெளியிடலாம் என்று கருதுகிறீர்களா?

***வ.ஐ.ச.ஜெயபாலன்***
***கொழும்பு.***

## கவனத்திற் கொள்க!

1993ம் ஆண்டு (உ/த) பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் சார்பில் நான் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருவது என்னவெனில்,

நாங்கள் பரீட்சை எழுதி மூன்று வருடங்கள் பூர்த்தியாகிக்கொண்டிருக்கும் நிலையில், நாங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியும் கூட இன்னும் அனுமதிக்கப்படாத நிலையே உள்ளது. அதுவும் குறிப்பாக கலை, வர்த்தக, பொருளியல் பீடங்கள் (மருத்துவ பீடம் அனுமதிக்கப்பட்டுவிட்டது) இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில்இரண்டு கல்வியாண்டுக்கான அதாவது 94/95, 95/96 மாணவர்களை ஒன்றாக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதென பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக் குழு தீர்மானித்திருப்பதாகவும் இதனை கிழக்கு பல்கலைக்கழகம் உட்பட ஏனைய பல்கலைக்கழகங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகளும் பல்கலைக்கழகங்களின் உத்தியோக பூர்வமற்ற தகவல்களும் தெரிவிக்கின்றன. இவ்வாறான ஓர் அனுமதியை அதாவது இரண்டு கல்வியாண்டுக்கான மாணவர்களை ஒரே தடவையில் அனுமதிக்குமானால் வேலையில்லாப் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் அதிகரிக்க அரசே காரணமானதுபோல் ஆகிவிடும்.

எனவே இப்புதிய நடைமுறையை கைவிட்டு 94/95, 95/96 கல்வியாண்டு மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் கால இடைவெளியை குறைந்தது ஆறுமாத காலமாவது இருக்கும் வகையில் அனுமதிக்கும் கால இடைவெளியை வேறுபடுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***ம.சிந்துஜன்***
***திருமலை.***

## சந்திரசேகரனுக்கு...

மட்டும் தெளிவாக விளங்குகின்றது. தோட்டத்தொழிலாளர்களின் போராட்டத்தை (இது குறைபாடுடையதாக இருந்தாலும்) நசுக்குவதற்கு இந்த அரசாங்கம் உங்களை நன்றாகப் பயன் படுத்தியுள்ளது. உங்களுக்குத் துணிவிருந்தால் வேலைநிறுத்தம் செய்ய வேண்டாம் என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கலாம், பயம் ;மக்கள் உங்களை உதறித்தள்ளிவிடுவார்கள் என்ற பீதி. நீங்கள் மலையகத்திற்கு தலைமை கொடுப்பதை விட அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுப்பதை மேலாக எண்ணுகின்ற அரசியல் வாதி என்பதை இப்போது மக்கள் நன்றாக உணர்ந்து விட்டார்கள். இனியும் உங்கள் நாடகத்தனமான அரசியல் மலையகத்தில் எடுபடும் என்று பகல் கனவு காணாதீர்கள். தலைவரே நீங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து 1 1/2 வருட காலப்பகுதியில் உங்களுடைய 6 அம்சக் கோரிக்கைகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. அது அப்படியிருக்க இந்த 14 அம்சத் திட்டம் இன்னும் ஒரு வருடத்தில் எப்படி நிறைவேற்றப்படும் என்று உறுதியாக நம்புகிறீர்கள்? அரசாங்கம் செய்ய வேண்டுமென நினைத்தால் ஒரு வருட காலம் எதற்கு 3 மாதகால அவகாசமே அரச நியமனம் வழங்குவதற்குத் தாராளமாகப்போதுமே. அது புதிய நியமனங்களுக்கு பொருந்தும். ஆனால் சமுர்த்தி முகவர்கள் நியமனத்திற்கு கால அவகாசம் குறிப்பிடப்படவில்லையே அது ஏன்?

இப்போதும் கூட இன்னும் ஒரு வருடம் உங்கள் பேச்சையும் காகித ஒப்பந்தத்தையும் நம்பி உங்கள் விசுவாசிகள் காத்திருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்வோம். இப்போது நீங்கள் சொல்லுவதெல்லாம் நிறைவேறாவிட்டால் அடுத்த ஆண்டில் இன்னுமொரு ஒப்பந்தத்தை செய்து கொண்டு அதையும் நியாயப்படுத்த வருவீர்களா? அல்லது அரசாங்கத்தை விட்டு வெளியேறுவீர்களா? உங்களோடு இருந்தவர்கள் பலர் தற்போது உங்களை விட்டு தூரப் போய்க்கொண்டிருப்பதை உங்களால் மறுக்க முடியுமா? உங்களுடைய அரசியல் தற்போது ஜீவமரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். உங்களோடு நெருக்கமாக இருப்பவர்கள் அதை உங்களுக்கு சொல்லவும் மாட்டார்கள். இது சென்ற மே மாதம் நுவரெலியாவில் நடைபெற்ற மேதினத்தில் சற்றுத் தெரிந்தது.

உங்களுடைய மலையகத் தொழிலாளர் முன்னணிக்கு தொழிற்சங்கம் நடத்த தெரியாது என்ற காரணத்தினால் கடந்த ஒரு வருடகாலமாக தொழிற்சங்கத்தை விட்டு வெளியேறிய தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? தொழிற்சங்கம் என்பது சந்தா வாங்குவதும் சந்தர்ப்ப வாதம் பேசுவது மட்டும்தானா? விதண்டாவாதிகள் ஒருகாலும் உருப்படியாக எதையும் செய்ததில்லை என்பதற்கு உதாரணமாக நீங்கள் திகழ்கின்றீர்கள்.

பிரதி அமைச்சர் அவர்களே, மலையகம் காலம் காலமாக, ஏமாற்றுபவர்களிடம் தலைமையைக்கொடுத்து ஏமாந்து கொண்டுதான் இருக்கிறது. எல்லா இரவுகளும் விடிந்திருக்கின்றன. எல்லாத் துன்பங்களும் முடிந்திருக்கின்றன. மலையகத்தின் இருள் என்றாவது ஒரு நாள் நீங்கும். இன்றும் உங்கள் மேல் நம்பிக்கை உள்ளவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள் எதிர்வரும் காலமாவது கடந்த ஒன்றரை வருடங்களாக இல்லாது இருக்கட்டும்.

## ஏன் இந்த விமர்சனம்?

சரிநிகர் 95 ( ஏப்.20 - மே 1) பத்திரிகையில் வெளியான எஸ். நடேசனின் **A History of the Upcountry tamil people** (இலங்கை மலையக தமிழர் வரலாறு) என்ற நூல் தொடர்பான குறிப்பினைப் படித்தபோது வினோதமாக இருந்தது. இக்குறிப்புத் தொடர்பாக கருத்துக்கள் கூறவேண்டியது, அவசரமானதும், அவசியமானதும்ஆகும்.

இன்றைய நிலையில் இந்நூலுக்கான புறநிலைப்பட்ட விமர்சனத்தை முன்வைப்பதன் மூலம் மலையக வரலாறு பற்றி மேலும் பல விடயங்களை வெளிக்கொணரவும், இத்துறைசார்ந்த பல ஆராய்ச்சிகளைத் தோற்றுவிக்கவும் வழிவகுக்கலாம். இவ்வாறான ஓர் சூழ்நிலையில் நூல்பற்றிய விமர்சனத்தை விடுத்து இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது தொடர்பாகவும், அதன் வெளியீட்டாளர்கள் தொடர்பாகவும் எழுதப்பட்ட கருத்தையே மேற்படி குறிப்பும் அந்த வகையில் ஆங்கில மேட்டுக்குடி மனப்பான்மை இச்சமூகம் குறித்த சமூகப்பார்வையை பெரிதும் வழங்காது என்ற கட்டுரையாளர்களின் கருத்தை நோக்குவோம்.

முதலில் இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டமையால், ஏனைய மொழி சார்ந்த புத்திஜீவிகள் இம்மக்களை பற்றி சிந்திக்கவும், யாவற்றுக்கும் மேலாக இம்மக்களின் பிரச்சினைகள் சர்வதேச பார்வைக்கு உட்பட்டதுடன் இன்று மலையகத்தில் இம்மக்களின் நலனில் சார்ந்து நிற்கின்ற புத்திஜீவிகள் இந்நூலைக் கற்கக்கூடிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது. அவ்வடிப்படையில் தொழிலாள வர்க்க நேச சக்திகள் இம்மக்களைப் பற்றி சிந்திப்பதற்கு இந்நூல் ஏதுவாக அமைந்திருந்தது.

அதேநேரத்தில் நூலின் முன்னுரையில் கலாநிதி குமாரி ஜெயவர்த்தன குறிப்பிடுவது போல இந்நூல் தமிழ், சிங்கள மெதழிகளில் மொழிபெயர்க்கப்படல் அவசியம். இதனை கட்டுரையாளர் கவனத்தில் கொண்டிருக்கலாம். (ஆங்கிலத்தில் வெளிவந்த பல்வேறு நூல்களில் ஒன்றிரண்டையாவது மொழிபெயர்ப்பு செய்வது அவசியம் என்கின்றவர் இந்நூல் மொழிபெயர்ப்பு செய்யப்படவேண்டியதை பெருமளவு கவனத்தில் கொள்வதில்லை.)

கட்டுரையாளர் கருத்திலிருந்து ஒன்று புலனாகின்றது. ஒரு சமூகம் குறித்து ஆங்கிலத்தில் வெளிவருகின்ற ஆய்வுகள் அனைத்தும் மேட்டுக்குடி மனப்பாங்கினை வெளிப்படுத்துவதாகவே அமையும் என்ற முடிவை எடுப்பதில் அவர் அவசரப்படுகின்றார் என்பதே. அப்படியாயின் மார்க்ஸின் ''மூலதனம்'' (CAPITAL) என்ற நூல் இன்னும் தமிழில் முழுமையாக மொழிபெயர்க்கப்படவில்லை என்பதற்காக இதனையும் தமிழ் சமூகத்தின் மேட்டுக்குடியினருக்காக எழுதப்பட்ட நூல் என்று கொள்வதா?

கட்டுரையாளர் எல். ஜோதிக்குமாரை தாக்குவதில் காட்டிய முனைப்பை நூலினை ஆய்வுசெய்வதில் காட்டியிருப்பாராயின் பயன்மிக்கதாக அமைந்திருக்கும்.

***லெனின் மதிவாணம் ஹட்டன்.***

## அழுத்தமாக ஒலிக்கிறது.

தினமுரசு ரசனைகள் மத்தியில், சரிநிகரின் குரல் அழுத்தமாக எங்கும் ஒலிக்கிறது. மனம் மகிழ்ந்து தங்களின் பங்களிப்பு என்றும் உயிர் உள்ளது.

*கல்லூரன்*
*கல்முனை - 1*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# வேலியும் ஓணானும்!

*அண்மையில், பாதுகாப்பு அமைச்சின் அநுக்கிரகத்தில், ரிவிரச -2 இராணுவ நடவடிக்கையின் பின்னான நிலைமைகளை பார்வையிடுவதற்காக சில தொடர்பு சாதனவியலாளர்கள் யாழ்ப்பாணம் சென்றிருந்தார்கள். இரத்மலானை விமானநிலையத்தில் இருந்து விமானப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட இத் தொடர்பு சாதனவியலாளர்கட்கு இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பல பிரதேசங்கள் சுற்றிக்காண்பிக்கப்பட்டுள்ளன.*

*நாற்பது தொடர்பு சாதனவியலாளர்களை அழைத்துச் சென்றபோதும் தகவல் துறையினருக்கு "சரிநிகர்" பத்திரிகையாளர்களையும் அழைத்துச் செல்லவேண்டும் என்று தோன்றவில்லை. போய்வந்த பத்திரிகையாளர்களுக்கும்கூட எந்தெந்த தொடர்பு சாதன ஊடகங்களை சேர்ந்தவர்கள் தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து அக்கறை இருந்ததாகத் தெரியவில்லை.*

*இம்மாதியான நடைமுறைகள் மிகவும் இயல்பானவையே என்பது போன்ற ஒரு அபிப்பிராயம் பொதுவான தொடர்பு சாதனவியலாளர்களின் மத்தியில் இருந்து வருவது, எமது நாட்டுக்கு மட்டுமே உள்ள ஒரு விஷேடமான துரதிருஷ்டம்!*

*எப்படியோ சென்று வந்தவர்களின் எழுத்துக்களைப்பார்க்கும் போது அரச படையினர் தாம் சொல்லவிரும்பிய செய்தியை தொடர்பு சாதனங்கள் மூலமாக சொல்வதற்காகவே அழைத்துச் சென்றுவந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் காட்ட விரும்பிய இடங்களை மட்டுமே காட்டியுள்ளார்கள் என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.*

*கிளாலிக் கடல் ஏரியின் இறங்குதுறையை இராணுவம் கைப்பற்றியது முதல் யாழ் அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகள் சிகிச்சை பெறுவது வரையான இந்த தொடர்பு சாதனவியலாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் எவற்றிலும் அண்மைக்காலமாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ள தகவல்களை விட மேலதிகமாக எதுவும் இருக்கவில்லை.*

*அங்குள்ள மக்கள் இப்போது புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக பாதுகாப்பாகவும் சந்தோஷமாகவும் உணர்கிறார்கள், அவர்களுக்குள்ள இன்றைய ஒரேபிரச்சினை உணவுப்பிரச்சினை, இராணுவத்தினர் அங்குள்ள மக்களுடன் நன்றாக நடந்து கொள்கிறார்கள்....அரசாங்கம் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விநியோகிப்பதில் மிகவும் அக்கறையாக உள்ளது.... போன்ற தகவல்களை எழுதுவதற்காக உண்மையில் ஒரு தொடர்பு சாதனவியலாளர் குடாநாட்டுக்கு போயிருக்கவே தேவையில்லை. அங்குள்ள மக்களின் துயரங்கள் அவர்களின் மனோ நிலை என்பவை பற்றி அங்கு போய்த்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமும் இல்லை.*

*அரச படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகட்கும் அப்பால் சென்று மக்களுடன் உரையாடும் வாய்ப்பு இல்லை, அப்படிவாய்ப்பு கிடைத்தாலும் அங்கு கண்ட எல்லாவற்றையும் இங்கு வந்து சொல்லவும் முடியாமல் தணிக்கை அமுலில் இருக்கிறது.*

*இந்தநிலையில் இத்தகைய பயணங்கள் அரசாங்கத்தின் பிரச்சாரத்திற்கு உதவி சேர்ப்பதாக மட்டுமே அமையமுடியும் என்பதில் ஐயமில்லை. உண்மையில் இங்கிருந்து சென்றிருந்த ஒன்றிரண்டு தொடர்பு சாதனவியலாளர்களைத் தவிர, பெரும்பாலானவர்களுக்கு இதுவுவே நோக்கமாகவும் இருந்துள்ளது. இன்னும் சரியாகச் சொல்வதானால், அரசாங்கத்தை விட அதிகமாகவே பாதுகாப்பு படையினரை சாதனையாளராக புகழ்வதிலும் புலிகளை அங்குள்ள மக்கள் வெறுத்து ஒதுக்கி விட்டதாகக் காட்டுவதிலும் மிகவும் அக்கறையாக இருந்திருக்கிறார்கள். இந்த அக்கறைகள் பல யதார்த்தங்களைப் பார்க்க முடியாதபடிக்கு இவர்களை குருடர்களாக்கியும் விட்டுள்ளது.*

*விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை நோக்கிச் சென்றுள்ள மக்களிடையே அரச படையினரால் தமது பிள்ளைகள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்ற மனக்குமுறல் இருப்பது பற்றி ஓரிரு பத்திரிகைகள் எழுதியிருந்தன. அங்கு புலிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களில் ஒருசிலர் கொழும்பு நோக்கி கொண்டு வரப்பட்டுள்ளதும், பூசா முகாம் இவர்களை தடுத்து வைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ளதும், இந்த நடவடிக்கையின் அடுத்தகட்ட வளர்ச்சிகள். எமது* ***தொடர்பு சாதனவியலாளர்கள் பெரும்பாலானோரின் எழுத்துக்களில், வெல்லப்பட்ட மக்கள் மத்தியில் சென்று, அவர்கள் மீது அனுதாபம் காட்டும் வெற்றிகொண்ட அணியைச் சேர்ந்த ஒருவரின் மனோநிலையையே காணமுடிகிறது.***

*அரசாங்கத்தின் பிற நடவடிக்கை குறித்து தீவிர விமர்சனங்கள் இருந்த போதும், யாழ் குடாநாடு மீதான அரசாங்கத்தின் வெற்றி குறித்து ஒரு வித பெருமிதமே இங்குள்ள, குறிப்பாக சிங்கள ஆங்கில செய்தியாளர்களிடம் காணப்படுகிறது.*

*இதனால்தான் இவர்கள் சுதந்திரமாக யாழ்ப்பாணம் போகவும் செய்தி சேகரிக்கவும் தமக்கு வாய்ப்பு வேண்டும் என்பது குறித்தோ அல்லது செய்திகளை தணிக்கை இன்றி எழுதவிட வேண்டும் என்பது குறித்தோ அவ்வளவு அக்கறைக்காட்டுவதாகத் தெரியவில்லை. இன்னும் சரியாகச் சொல்லுவதானால், தமது அரசியல் முடிவுகட்கு அல்லது விருப்பங்களுக்கு ஆதாரம் தேடும் நபர்களாகவே இவர்களது செயற்பாடுகள் அமைந்திருப்பதாகத் தெரிகிறது.*

*செய்தி தொடர்பாளர்கள் நிலைமைகளை மக்களுக்கு சொல்பவர்கள். அவர்கள் தமது அரசியல் முற்சாய்வுகட்காக உண்மைகளை மறைத்து விடக்கூடாது. ஆனால், துரதிருஷ்டவசமாக கடந்த ஒரு தசாப்தமாக இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட விடயத்தில் தொடர்பு சாதனவியலாளர்களிடையேயான தொழில் சார்ந்த ஒழுக்கவியல் அரசியல் சார்புகட்கு கீழ்ப்படுத்தப்பட்டுவிடும் போக்கே வளர்ந்து வந்திருக்கிறது.*

*அது இம்முறை பயணத்திலும் தெளிவாகத் தெரிகிறது.*

*யாழ் குடாநாட்டில் புலிகள் அதிகாரத்தில் இருந்தபோதும் கூட அங்குள்ள பத்திரிகையாளர்களிடம் இத்தகைய ஒரு போக்கே நிலவியது.*

*இது தொடர்பு சாதனவியலாளர்களின் நம்பகத்தன்மைக்கு பாதகமானது.*

*யாழ் நிலைபற்றி இங்கிருந்து அரச படையினால் அழைத்து செல்லப்பட்டவர்கள் தரும் செய்திகள் இந்த விதத்தில் மக்களின் நம்பகத்தன்மையையே இழந்து விடக்கூடிய வாய்ப்பு உண்டு.*

*ஏனென்றால், சாட்சிக்காரனின் வாக்குமூலத்தை எந்த நீதிபதியும் கண்மூடிக்கொண்டு ஏற்றுக்கொண்டு விடுவதில்லை.*

*வேலிக்கு ஓணான் சாட்சி என்பார்களே, அப்படி.*

*எனவே பொது சன தொடர்பு சாதனவியலாளர்கள் மக்கள் என்ற நீதிபதிமுன் சாட்சிகாரர்களாக இருக்கும் போக்கை கைவிட வேண்டும்.*

*யதார்த்தத்தை கைவிட்டு அரசியல்வாதிகளின் ஏஜெண்டுகளாகி மக்களைப் பொய்மை உலகிற்கு அழைத்து செல்வதை விட்டுவிட்டு உண்மைகளைத் தெரிவிக்க முன்வர வேண்டும்.*

*உண்களைத் தெரிவிக்க அனுமதிக்குமாறு கோரவேண்டும். தணிக்கையை நீக்கும்படி அரசாங்கத்துடன் போரிட வேண்டும்.*

*ஏனென்றால், உண்மை - அது ஒன்று தான் தொடர்பு சாதனவியலாளர்களின் நீண்ட காலநண்பன்!*

திருத்தம்:

சென்ற இதழ் ஆசிரியர் தலையங்கத்தின் இரண்டாவது பந்தியில் "ஏற்கெனவே நவாலித் தேவாலயத்தாக்குதலின் போது அங்கு மக்கள் கொல்லப்படவேயில்லையென்றும், நாகர் கோவிலில் கொல்லப்பட்டவர்கள் புலிகளே என்றும் வெளிவந்த அரசதரப்பு செய்திகளை மறுத்து செய்தி வெளியிட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை...." என்று இருந்திருக்கவேண்டிய து தவறுதலாக "வெளிவந்த அரசதரப்பு செய்திகளை மறுத்து" என்ற வரி இன்றி வெளிவந்து விட்டது. இதனால், ஏற்பட்டிருக்ககூடிய அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# நெடுந்தீவு: இருண்ட தீவு

அரசினால்விடுவிக்கப்பட்டபிரதேசமாகக் கூறப்படும் நெடுந்தீவில் மக்கள் பட்டினியினாலும் நோயினாலும் மரணத்தினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 35 சதுர மைல் பரப்பளவைக்கொண்டதும் 4000க்கு மேற்பட்ட (சிறுவர் வயோதிபர் உட்பட) மக்கள் தொகையைக் கொண்டிருப்பதும் குடாநாட்டில்இருந்து கடல் பரப்பால் பிரிக்கப்பட்டிருப்பதுமாகிய நெடுந்தீவுஇன்று தபால், தந்தி, போக்குவரத்து, உணவு, மருத்துவ வசதிகள் எதுவுமே அற்ற பிரதேச மாகக் காணப்படுகிறது. இலங்கையின் எந்தப் பகுதியை நோக்கினும் நெடுந்தீவு மக்கள் தனித்தவர்களாகவும், வேறுபகுதிகளுடன் தொடர்பு அற்றவர்களாகவும் 20ம் நூற்றாண்டிலும் கூட இருண்டதோர் உலகத்துள்வாழ்பவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

90 டிச.25ம்திகதியிலிருந்து நெடுந்தீவு கடற்படையினதும் ஈ.பி.டி.பி.யினதும் கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் ஏனைய தீவுகளில் இராணுவமும் கடற்படையினரும் ஈ.பி.டி.பியினரும் சேர்ந்து நிர்வாகங்களை மேற்கொண்டாலும் நெடுந்தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பியினர் மாத்திரமே நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களது போக்குவரத்து, உணவு போன்றன யாவும் ஈ.பி.டி.பி. அனுசரணையுடன் அவர்களது நேரடி கட்டுப்பாட்டின் மூலமே நடைபெற்று வந்தது. இவர்களது போக்குவரத்து காங்கேசன்துறையூடாக கப்பல் சேவை நடைபெற்றபோது கூட ஓரளவு கஷ்டங்களுடன் நடைபெற்று வந்தது. திருகோணமலையிலிருந்து சென்ற 'ஐரிஸ்மோனா' கப்பல் பருத்தித்துறை கடலில் வைத்து புலிகளால் பொதுமக்களுடன் கடத்தப்பட்டதனையடுத்து நெடுந்தீவு மக்கட்கு உணவு, போக்குவரத்து ஏனைய தேவைகட்கு இருந்த ஒரேயொரு பாதையும்கூட மூடப்பட்டு விட்டது. இதன்பின்னர் நெடுந்தீவு மக்கட்கு எந்தவிதமான உணவுப் பொருட்களோ அல்லது மருத்துவ வசதிகளோ கிடைக்கவில்லை. எனவே அரிசி, மா, பருப்பு போன்ற சில அவசிய உணவுப் பொருட்கள் கூட எடுத்துச் செல்லமுடிவதில்லை. எனவே அரசாங்கத்தாலோ அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களாலோ எந்த ஒரு உதவியும் இம்மக்களுக்கு வழங்கப்படவில்லை.

பொதுத்தேர்தலுக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் பின்னர் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றிருந்த நெடுந்தீவு மக்களில்கணிசமான தொகையினர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியிருந்தனர். தீவுப்பகுதியை விடுவித்துவிட்டோம். எமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து விட்டோம் என்று தம்பட்டம் அடிக்கும் அரசும் கூட புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவு போன்ற தீவுக்கூட்டங்களில் வசிக்கும்மக்களுக்கு இராணுவம்மூலமும் கடற்படையின்மூலமும் உணவு அளித்து வருகின்றது. ஆனால், கடற்படை, இராணுவம் தவிர்ந்த ஈ.பி.டி.பி. யின் தனியான கட்டுப்பாட்டில் நெடுந்தீவு இருப்பதால் அங்கு இவர்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படுவதில்லை. மேலும் புலிகள் தீவுப் பகுதியில்கடந்த வருட இறுதியிலும்இவ் வருட ஆரம்பத்திலுமாக இரண்டுதடவைகள் நெடுந்தீவிலிருந்த ஈ.பி.டி.பியினர் மீது தாக்குதல் நடத்தியதால் ஈ.பி.டி.பியினரும் இத்தீவு மக்கள் மீது மிகவும் கோபமும் வெறுப்பும் உடையவர்களாகவே இருக்கின்றனர். இவர்களது துன்பநிலையோ, துயரங்களோ பசி, பட்டினிபோன்றவையோ கவனத்தில் எடுக்கப்படவில்லை. மேலும் தாக்குதல் நடத்துவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னால்நெடுந்தீவுப்பகுதிக்குப்புலிகள் வந்து ஒளிந்திருக்கவேண்டும் என்றும் அவர்கள் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாலேயே இச்செயல் நடந்திருக்கவேண்டும் என்பதும் அங்குள்ள ஈ.பி.டி.பியினரது நிலைப்பாடாகும்.

அதுதவிர சுமார் 40க்கு உட்பட்ட ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களை புலிகள் கடத்திச் சென்றிருக்கிறார்கள் என்றும் அம்மக்கள் அபிப்பிராயம் கூறுகின்றார்கள்.

பாராளுமன்ற பொதுத்தேர்தலின்போது "கடலில் வாழும் மீனைப்போல அன்புக் கடலில் வாழ்ந்தவர் நாங்கள் ." என்று பிரசுரம் ஒட்டிய ஈ.பி.டி.பியினர் இப்போது பாராளுமன்றத்திலோ அல்லது ஏதாவது சர்வதேச நிவாரண பொது அமைப்புக்களுடனோ கூட இவைபற்றி வாய்திறவாது மௌனமாய் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. தீவுப்பகுதி மக்களது பிரயாணக் கப்பலைக்கடத்திய தன் மூலம் தீவுப்பகுதி மக்களைப் பற்றி புலிகள் நினைப்பதை விட தமது இராணுவ மற்றும் அரசியல் தந்திரோபாயங்களையும் தங்களது பலத்தையும் நிரூபிப்பதிலேயே அக்கறையாக இருக்கிறார்கள். இவ்வகையில் நியாயப் படுத்தமுடியாத ஓர் மனிதாபிமானமற்ற செயலையே புலிகளும் தீவுப்பகுதி மக்களுக்கு செய்திருக்கிறார்கள். இன்று வரை யாழ். மட்டக்களப்பு, திருமலை, வன்னிப் பகுதி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். உணவு அனுப்புங்கள், மருந்து அனுப்புங்கள் என்று பத்திரிகைகளில் கூச்சல் போடுபவர்கள்கூட இதுவரை தீவுப்பகுதி மக்களது அன்றாட அத்தியாவசிய தேவைகளையும் அனுபவிக்கும் துன்பங்களையும் மறந்தது மட்டுமல்ல மறைத்தும் விடுகின்றனர். விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்ற நிலையைக் காட்டி செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யூ.என்.எச்.சீ.ஆர் போன்ற வேறு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கூட இங்கு உதவிகளை வழங்குவதில்லை.

***என்.நீற்றா***
***10ம் வட்டாரம்***
***நெடுந்தீவு***

# மட்டக்களப்பு கல்வித்திணைக்களம்:
## இடமாற்றம் வழங்குவதில் சாதனை!

மட்டக்களப்பு நகரில் கல்வித்திணைக்கள இடமாற்றங்களில் அநீதியும் அரசியல்தலையீடும்இருப்பதாக தெரிய வருகிறது. திணைக்கள உயர் அதிகாரிகளின் உறவினர்கள் நகர்ப் பகுதிகளிலேயே நியமிக்கப்பட்டு ஏனையவர்கள் அரசியல், தனிப்பட்ட விவகாரங்களால் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பழிவாங்கப்படுகிறார்கள் என குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறது.

அண்மையில் புஸ்பவதி என்ற பட்டதாரி ஆசிரியை மூன்று வாரங்களுள் மூன்று இடங்களுக்கு களவாஞ்சிக்குடி பிரதிப் பணிப்பாளரால் மாற்றப்பட்டிருக்கிறார். ஒந்தாச்சிமடம், சித்திவினாயக வித்தியாலயத்திலிருந்து மகிழூர்சரஸ்வதி வித்தியாலயத்திற்கும், அதிலிருந்து கோட்டைக்கல்லாறு மெ.மி.த.க. பாடசாலைக்கும் பின்பு அதுவும் ரத்துச் செய்யப்பட்டு மீண்டும் சரஸ்வதி வித்தியாலயத்திற்குமாக இடமாற்றப் பட்டிருக்கிறார். இந்த இடமாற்றத்தால் குறிப்பிட்ட ஆசிரியை தோற்றவிருந்த பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பரீட்சை தவறவிடப்பட்டுள்ளது. இவ்விட மாற்றவிடயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாகாணக்கல்விப் பணிப்பாளர்களின் அறிவுறுத்தல்களை மீறியும் நடந்துள்ளார்.

தனது குடும்பம் கடந்த தேர்தலின் போது ஆளும் பொ.ஜ.ஐ.முன்னணிக்கு ஆதரவளித்ததனாலேயே த.வி.கூட்டணி எம்.பி.ஒருவராலும், பதவியின் நீடித்த இருப்புக்காய் எம்.பியின் காலைச் சுற்றியிருக்கும் பிரதிகல்விப் பணிப்பாளர், அதிபர் ஆகியோராலுமே இந்த இடமாற்ற பழிவாங்கல் நிகழ்வதாக ஆசிரியர்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு மாத்திரமின்றி இன்னும் பல ஆசிரியர்களுக்கும் தேர்தல் காலங்களில் குறிப்பிட்ட உறுப்பினர்களுக்கு எதிராக வேலைசெய்த குற்றச்சாட்டின் பெயரில் பந்தாட்ட இடமாற்றம் வழங்கப்படுகிறது. களவாஞ்சிக்குடி பிரதேச சபைப் பணிப்பாளர் மீது இன்னொரு குற்றச் சாட்டும் நிலவுகிறது. அதாவது இவர் அலுவலக நேரங்களிலும் மதுபோதையிலேயே காணப்படுகிறார் என்பதாகும். எனினும்இவர் பற்றியிருக்கும்எம்.பியின் உபயத்தால் இவர் கண்டு கொள்ளப் படுவதில்லை.

குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் கல்வித் திணைக்கள அலுவலர்களுடனான நடைமுறை வித்தியாசமானதாகவே உள்ளது. குறிப்பிட்ட ஒரு மாதத்தில் கல்வியதிகாரிகள், அதிபர்கள் அனைவரையும் சந்திக்க வேண்டுமாம்.

மட்டக்களப்பு மாவட்ட கல்வித் திணைக்களத்தில் இன்னொரு துச்சாதன பணிப்பாளர் இருப்பதாகவும் அறிய முடிகிறது. இவர் கல்வித்திணைக்கள பெண் ஊழியர்களையும், அழகிய ஆசிரியைகளையும் கொழும்புக்கு அடிக்கடி அழைத்துச் செல்வதாகவும் பேசப்படுகிறது.

இந்த இலட்சணத்தில் தான் மட்டக்களப்பு மாவட்ட கல்வித்திணைக்களம் இயங்கிக் கொண்டிருகிறது.

***தகவல்: மாஸ்டர் உமாகாந்***


மலையகத்
தமிழாராய்ச்சி
மாநாடு
மே-25,26,27
**கண்டி**
கருத்துரைகள்
மலையகம் ஒரு பன்முக
அறிமுகம்
பேராசிரியர் சிவத்தம்பி

ஜூன் முதல்வாரம்
**மாத்தளை**
மலையகத் தமிழரின்
பண்பாட்டுப் பேறு

ஜூன் நடுப்பகுதி
**நாவலப்பிட்டி**
மலையக இலக்கியப்
பண்பாடு

ஜூலை முதல் வாரம்
**ஹட்டன்**
மலையக கலை
இலக்கியமும்பிரதேச
வேறுபாடுகளும்

தொடர்புகளுக்கு:
டி.வி.மாரிமுத்து
தலைவர்
செயற்பாட்டுக்குழு
த.பெ.இல.132
கச்சேரி
கண்டி


பிரதம ஆசிரியர் : சேரன், எல்லாத் தொடர்புகட்கும் : [illegible] பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

960515